மன்றம்

ஆசிரியர்:
இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

15 – 6 – 56

★

அணு 4

★



களிருமுறை

மனச்சான்றுக்கு மாறாகப் போகாமை

1941-ஆம் ஆண்டில், இராசா சர். அண்ணாமலைச் செட்டியாரின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழா, மிகப் பெருஞ் செலவில், மிக ஆடம்பரமான முறையில் செட்டி நாட்டிலும், அண்ணாமலை நகரிலும் கொண்டாடப்பட்டது. இரண்டு இடங்களிலும் இயல், இசை, நாடகம், நடனம் போன்ற பல்வேறு அரங்கங்களும், 'தான தருமங்'களும் நடைபெற்றன.

'தான தருமங்'கள் எல்லாம் பெரும்பாலும் பார்ப்பனர்க்கே வழங்கப்பட்டன. அறுபதாம் ஆண்டு நிறைவைக் குறிக்கும் அறிகுறியாக அறுபது பார்ப்பனர்களுக்கு அறுபது வீடுகள், அறுபது அடுக்கு, வீட்டுச் சாமான்கள், அறுபது அம்மி ஆட்டுக்கல்கள், அறுபது பசுமாடுகள் போன்ற இன்னபிறவற்றை இராசா சர் தானமாக வழங்கினார்.

அப்பொழுது அறிஞர் அண்ணா அவர்கள் சென்னையில், "விடுதலை" இதழின் ஆசிரியராகப் பணியாற்றி வந்தார்கள். 'பார்ப்பனர்க்குத் தானம் கொடுத்தல்' என்னும் குருட்டு நம்பிக்கையான மூடப்பழக்க வழக்கத்தைக் கண்டிக்க வேண்டும் என்பதோடு, பார்ப்பனரல்லாதார் இயக்கத்தைச் சார்ந்த இராசா சர் சமூகத் துறையில் பார்ப்பனர்க்கு அடிமை போகும் தன்மையையும் வன்மையாகக் கண்டிக்க வேண்டும் என்ற எண்ணம் அறிஞர் அண்ணா அவர்கள் உள்ளத்தைக் குடைந்துகொண்டிருந்தது.

அண்ணாமலைச் செட்டியாரின் போக்கைக் கண்டித்து "விடுதலை"யில் தலையங்கம் ஒன்று தீட்டுவது என்று அண்ணா அவர்கள் எண்ணினார்கள். இந்த எண்ணத்தைப் பெரியார் அவர்களிடம் வெளியிட்டார்கள். பெரியார் அவர்களுக்கு அப்பொழுது அண்ணாமலைச் செட்டியாரிடத்தில் மிக்க சினம் பொங்கி எழுந்திருந்தது. இராசா சர் அறுபதாம் ஆண்டு நிறைவு விழாவை ஒட்டி யார் யாருக்கோ ஏராளமான நிதி வழங்கியதோடு, தேசீயப் பத்திரிகைகளுக்கு மிக்க நிதி வழங்கியிருந்தார்: "விடுதலை"க்கு ஏதொரு உதவியும் புரியவில்லை. இது பெரியாருக்கு மிக்க சினத்தை மூட்டியது. எனவே அண்ணாவின் எண்ணத்தைப் பெரியாரும் ஆதரித்தார். "யார் யாருக்கோ கொள்ளை கொள்ளையாகப் பணம் கொடுக்கிறான். பார்ப்பனர்க்கு இலட்சம் இலட்சமாக அள்ளித் தருகிறான். அவனை ஓயாமல் திட்டிக்கொண்டிருக்கிற தேசீயப் பத்திரிகைகளுக்கு நன்கொடை தந்திருக்கிறான். நாம் ஒரு பத்திரிகை வைத்து நடத்துகிறோம். தேவையான பொழுதெல்லாம் அவனுக்கு ஆதரவு தருகிறோம். அப்படி இருந்தும், நமது பத்திரிகையைக் கவனிக்காமல் இருக்கிறான் என்றால் என்ன நியாயம்? அவனது அடிமைத்தனத்தைக் கண்டித்து எழுதுங்கள்!" என்னும் கருத்துப் பட பெரியார் அவர்கள் அண்ணாவிடம் கூறினார்கள்.

அண்ணா அவர்களும் அண்ணாமலைச் செட்டியாரின் போக்கைக் காரசாரமாகக் கண்டித்துத் தலையங்கம் ஒன்று தீட்டினார்கள். தலையங்கம் தீட்டி அச்சேற்றுவதற்குள், எதிர்பாராதவிதமாக இராசா சர் அண்ணாமலைச் செட்டியாரிடமிருந்து "விடுதலைக்கு" என்று ரூ. 1000-நன்கொடை 'செக்' வந்து சேர்ந்தது. 'செக்கை' எடுத்துக்கொண்டு பெரியார் அவர்கள் அண்ணாவிடம் வந்து "பைத்தியக்காரன் இப்பொழுது ரூ. 1000-க்குச் 'செக்' அனுப்பி யிருக்கிறான். "கண்டித்துத் தலையங்கம் தீட்டிவிட்டீர்களா?" என்று கேட்டார். "முன்பே எழுதிக் கொடுத்துவிட்டேன். அச்சேறும் நிலையில் இருக்கிறது" என்று அண்ணா கூறினார்கள். "அந்தத் தலையங்கம் வேண்டாம். அவனைச் சாதாரணமாகப் பாராட்டி ஒரு தலையங்கம் எழுதுங்கள்" என்று பெரியார் அவர்கள் அண்ணாவிடம் கூறினார்கள். அண்ணா அவர்கள் "அவரது போக்கைக் கண்டித்து நான் எழுதிவிட்டேன். பாராட்டி எழுத என் மனம் இடந்தரவில்லை. வேண்டுமானால் நீங்கள் எழுதுங்கள்; நான் எழுதமாட்டேன்" என்று உறுதியாக விடையிறுத்து விட்டார்கள். பெரியார் அவர்கள் எவ்வளவோ வற்புறுத்தியும் அண்ணா அவர்கள் பாராட்டி எழுத மறுத்துவிட்டார்கள். பிறகு அண்ணாவின் தலையங்கத்தை நிறுத்திவிட்டுப் பெரியாரே ஒன்று எழுதி வெளியிட்டார்கள்.

மனச்சான்றுக்கு மாறாகப் போகக்கூடாது என்பதிலே அண்ணா அவர்கள் எவ்வளவு அழுத்தமாக இருந்து வருகிறார்கள் என்பதற்கு, இது சீரியதொரு எடுத்துக் காட்டாகும்.

மன்றம்
இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.
மலர் 5 ★ (15—6—56) ★ இதழ் 4

இலங்கைத் தமிழரின் அறப்போர்!

இலங்கைத் தீவில் தமிழர் வாழும் பகுதிகளில் தமிழ்மொழி உரிமைகளைக் காப்பாற்றுவதற்கான அறப்போர் முரசு ஒலிக்கத் துவங்கிவிட்டது! இலங்கைவாழ் தமிழர்கள் அறப்போர் முழக்கம் எழுப்பிக்கொண்டு அணி அணியாகத் திரள ஆரம்பித்துவிட்டனர்! "கோரிய உரிமைகளைப் பெறும்வரையில் ஓய மாட்டோம், போராடிக்கொண்டே இருப்போம்!" என்று தமிழ் வீரர்களும் வீராங்கனையரும் கொதித்தெழுந்துவிட்டனர்! அவர்கள் முயற்சி போற்றத்தக்கது! தொண்டு பாராட்டத்தக்கது!

இலங்கையில் புதிதாகத் தோன்றியிருக்கும் தோழர் பண்டாரநாயகாவின் அமைச்சர் அவை, தலைகொழுத்த தன்மையில் சிறுபான்மையோரின் உரிமைகளைப் புறக்கணித்தும், சிங்களத்தை மட்டுமே ஆட்சிமொழியாக ஆக்குவதன் மூலம் தமிழ்மொழிக்கு அநீதி இழைத்தும், சனநாயக முறையிலும் அறப்போர் மூலமும் தங்கள் நியாயமான கோரிக்கைகளை வற்புறுத்தும் தமிழர்கள்மீது அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்துவிட்டும், அறப்போர் வீரர்கள்மீது சிங்களக் காலிகளையும், கூலிகளையும், குண்டர்களையும் ஏவிவிட்டு வேடிக்கை பார்த்துக்கொண்டும் கொடுங்கோலாட்சி நடத்தத் தொடங்கியிருக்கிறது. தோழர் பண்டாரநாயகாவின் ஆட்சி அமைந்தவுடன், அது தமிழுக்கும், தமிழர்க்கும் நியாயம் வழங்கும் என்று உலகம் எதிர்பார்த்தது. ஆனால், அது மிக விரைவில் சிறுபான்மையரை அடக்கி ஒடுக்கும் கொடுங்கோலாட்சியாக மாறிவிட்டது.

இங்குள்ள இந்திமொழி வெறியர்களைப் போலவே அங்குள்ள சிங்கள மொழி வெறியர்களும் காணப்படுகிறார்கள். இலங்கைவாழ் தமிழர்கள் கோருவதெல்லாம், சிங்கள மொழியைப்போலவே தமிழும் அரசியல் மொழியாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டும், தமிழுக்கு சம அந்தஸ்து அளிக்கப்படவேண்டும், தமிழ்ப்பகுதிகளில் தமிழ்மொழி ஆட்சி செலுத்தவேண்டும், சிறுபான்மைத் தமிழரின் உரிமைகள் காப்பாற்றப்படவேண்டும் என்பவையேயாகும். சுவட்ஜர்லாந்து போன்ற சிறிய நாடுகள் மூன்று நான்கு மொழிகளை அரசியல் மொழிகளாகக் கொண்டு நல்ல முறையில் ஆட்சி நடத்திவரும் போது, இலங்கை ஏன் தமிழ்-சிங்களம் ஆகிய இருமொழிகளையும் ஆட்சி மொழிகளாகக் கொள்ளக்கூடாது? இதுவரையில் இரண்டும் சம அந்தஸ்தில் வைத்து எண்ணப்பட்டதைப் போலவே, இனியும் எண்ணப்படுவதற்கு எவ்வித நியாயமான தடையும் இருக்கமுடியாது. ஆனால் சிங்களவர்களிடையில் நியாயமற்ற முறையில் வளர்ந்திருக்கும் சிங்களமொழி வெறியுணர்ச்சி பெருந்தடையாக இருக்கிறது. சிங்களத் தலைவர்கள் இந்தவெறியுணர்ச்சிக்கு இடந்தந்திருக்கக்கூடாது. ஆனால் இரங்கத்தக்க முறையில் அவர்கள்தான் வளர்த்து வருகிறார்கள் என்று தெரியவருகிறது.

இலங்கை வாழ் தமிழர்கள் எவ்வளவோ சனநாயக முறைகளில் உணர்த்தியும்கூட, சிங்களவர் ஆட்சி சிறு பான்மையோரின் கோரிக்கைகளுக்கு மதிப்பு அளிக்காமல், சிங்கள மொழியைமட்டுமே ஆட்சிமொழியாக்கும் சட்டத்தைக்கொண்டு வந்துள்ளது. இந்தச் சட்டத்தைத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதைக் காட்டவும், தமிழர்களின் கோரிக்கைகளை உலகோர் அறியச்செய்யவும் இலங்கைவாழ் தமிழர்கள் ஜூன் திங்கள் 5-ஆம் நாள் பாராளுமன்ற மண்டபத்தின்முன் மறியல் செய்யும் அறப்போராட்டத்தில் ஈடுபட்டனர். அரசாங்கத்தின் அடக்குமுறைகளுக்கும், குண்டர்களின் தாக்குதல்களுக்கும் அறப்போர் வீரர்கள் ஆளானபோதிலும், அறப்போரின் நோக்கம் வெற்றியடைந்திருக்கிறது.

இந்த அறப்போர், தமிழர்கள் பெரும்பான்மையராக வாழும் தமிழ்ப் பகுதிகளைத் தனிநாடாக மாற்றும் முயற்சிக்கு இலங்கை வாழ் தமிழர்களை அழைத்துச் சென்றால், நாம் வியப்படைவதற்கில்லை. நிலைமை அவர்களை அந்த அளவுக்குத் துரத்துகிறது.

அறப்போரில் ஈடுபட்டுள்ள தலைவர்களையும், தொண்டர்களையும், ஆதரவு தரும் இலங்கைவாழ் பொதுமக்களையும் நாம் பாராட்டுகிறோம்! வாழ்த்துகிறோம்! வாழ்க அவர்தம் உள்ளம்! வளர்க அவர்தம் முயற்சி! வெல்க அவர்தம் தொண்டு!

கருத்துக் கதிர்

தென்னாட்டின் தோல் வளம்

"தென்னாட்டில் பதனிட்ட தோலுக்குக் குறைவில்லை. கையில் வெண்ணெய்யை வைத்துக்கொண்டு நெய்க்கு அழுவானேன்? தொழில் திறமையும் இருக்கிறது. பொறிகளின் நுட்பங்களை அறிந்துகொள்ள ஆர்வமும் இருக்கிறது. பொறிகளும் (இயந்திரங்களும்) சிக்கலானவையல்ல. பயிற்சி பெற்றால் செருப்புத்தைக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் தாங்களாகவே கூட்டுறவுச் சங்கம் அமைத்துக்கொண்டு அந்தப் பொறிகளைச் சொந்தமாக வாங்கி வைத்துக்கொண்டு தொழிலை நடத்துவதும் எளிதில் நடக்கக் கூடியதேயாகும். நல்ல சாமானுக்குக் கிராக்கியிருக்கும் என்பதும் உறுதி."

—என்று மிதியடி செய்வதில் பல துறைகளில் பயிற்சியளிக்க சென்னை வந்திருக்கும்செர்மனி வல்லுநர் தோழர் எரிக்போரட் செய்திநிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

* * *

பண்டிதரின் பகுத்தறிவுக் கொள்கைப்பரப்பல்

"கௌதம புத்தர் கடவுளோ அல்லது தேவரோ அல்லது தேவதையோ அல்ல; அவர் சாதாரணமான ஒரு மனிதரே. இன்னமும் பெருவாரியான மக்களைச் சிதைத்துவரும் மூடநம்பிக்கை, போலி பிரார்த்தனை, சாதிப் பிரிவு ஆகியவற்றையும் புத்தர் வன்மையாக எதிர்த்தார்...மக்களது மனதையும், இருதயத்தையும் விலங்கிடும் எல்லா மதநம்பிக்கைகளையும், மூடநம்பிக்கைகளையும் அவர் கண்டித்தார். கொள்கைகளை வாயளவில் பேசி மத வெறுப்புப்பாராட்டும் பழைய வழக்கத்திலிருந்து மீளவே புத்தர் போதித்த வாழ்க்கைக் கொள்கைகளை நாம் புரிந்துகொள்ள வேண்டும்....சூரிய கிரகணம், சந்திர கிரகணம் பற்றி இந்தியாவில் நிலவும் மூடநம்பிக்கைகள் அறவே ஒழிக்கப்படவேண்டும். கிரகணத்தின்போது ஆறுகளில் குளித்து உண்ணா நோன்பு இருப்பதும் நல்லதுதான். ஆனால் இவை கிரகணம் காரணமாக மேற்கொள்ளப்படுவது முற்றிலும் தவறு. மக்கள் மனதில் தோன்றும் பிரேமையே இதற்குக்காரணம். கிரகணம் ஏற்படும்போதெல்லாம் இராகு சந்திரனை விழுங்க முயல்வதாக மனிதன் கற்பனை செய்துகொள்கிறான். இந்த முட்டாள்தனமான கற்பனையை ஏற்க நாம் மூடர்களா? பூமியின் நிழல் சந்திரன்மீது விழுவதால் கிரகணம் ஏற்படுகிறது. உண்ணாநோன்பு, குளிப்பது அல்லது ஜபமாலைகளை உருட்டுவது, தம்பட்டம் அடிப்பது இவற்றால் கிரகணம் தீர்ந்துவிடாது. சந்திரன்மீது விழும் பூமியின் நிழல் விலகின பிறகுதான் கிரகணம் தீரும். மதத்தின் பேரால் ஏற்பட்ட இந்த மூடநம்பிக்கைகளை எதிர்க்கவே புத்தர் தோன்றினார்.....கோவிலுக்குச் செல்வதன் மூலம் ஒருவர் நாட்டுக்கும், சமூகத்திற்கும் செய்ய வேண்டிய கடமை தீர்ந்துவிட்டதாகக் கருதலாகாது. நாம் நம் வாழ்க்கையை எவ்வாறு உருவாக்குகிறோம், எந்த வழியைப் பின்பற்றுகிறோம் என்பதே முக்கியம். எதையும் மக்கள் கண்மூடித்தனமாக நம்பக்கூடாது. தங்கள் அனுபவத்தை ஒட்டி அதைச் சோதிக்க வேண்டும். இதைத்தான் தற்காலத்தில் 'அறிவியல்' என்று அழைக்கிறோம். இது ஆராய்ச்சிக்கூடங்களுடன் தொடர்புகொண்ட அறிவியலல்ல; வாழ்க்கை என்ற அனுபவ அறிவை ஒட்டிய அறிவியலாகும்"

—என்று இந்திய முதலமைச்சர் பண்டித நேரு டில்லியில் 24-5-56இல் நடைபெற்ற புத்தர் பிறந்தநாள் விழாவில் பேசும்போது குறிப்பிட்டுள்ளார்.

* * *

சர்க்காரின் முறையற்ற தலையீடு

"வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் சர்க்கார் தலையிடுவது மிக வருந்தத்தக்கதாகும். சில நோய்களுக்குக் கூட மருந்து சிபாரிசு செய்கின்றனர். சர்க்கார் எந்த மருந்து சொன்னாலும் மக்கள் அதை ஏற்க வேண்டுமென்று நினைக்கின்றனர். கல்வியிலும் சர்க்கார் கைவைக்கின்றனர். ஒருவன் தன் விருப்பப்படி குழந்தைகளுக்குக் கல்வி பயிற்றுவிப்பதற்கில்லை."

—என்று 24—5—56-இல் குன்னம் சிற்றூரில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் தோழர் வினோபாவே கூறியுள்ளார்.

* * *

வளர்த்த கடா மார்பில் பாய்கிறது

"இங்குள்ள பலாத்கார சக்திகளுடன் சேர்ந்து இந்தியா இந்நாட்டிலும் வெளிநாட்டிலும், தான் பெற்றிருக்கும் சிறப்பு, மதிப்பு

இவற்றை யெல்லாம் இழக்க வேண்டுமா? பலாத்காரத்தை அடக்குவதில் தேர்தலில் காங்கிரசுக்குத் தோல்வி ஏற்படும் என்ற அச்சம் நமக்குத் தடையாக இருக்க விடுவதா? தேர்தலில் தோற்றால் எனக்கு அக்கரையில்லை. தேர்தல் எக்கேடு கெட்டுப் போனாலும் போகட்டும். ஆனால் நாம் மானிடரைப்போல் மனிதத் தன்மையுடன் நடப்போமாக!......... காங்கிரசு வாழ்ந்தாலும் சரி வாழாவிட்டாலும் சரி இந்த பலாத்கார மனோபாவத்தை நாம் வளரவிட முடியாது. இதனை நாம் தடுத்துத் துடைத்தெறிய வேண்டும். அண்மையில் பஞ்சாப், கரக்பூர், கால்கா இவற்றில் நடந்த பலாத்கார சம்பவங்களைப் பாருங்கள். பஞ்சாப் கிளர்ச்சி மிக்க முட்டாள்தனமான கிளர்ச்சியாகும்......பலாத்காரத்தை ஒழிப்பதற்கான முயற்சியில் காங்கிரசு ஆளும் பதவியிலிருந்து தூரத்தப்பட்டாலும் நல்லதுதான். காங்கிரசு நெடுநாட்களாக அதிகார பதவியிலிருக்கிறது. அது அலுத்துப் போய்விட்டது...பிறர் மனோபாவங்களைப் புரிந்து கொள்ளுவதே காங்கிரசின் இலட்சியமாகும். நாம் சிறிது தியாகம் செய்ய வேண்டியிருப்பினும் இந்த இலட்சியப் படியே நடப்போமாக! பலாத்காரத்தை எல்லா ரூபத்திலும் கைவிடுவோமாக!"

—என்று பண்டிதநேரு 2—6—56 இல் பம்பாயில் நடைபெற்ற அ. இ. கா. கமிட்டிக் கூட்டத்தில் பேசும்போது, காங்கிரசே நாட்டில் வளர்த்துவிட்ட பலாத்காரக் கொள்கை, காங்கிரசையே திருப்பித் தாக்குவதைக் கண்டு புலம்பியுள்ளார்.

* * *

இந்தியாவின் தேசிய மொழிகள்

"இந்தி இந்தியாவின் அரசியல் மொழியாகும். அது ஒன்றுதான் தேசிய மொழி என்பதல்ல. நாட்டில் 14 தேசீய மொழிகள் இருக்கின்றன. தகுதியில் எல்லாம் சரிசமானமான நிலையை யுடையனவேயாகும்."

—என்று பண்டித நேரு 3—5—56 இல் பம்பாயில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரசுக் கமிட்டிக் கூட்டத்தில் பேசும்போது தெளிவுபடுத்தியுள்ளார்.

* * *

வியப்புக்குரிய சட்டம்

"உலகின் எந்த நாட்டிலும் எந்தச் சட்டமும் நிறைவானது அல்ல. நீதியை ஒட்டியும் இருப்பதில்லை. நமது குற்றச்சட்டப்படி 'கலப்படம் செய்பவனை சிறைக்கு அனுப்ப வேண்டும்; ஆனால் கலப்படம் செய்ய உதவும் பெண்ணை ஒன்றும் செய்ய முடியாது. பணக்கார மனைவி கணவன் ஏழையானாலும் அவனிடமிருந்து சீவனாம்சம் பெற முடியும்; ஆனால் ஏழைக் கணவனுக்குப் பணக்கார மனைவியிடமிருந்துகூட சீவனாம்சம் கிடைக்காது. பட்டினியால் இறந்த ஒருவன் பிண விசாரணை, பிணப் பரிசோதனைக்காக ரூ. 15 வரை செலவிடப்படலாம். ஆனால் அவன் உயிருடன் இருக்கையில் ஒரு சாப்பாடு சாப்பிட எட்டணா கொடுக்க முடியாது. சென்னை நிலத்தில் ஒரு முஸ்லிம் ஒரேகாலத்தில் நான்கு மனைவிகளைத் திருமணம் செய்து கொள்ளலாம். ஒரு இந்துவோ அல்லது கிருத்தவனோ அப்படிச் செய்தால் சிறைத்தண்டனைதான் கிடைக்கும்"

—என்று ஈரோடு வக்கீல் சங்கக் கூட்டத்தில் பேசும்போது நீதிபதி ஏ. எஸ். பி. அய்யர் குறிப்பிட்டுள்ளார்,

* * *

நேருவின் சங்கடம்

"நான் பல நாடுகளின் தலைவர்களைக் கண்டு பேசி வர மேனாடுகளுக்குப் போகவிருக்கிறேன். நான் இடங்களைப் பார்ப்பதற்காக உல்லாசப் பிரயாணம் போகவில்லை. பெய்ரட்டிலிருந்து வாஷிங்டன் வரையிலுள்ள இதர நாடுகளின் எண்ணங்களைப் புரிந்துகொண்டு வருவதற்காகப் போகிறேன்.........நம் நாட்டில் குழப்பங்களும், பலாத்காரச் செயல்களும் நடக்கையில் நான் எந்த முகத்துடன் அயல்நாடு செல்வேன்? நான் எந்தச் செய்தியை அவர்களுக்கு எடுத்துச் சொல்லுவேன?"

—என்று பண்டிதநேரு 3—6—56 இல் பம்பாயில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசியுள்ளார்.

* * *

யார் யாருக்கு எச்சரிக்கை செய்வது?

"அகில இந்திய காங்கிரசுக் கமிட்டிக்கூட்டத்தில் பண்டிதநேரு பலாத்கார முறைபற்றி எச்சரித்திருக்கிறார். நேரு சம்யுக்த மகாராட்டிரக் கிளர்ச்சியை மனதில் கொண்டுதான் பேசியுள்ளார். அப்படி அவர் கொண்டிருந்தால், அது மிக்க தவறாகும். ஏனெனில் இக் கிளர்ச்சி 1930, 1942 ஆகிய ஆண்டுகளில் நடந்த காங்கிரசுப் போராட்டங்களைவிட மிக நல்ல முறையில் அவ்வளவு பலாத்காரம் தலைகாட்டாமல் நடந்தேறியிருக்கிறது"

—என்று சம்யுக்த மகாராட்டிரசமிதியின் பொதுச்செயலாளரான தோழர் எஸ். எம். ஜோதி 3-6-56இல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசியுள்ளார்.

செய்திச்சுருள்

ஒளி வீசும் மூலிகைச் செடி

இராஞ்சி என்னுமிடத்திலிருந்து 20 மைல் தொலைவிலுள்ள ஒரு சிற்றூரில் சுமார் ஆறு அங்குல நீளமுள்ள மூலிகைச் செடியொன்று இருட்டில் ஒளி வீசிக்கொண்டிருக்கின்றது என்றும், பாஸ்பரஸ் மிகவாக கொண்டிருக்கும் செடியாக அது இருக்கின்றது என்றும் செய்தி ஒன்று கூறுகிறது.

* * *

இந்தியாவின் கால்நடைச் செல்வம்

இந்தியத் துணைக்கண்டத்தில் 1952—53 இல் மொத்தம் 15,50,99,000 கால்நடைகள் இருந்தன. அவற்றில் 4,98,48,000 பசுக்களாகும்; 2,18,42,000 எருமைகளாகும். ஆண்டு ஒன்றுக்கு மொத்தம் சுமார் 51,00,00,000 மணங்கு பால் உற்பத்தியாயிற்று, இந்தப் புள்ளி விவரத்தை இந்திய அரசியலார் உணவு-விவசாய அமைச்சர் அலுவலகத்தைச் சேர்ந்த பொருளாதார புள்ளி விவர டைரக்டர், நிலையம், அண்மையில் வெளியிட்டுள்ள இந்தியக் கால்நடைகள்பற்றிய புள்ளி விவர (1952—53) ஏடு தந்துள்ளது.

* * *

கருத்தடைக்கு நல்ல மாத்திரை

குடும்பக் கட்டுப்பாட்டுக்காகப் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ள 'நுரை மாத்திரை' யின் பயன்பற்றி ஆராய்ச்சி நடத்த சென்னை அரசியலார் திட்டம் ஒன்று தயாரித்துள்ளனர். இந்திய அரசியலாரின் உதவியோடு சென்னை அரசியலார் சோதனைகள் நடத்துவார்கள்.

குழந்தை உற்பத்தியைக் கட்டுப்படுத்தவும், ஒரு குழந்தைக்கும் மற்றொரு குழந்தைக்கும் இடையே மிகுதியான வயது வேற்றுமையிருக்கச் செய்வதற்கும் 'நுரை மாத்திரை' மிகவும் வெற்றிகரமானது, மலிவானது, தீங்கற்றது என்று கூறப்படுகிறது. சோதனைச் சாலை ஆராய்ச்சியில் அதன் பலன் நிரூபிக்கப்டுள்ளதாம்.

பெண்களுக்காக அயல்நாடுகளில் தயாரிக்கப்படும் இம்மாத்திரைகள் ஏற்கனவே கடைகளில் விற்கப்படுகின்றன. இம்மாதிரி மாத்திரைகள் நம் நாட்டிலேயே தயாரிக்கப்படுகின்றன. ஒரு மாத்திரையின் விலை ஒரு தம்பிடி அல்லது இரண்டு தம்பிடிதான் ஆகிறதாம்.

* * *

உருசியாவுக்குத் தென்னாட்டுக் காபி

ரூ. 40 இலட்சம் மதிப்புள்ள தென்னாட்டுக் காப்பிக் கொட்டையை மங்களூர் காப்பி கம்பெனிகள் உருசியாவுக்கு அனுப்பி வைத்துள்ளன. 6160 மூட்டைகளில் 500 டன் காப்பிக் கொட்டை உருசியாக் கப்பல் ஒன்றில் 15—6—56 இல் கொச்சித் துறைமுகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இந்தியாவிலிருந்து உருசியா காப்பிக்கொட்டை வாங்குவது இதுதான் முதல் தடவையாகும்.

* * *

மீன் வளம்

மீன் துறை மூலம் இந்தியத் துணைக் கண்டத்திற்கு ஆண்டுதோறும் சுமார் 27 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கிறது. சுமார் 3000 மைல் நீளமுள்ள கடற்கரைப் பகுதிகளில் பல வேறு வகையான சுமார் 75000 படகுகள் மீன் பிடிப்பு வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றன. சுமார் 7,50,000 மீனவர்கள் இத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். திராவிடத்தில் மட்டும் சுமார் $5\frac{1}{2}$ இலட்சம் மீனவர்கள் இருக்கிறார்கள். மீன் துறை மூலம் கிடைக்கும் வருமானத்தில் பெரும்பகுதி திராவிடத்திலிருந்துதான் கிடைக்கின்றது.

* * *

வடக்கு வளருகிறது

புதிதாக ஒரு எஃகு வார்ப்படத் தொழிற்சாலையை வடக்கிலேயே நிறுவ இந்தியப் பேரரசு முடிவு செய்துள்ளது. இரயில் எஞ்சின்களின் எஃகு வார்ப்பட உறுப்புக்களைத் தயாரிக்கும் பொருட்டு சித்தரஞ்சன் இரயில் எஞ்சின் தொழிற்சாலையில் ஒரு எஃகு வார்ப்பட பிரிவைத் துவங்குவதென இந்தியப் பேரரசு முடிவு செய்துள்ளது. இதற்கு வேண்டிய எஃகு உறுப்புக்கள் தற்போது அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றன. இந்த வார்ப்படத் தொழிற்சாலையை நிறுவுவதற்கு இந்திய அரசினர் அமெரிக்காவிலுள்ள பல 'எஞ்சினியரிங் கம்பெனி'களிடம் தகவல் கேட்டுள்ளனராம்.

வள்ளுவர் நகரில்

[சோழன்]

(சென்ற இதழ் தொடர்ச்சி)

வில்லுப்பாட்டுப்பாடிக்கொண்டிருந்த நகைச்சுவைமன்னர், திடீரென்று "மோட்டார்மன்னரும் வந்தாரையா ?" என்று பாடினர். இது மாநில மாநாட்டில் முதல் நாள். அதாவது 17ஆந்தேதி மாலை நடைபெற்றது. அன்று இவர் வில்லுப்பாட்டுக்கு எடுத்துக்கொண்டது, "புத்தர் வரலாறு!" என்பதாகும். பல்லக்கு, தேர், குதிரை, யானை மிகுந்த காலம் அது. அப்பொழுது மகதநாட்டு மன்னனே, காந்தார நாட்டு அரசனேவந்தான் என்றால், எடுத்துக்கொண்ட வரலாற்றுக்கு ஒட்டிவரும். இவர் திடீரென்று, "மோட்டார் மன்னர்" என்று புத்தரை அப்படியே விட்டுவிட்டு, மோட்டார் காலத்துக்கு வந்துவிட்டாரே என்று ஆச்சரியத்துடன் பார்த்தோம். மேடைக்குள் வழியை விலக்கிக்கொண்டு-பந்தலில் இரண்டு இலட்சம் மக்கள் என்றால் மேடையில் நானூறு ஐநூறு பேராவது இருக்கமாட்டார்களா ! அவர்களிடைபுகுந்து திரு ஜி.டி. நாயுடு அவர்கள் வந்தார்கள். அவரைப் பார்த்துத்தான் நகைச்சுவை மன்னர் வில்லில் ஒரு அடி கொடுத்தார்.

தோழர் ஜி. டி. நாயுடு அவர்கள் அண்ணாவின் பக்கத்தில் அமர்ந்து "மிகப் பெரிய கூட்டம்! மிகப் பெரிய கூட்டம்!" என்று ஆச்சரியப்பட்டுக்கொண்டார்.

"ஆமாம்!" என்றார் அண்ணா புன்னகையுடன்.

"எப்படித் தான் இவ்வளவு பெரிய கூட்டத்தைச் சமாளித்தீர்களோ ? இந்த அளவு கூட்டம் வெளியில், திருச்சி வீதிகளில், திருச்சி நோக்கி வரும் பாதைகளில் எங்கும் நிறைந்து இருக்கிறது. இவ்வளவு பெரிய கூட்டத்தை எப்படித்தான் கூட்டினீர்களோ !"

மாநாட்டுக்குள் இருந்தவர்களுக்குக் கூட்டத்தின் அளவு அதிகமாகத் தெரியவில்லை. வெளியிலிருந்து வருபவர்கள் தான் கூட்டத் [illegible] சென்றார்கள்.

மேடையில் முன்வரிசையில் சர்வகட்சிக் கூட்டணித் தலைவர்-தமிழ் நாட்டின் சிறந்த பண்பாளர் பி.டி. ராசன் அவர்களும், வீற்றிருந்தார்கள். அவர்கள் வந்ததை நான்கவனிக்கவில்லை. மாபெரும் கூட்டத்தைக் கண்ட மகிழ்ச்சியில் அவரும் இருந்தார்.

அடுத்தபடியாக, மூவலூர் மூதாட்டியார் அவர்களுக்கு அறிஞர் அண்ணா அவர்கள் பாராட்டுரைவழங்கி, கழகத்தினர் சார்பில் ஒரு வெள்ளிக கேடயமும் தந்தார்கள். மூதாட்டியாரைப் பாராட்டும்பொழுது அண்ணா அவர்கள் "தங்கள் கொள்கை பரவுவதை, தமதுகட்சி வளருவதை, அதற்காகப் பாடுபட்ட பலர் தம் வாழ்நாளில் காணக்கூடுவதில்லை. ஆனால் அம்மையாரின் கொள்கை, அவர்கள் செயலாற்றிய கழகம் வளர்ந்துள்ள காட்சியை அவர்களே நேரில் காணும் பேறு அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது!" என்றார். உண்மைதான். கொள்கையைத் தோற்றுவித்தவர்கள், இலட்சியத்துக்காகப் பாடுபட்டவர்கள், வெற்றியின் ஒளிக் கீறல்கள் தோன்றுவதற்குப் பலகாலம் முன்னதா

நல்லொளி வீசிடும்—

—வள்ளுவர் நகர்

"என்னால் பேசமுடியவில்லை"

களிப்புக்கடலில் கண்கலங்கும் நரைமூதாட்டி.

கவே மறைந்திருப்பார்கள். அவர்களுடைய மறைவுக்கு அரைநூற்றாண்டோ ஒரு நூற்றாண்டோ கழித்துதான், அவர்கள் தூவிய வித்துக்கள் இளஞ் செடியாகி, தளிர் தோன்றி, மலர் அரும்ப ஆரம்பித்திருக்கும். இலட்சியவாதிகள் கண்ட கனவுகள், பல தலைமுறைகளுக்குப் பின்தான் உலகம் காணும் நனவுகளாயின.

மூதாட்டியார் பேச்சைத் துவக்கும்பொழுதே பேரன்மார்களே! பேத்திமார்களே!" என்று ஆரம்பித்தார்கள். அந்த ஆரவாரம் - மகிழ்ச்சியின் மத்தியில் எப்படிப் பேசமுடியும்? களிப்பு கண்களில் துளிவிட, அம்மையார் உட்கார்ந்துவிட்டார்கள்.

"எப்படி மேடைக்காட்சி?" என்று தமிழ் ஐயா என்னைக்கேட்டார். கூட்டம் கலைந்து வெளியில் போய்க் கொண்டிருந்தது. நாங்கள் அந்த வெள்ளத்தில் அடிக்கப்பட்டு, கடைசியில் கரையில் பாதையில் ஏறினோம்.

"மேடையில் அவர்கள் ஒன்றாக அமர்ந்திருந்தது எப்படியிருந்தது?" தமிழ் ஐயா பக்கத்தில் விரைந்துவந்தபடி கேட்டார்,

"யாரைப் பற்றிச் சொல்கிறீர்கள்?"

"மேடையில் இருந்தவர்களைப் பற்றித்தான், அறிஞர் அண்ணா, பண்பாளர் பி. டி. இராசன், விஞ்ஞானச் சித்தர் நாயுடு, கழகத்தின் காவலர், திறப்பாளர் ஜி. பி. சோமசுந்தரம், வரவேற்பாளர் அம்பில், அடுத்து நடிப்பிசைப் புலவர் இராமசாமி, நாதசுரமன்னர் திருவாவடுதுரையார், நகைச்சுவைமன்னர் கிருட்டிணன், அவர்களுக்கு அடுத்து ஈரோடு இளவல் சம்பத்து, கலைஞர் கருணாநிதி. கவிஞர் கண்ணதாசன், உதவிச் செயலாளர் என்வி. என், கழகத்தின் முன்னணி வீரர்கள் - மதியழகன், மனோகரன், அன்பழகன், வில்லாளன், இளங்கோ, சிற்றரசு, டி. கே. சீனிவாசன், ஆசைத்தம்பி, அரங்கண்ணல், சண்முகம். இவர்களுடன் கருத்தும் கலையும் உறவாடுவதுபோல் அமர்ந்திருக்கும் புரட்சி நடிகர், இலட்சியநடிகர், நடிகமணிகள் - இவ்வளவுபேர்களை ஒருங்கே பார்க்கும்பொழுது - தமிழகத்தின் அழியாத பண்பு, கலை, இலக்கியம், இசை, மறுமலர்ச்சி, விஞ்ஞானம், எழுச்சி, இவைகளையெல்லாம் ஒருங்கே திரட்டிவைத்துப் பார்ப்பது போலிருந்தது. இது எப்படியிருந்ததென்றால்..." தமிழ் ஐயா சற்று நிறுத்தினார்.

"எப்படி இருந்தது?" என்பக்கத்தில் இருந்தவர் கேட்டார். அந்தக் கேள்வியைத்தான் தமிழ் ஐயாவும் எதிர்பார்த்தது.

"புறநானூற்றில் ஒருபாடல் வருகிறது!" என்று தமிழ் ஐயா உற்சாகத்துடன் ஆரம்பித்தார். ஏதாவது உயர்ந்ததாக ஒன்று காணப்பட்டால், அதற்கு இலக்கியத்தில் மேற்கோள் காட்டாவிட்டால், அவருக்குத் தூக்கம் வராது. ஆனால் அவர் சொன்ன பாடலும், கருத்தும் அழகாக இருந்தன. அங்கிருந்து நாங்கள் சேரவேண்டிய இடத்துக்கு இடையில் இருந்தநேரத்தையும், தூரத்தையும் அவரிடம் ஒப்படைத்தோம். அவர் சொன்ன புறநானூற்றுப் பாடல் - அப்பொழுது மிகச் சுலபமாக, மிகச்சுவையுடன் அவர் சொல்லிவிட்டார். எனக்கு முதலடியும், மத்தியில் ஒரு சொல்லும்தான் சரியாக ஞாபகத்தில் இருந்தன. இதை எழுதும்பொழுது, மறுபடியும் புறநானூற்றைப் புரட்டி, அந்தப்பாட்டை எடுத்தேன். அந்தப் பாடல் வருமாறு:

"பொன்னுந் துகிரும் முத்து மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய வாயினுந் தொடைபுணர்ந்து
அருவிலை நன்கல மமைக்குங் காலை
ஒருவழித் தோன்றியாங் கென்றுஞ் சான்றோர்
சான்றோர் பால ராய
சாலார் சாலார் பாலரா குபவே."

(துகிர் - பவளம், காமரு - விரும்பத்தக்க, தொடை-கோவை, நன்கலம்-நல்ல அணிகலம், பாலராய-பக்கத்தவராவர்.)

அந்தப் பாட்டுக்குப் பொருள். "பொன்னும் பவளமும், முத்தும், பெரியமலை தருகின்ற அரிய மணிகளும் ஒன்றற்கொன்று மிக நெடுந்தொலைவில் கிடைத்தாலும், உயர்ந்த மதிப்புடைய அணியைச் செய்ய விரும்புபவன் அவற்றையெல்லாம் ஒருங்கே திரட்டுவது போல, எப்பொழுதும் சான்றோர்கள், சான்றோர்கள் பக்கத்தில் தோன்றுகிறார்கள்."

மணி மகுடத்தையோ, மதிப்புயர்ந்த ஆபரணத்தையோ செய்யவிரும்புபவன் பொன்னையும், முத்தையும், நற்பவளத்தையும், நானுவித மாணிக்கப் பரல்களையும் சேர்க்கிறான். அவையெல்லாம் ஒருங்கே கிடைக்கின்றனவா? அல்ல. ஆழ்கடலில் முத்து கிடக்கிறது, மலைமேட்டில் மாணிக்கம் மறைந்திருக்கிறது. பாறைகளைத்தாண்டி பசும் பொன் இருக்கிறது, நெடுந்தூரத்திலிருந்தாலும் அரிய அணி அமைப்பதற்கு, அவை ஒன்று கூட வேண்டியிருக்கிறது. தமிழரின் அணி-இத்தகைய ஒப்புயர்வற்ற மணிகளால், அறிஞர்கள், பண்பாளர்கள், விஞ்ஞான மேதைகள், நாவலர்கள், நடமாடும் கருத்தின் கருவூலங்கள், கலைஞர்கள், இசைத்துறை மன்னர்கள், நாடக இளவரசர்கள், செயலாற்றும் செம்மல்கள் இவர்களெல்லாம் ஒன்றாகச் சேர்ந்ததால் தான் உயர்தர அணி கிடைத்துள்ளது.''

தமிழ் ஐயா விரித்துக்கூறினார். அவர் சொன்ன பாடலும், தந்தஉவமையும் கருத்துக்கு நல்விருந்தளித்தன. மேடைமட்டுமல்ல, மாநாட்டுக்கு வந்திருந்தவர்கள், தூரத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மணிகளாகும். மாநாட்டுக்கு எங்கெல்லாமிருந்து வந்திருந்தார்கள். பர்மா, இலங்கை, பம்பாய், மலேயா, பங்களூர், திருவனந்தபுரம், மைசூர், ஐதராபாத், ஆமதாபாத், அவற்றுடன் சென்னையிலிருந்து தூத்துக்குடிவரை இடைப்பட்ட தமிழக நகர்கள், ஊர்கள், சிற்றூர்கள் ஒன்றிலிருந்தும் தவறாமல், மாநாட்டில் பங்கேற்றுக் கொள்ள கழகத் தோழர்கள் வந்தார்கள். இரயில் தந்த நெருக்கடிகளைப் பொறுத்துக் கொண்டுவந்தார்கள், காஞ்சிபுரத்திலிருந்து, மதுரையிலிருந்து தனிப்பட்ட பஸ்கள்மூலமாகப் பலர் வந்திருந்தனர், பக்கத்து மாவட்டங்களிலிருந்து சைகில்களில் வந்தோர் பலர், வண்டிகளைப் பூட்டி நெடுஞ்சாலைகளில் நீண்டதோர் அணிவகுப்புடன் சிலர் வந்தனர், "நம்மூரிலிருந்து இரயிலும் கிடையாது, நம்மிடம் ஈருருளியும் இல்லை; என்றாலும் இயற்கைதந்த இரண்டுவலிவான கால்கள் இருக்கின்றன" என்று கால்நடைப் பயணத்தில் புறப்பட்டு, கழகக்கொடியுடன் வழிநடைப்பாடல்களுடன், ஆறுமலை காடுமேடுகளைத்தாண்டி அணியணியாகத் திருச்சிவந்து சேர்ந்தோர் பல்லாயிரவர்.

நீண்ட தூரங்களில் சிதறிக்கிடக்கும் முத்தும் மணியும், பொன்னும், பவளமும் ஒன்று சேர்க்கப்பட்டு, உயர்ந்தவொரு அணிகலனாவது போல, நெடுந்தொலைகளில் சிதறிக்கிடந்த கழகத்தோழர்கள், நாட்டின் கண்மணிகள் ஒன்றுசேர்ந்தனர் கண்ணுக்கும் கருத்துக்கும் களிப்பைத்தரும் அரியதொரு மாநாடு-நாட்டை மகிழவைக்கும் அணிகலன் சேர்ந்தது.

உயர்ந்த ஆபரணத்தை அமைக்கவேண்டுபவன், அலைகடலில் ஆழமுழ்கி அங்கு இருண்ட குகையில் மறைந்து கிடக்கும் ஒளி முத்துக்களைக் கொண்டுவருகிறான்; மண்ணைத் தோண்டுகிறான், பாறைகளைத் தகர்க்கிறான, பலிகள் பல தருகிறான், மண்ணுடன் கலந்துகிடக்கும் பொன்தூள்களைப் பிரிக்கிறான், பசும்பொன் கிடைக்கிறது; மலையைக் குடைகிறான், இருண்ட, பிளவுகளில் நுழைகிறான், பாறைகளின் மத்தியில் பதிந்திருக்கும் மாணிக்கப் பரல்களைப் பெயர்த்தெடுக்கிறான; சுறாவையும், சூறாவளியையும் எதிர்த்து கடல் மத்தியில், கடல் ஆழத்தில் முளைத்திருக்கும் பவளத்தை அறுத்தெடுத்துவந்து சேர்க்க வேண்டும். பாடுகள் பலபட்டபின்தான் பச்சைரத்தம் பரிமாறியபின்தான் உயர்தர மணிகள் கிடைக்கின்றன, அணிஉருவாகிறது. அதுபோல, பாடுகள்பல பட்டபின், கண்ணீரும் செந்நீரும் பரிமாறப்பட்டபின், கழகம் உயர்தர மணிகளைக் கண்டெடுத்தது, மறைந்துகிடந்த ஆக்கசக்திகள் வெளிப்பட்டு ஒளிவீசின, மாநாடு நடத்தியவர்கள் மணிகளும் முத்துக்களுமாகும்.

புறநானூற்றில் அந்தப் பாடலுக்குக் கீழே தரும் குறிப்பில், கண்ணகனார் என்ற புலவர் பாடினார் என்று தரப்பட்டிருக்கிறது. சான்றோர்கள் ஓரிடத்தில் சேர்ந்திருப்பது, அருமணிகள் ஒன்று சேர்க்கப்பட்டு, அரியதொரு ஆரம் அமைக்கப்படுவது போலிருக்கிறது என்றார் அவர். மாநில மாநாட்டில் முதல் நாள் வீற்றிருந்த சான்றோரும் ஆன்றோரும், அந்தப் பாடலுக்கு ஏற்ற விளக்கமாயினர்.

இரவு நாடகம் பதினோருமணி சுமாருக்குத் தான் ஆரம்பமாயிற்று. தோழர்கள் எஸ். எஸ்.

ராசேந்திரன், டி. வி. நாராயணசாமி, எம். என். கிருட்டிணன், முதலியோர் நடித்த புது "வெள்ளம்" என்ற நாடகம். திறந்த வெளி அரங்கத்தில் நாடகம் இருந்தது. நான் அங்கு வரும்பொழுது கூட்டம் நிறைந்துவிட்டது. நிருபர் என்ற வகையில், முதலில் இடம் தந்தார்கள். முதலிடம் என்ருல் வசதியான இடம் என்று நினைத்துக் கொள்ளாதீர்கள். மேடைக்கு அடுத்து முதலில் உள்ள இடம். அங்கிருந்து பார்த்தால், மேடைக்கு முதலில் இருக்கும் நடிகர்கள் மட்டும்தான் தெரிந்தார்கள். இரண்டு சொற்கள் பேசிவிட்டால், பின்னல் சென்ருல் எங்கள் காட்சியிலிருந்து அவர் மறைந்துவிடுவார்கள். குரல் மட்டும் தான் கேட்கும். முழுநாடக நேரத்துக்கு இருந்தாலும், பாதிநாடகம், கால்பகுதி நாடகம்தான் பார்க்கமுடிந்தது.

நான் உட்கார்ந்ததற்குச் சற்று தூரத்தில், அதேவித நெருக்கடியில் ராசேந்திரன் குடும்பத்தினர் கூட இராசேந்திரனின் தாயார், இராசேந்திரனுடைய பையன், டி. வி. என் பையன் முதலானவர்கள் இருந்தார்கள். நாடகம் நடக்கும்பொழுது, அந்த இரண்டுபையன்களும்-இராசேந்திரனின் மகனும், டி. வி. நாராயணசாமியின் மகனும் நடத்திய நாடகம்தான் வேடிக்கையாக இருந்தது. மேடையைப் பிடித்துக்கொண்டு இரண்டுசிறுவர்கள் நின்று நாடகத்தை உற்றுப்பார்த்தவண்ணமிருப்பார்கள். இராசேந்திரனும், டி. வி. என்னும் எதிர்த்துப் பேசிக்கொள்ளும் கட்டம் வந்தது, நாடகத்தில். இந்த இரண்டு சிறுவர்களையும் பார்க்கவேண்டுமே! டி. வி. என் பேசும்பொழுது "அப்பா மாமாவை எப்படிப் பேசிஞர் என்று டி. வி. என். மகன் குதூகலிப்பான், இராசேந்திரன் எதிர்த்துப் பேசும் பொழுது, "இப்போபாரு! எங்கப்பா பேசுகிருர்!" என்று மற்றவன் சொல்வான்.

"அப்பா மாமாவை நல்லா அடிச்சார்!" கைநீட்டிப் பேசினல் பையன் இங்கே சொல்வான். தந்தையர்கள நடத்தும் நாடகம் மேலே நடந்தது, தனயர்கள் மேடைக்குக்கீழ் மற்ெருரு இணைநாடகத்தை நடத்திக்கொண்டிருந்தார்கள்.

18ஆந்தேதி காலையில் இருட்டுகிறபொழுதே நாங்கள் எழுந்து, குளித்து, கிடைக்கும் சிற்றுண்டிகளை அருந்திவிட்டோம். இரண்டு பெரிய பாட்டில்களில் தண்ணீரை அடைத்து எடுத்துக்கொண்டோம். மாநாட்டுப்பந்தலுக்குள் தண்ணீர் கிடைத்தாலும், வழியில் தாகமெடுத்தால் ஒரு மைல்தூரம் நடந்தால்தான் தண்ணீர் கிடைக்கும்.

மிகசீக்கிரம் கிளம்பிவிட்டோமென்ற உற்சாகத்தில் பஸ் நிற்குமிடம் வந்தோம். எங்களுக்கு முன்னதாகவே ஒரு கூட்டம் - நீண்ட வரிசை அங்கு காத்திருந்தது; நீளத்தைப் பார்த்ததும் பயமாக இருந்தது. பஸ்களின் எண்ணிக்கை உயர்ந்திருக்கிறதென்று சொல்லப்பட்டதால், சிறிதுதூரம் நடந்து சென்று, வரிசையின் கடைசியில் நின்ருேம். வரிசை நகர்ந்து. பஸ்கள் வரிசையாக நின்று தவக்கமின்றிதான் சென்றன. இருந்தாலும் எங்கள் வரிசை நகர்ந்து, நாங்கள் இடம் பிடிப்பதற்குள் அரைமணிநேரம் ஆகிவிட்டது. நாங்கள் பஸ்ஸுக்குள் அடியெடுத்துவைக்கும்போது திரும்பிப்பார்த்தோம். காத்திருந்த வரிசை இரண்டு மூன்று மடங்கு நீண்டுவிட்டது. வரிசையின் கடைசியில் நிற்பதற்குப் பதில் மறுதிக்கில் நடந்து மாநாட்டுக்குப் போனல், காற்பங்கு தூரமாவது நடந்துவிடலாம்.

18ஆந்தேதி பந்தலில் மாநாட்டின் காலை நிகழ்ச்சி ஆரம்பமாகிவிட்டது. இசைமுரசு அனிபா அவர்கள் முழங்கிக்கொண்டிருந்தார்கள். "அழைக்கின்ருர், அழைக்கின்ருர் அண்ணு! என்று பாடல் கெம்பீரமாக ஒலித்துக்கொண்டிருந்தது. நான் பந்தலுக்குள் போகாமல், வெளியில் சுற்றிக்கொண்டிருந்தேன்.

மாநாட்டுப் பந்தலைப்பற்றியும், அதன் அமைப்பைப்பற்றியும் இப்பொழுது நன்கு பார்த்தேன். மாநாட்டுக்காக ஒதுக்கப்பட்ட இடம் 45 ஏகர் அளவுள்ளது. ஓரத்தில் வளைத்து அடைக்கப்பட்டிருந்த மூங்கில்தட்டிகளை எடுத்து, நீளமாக வைத்துப்போனல், சுமார் நான்கு மைல்களுக்குமேல் போகுமாம். மாநாட்டில் நிறுவப்பட்டிருந்த கால்கள்மட்டும் 4600 மேற்பட்டதாகும். பந்தலுக்கு உள்ளும் வெளியிலும் போடப்பட்டிருந்த குழாய் (டியூப்) விளக்குகள் 2200 க்கு மேலிருக்கும். இவற்றையெல்லாம் சரவிளக்குகளும், தனிவிளக்குகளும் ஏராளம். சாலையிலிருந்து மாநாட்டுமுதல் வாயில்வரை - 500 அல்லது 600 அடி தூரமிருக்கும் - இரண்டு பக்கங்களிலும் சரவிளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. சாலையிலிருந்து மாநாட்டுக்கு நுழையுமிடத்தில் "வள்ளுவர் நகர்" என்று மின்சாரவிளக்குகளால் ஒளிசெய்யும் முகப்பு இருந்தது.

முதல்வாயில் சென்னையில் தோழர் எம். ஜி. இராமச்சந்திரன், கே. எம். கண்ணபிரான் இவர்கள் மேற்பார்வையில் ஓவியக்காரர்கள்

பகுதி செய்யப்பட்டு, திருச்சிக்கு வந்து சேர்க்கப்பட்டதாகும்,

இரண்டாவது வாயில் தோழர்களால் தென்னங்கீற்றைவைத்து பின்னப்பட்டதாகும். முதல்வாயில் வந்து இறங்கிப் பூட்டப்படும் பொழுது, அவர்கள் போட்டியுணர்ச்சியுடன் "அண்ணு! நாங்கள் இரண்டாவது வாயில் எப்படி அமைக்கிறோம்" என்று மிக ஊக்கத்துடன் வேலையில் இறங்கினுர்கள்.

முதல் வாயில் கெம்பீரத்துடன் நின்றது, இரண்டாவது மென்மையான அழகு வேலைப்பாடுகளுடன் நின்றது. பலமான கோட்டை, அதற்கு அமைக்கப்படும் வாயிலைப்போல முதல்வாயில் இருந்தது. அழகியதொரு அரண்மனைக்குள் நுழைவதற்கான வாயில் போன்று, இரண்டாவது வாயில் இருந்தது. ஒன்றற்கொன்று இணையாக இரண்டு வாயில்களும் அமைந்திருந்தன. ஒன்று அரசனை வரவேற்பதற்கான வாயிலாக இருந்தது.

இரண்டாவது வாயிலைக் கடந்தும் பந்தல் ஆரம்பமாகிறது. பந்தலில் முகப்பில், விலங்குகளை ஒடித்திடும் வீரனின் ஓவியம் இருந்தது.

மாநாட்டுப்பந்தலுக்கு வலதுபுறத்தில் கண்காட்சி இருந்தது. இடதுபுறத்தில் புத்தகக் கடைகளும், சோடா, வெற்றிலைப்பாக்குக் கடைகளும் இருந்தன. வள்ளுவர் நகர் அமைந்ததும், உண்டான கடைகள் சுமார் 200 அல்லது 250 இருக்கும். திருவிழாவுக்குக் கடைகள் போடுவது போன்று, வழிநெடுகக் கடைகள் போடப்பட்டிருந்தன.

முதல் வாயிலின் இரண்டுபக்கங்களிலும் உள்நுழையும் வழிகள் அமைக்கப்பட்டிருந்தன. மொத்தம் எட்டு அல்லது பத்து வழிகள் இருந்தன என்று நினைக்கிறேன். டிக்கட் வாங்குவதற்கு நான்கு கொட்டகைகளும், அதில் பனனிரண்டு சன்னல்களும் இருந்தன. டிக்கட் வாங்குபவர்கள் வெளியில் நீண்ட வரிசையில் நின்றுர்கள்"

டிக்கட் வாங்குமிடத்தைப்பற்றிச் சொல்லும்பொழுது முதல் நாள் மாலை நடந்த நிகழ்ச்சியொன்று ஞாபகத்திற்கு வருமறது. டிக்கட் விற்பனைக்கு சென்னை தோழர் கே. கோவிந்தசாமி அவர்கள் பொறுப்பாளராக இருந்தார்கள். முதல் நாள் டிக்கட் விற்பனையில் தோழர் கருணு, காந்தி, மணி, சிவப்பிரகாசம், சண்முகம், கே. டி. எஸ், மணி முதலியவர் ஈடுபட்டிருந்தார்கள். முதல் நாள் அதிகக் கூட்டமும், டிக்கட்வாங்குபவர்கள் அதிகமாக இருந்ததால், அவர்களுக்கு வேலை சரியாக இருந்தது. ஊர்வலம் வந்ததிலிருந்து, மாலை ஆறு ஏழு மணிவரை சிறிதும் ஓய்வின்றி அவர்கள் உழைத்தார்கள். அவர்கள் டிக்கட் விற்பதும், நோட்டுகளை வாங்கி வாங்கிச் சிறிய பெட்டிக்குள் திணிப்பதும், அந்தப் பெட்டிகள் போதாமல், அவற்றையெடுத்து வேறொரு பெட்டியில் கொட்டிவிட்டு, மறுபடியும் ஆரம்பிப்பதும், அவர்கள் மிகவும் சிரமபட்டார்கள். இதற்கிடையில் காற்றுத் தொல்லை வேறு. முதற் 'கொட்டகைப்பக்கம் நான் சென்றபொழுது, அவர்கள்படும் அவதிகண்டு, உள் சென்று நோட்டுகளை வரிசைப்படுத்திக் கட்டுகளாகப் பிரித்துதந்தேன். ஆனுல் முடியவில்லை. பிரித்து அடுக்கி முடிவதற்குள், அதைவிட வேகமாகப் பெட்டி நிரம்பிவிட்டது. சற்றுக் கூட்டமும் வேலையும் குறைந்ததும், நான் வெளிக்கிளம்பி, இரண்டாவது டிக்கட் பந்தலுக்கு வந்தேன். அங்கு தோழர் கே. கோவிந்தசாமிஅவர்கள் நோட்டுகளை எண்ணிப்பார்த்துக் கொண்டிருந்தார். உள்ளே போகலாமா, வேண்டாமா என்ற யோசனையில் நான் வெளியில் நின்று அங்கு நடக்கும் வேலையைப்பார்த்தபடி இருந்தேன். உள்நுழைந்தால், ஏதாவது வேலைகிடைத்து, ஒருமணி நேரத்துக்கு வெளிக்கிளம்பமுடியாது.

வெளியில் நின்று யாரோ கவனிக்கிருர்கள் என்ற உணர்வு, தோழர் கே. கோவிந்தசாமிக்கு வத்ததுபோலும்! திடிரென்று பெட்டியை மூடி எழுந்து "யாரது அங்கே நிற்பது?" என்று கேட்டார். அவர் கேட்டதைப் பார்த்ததும் எனக்கேப் பயமாகஇருந்தது. நடந்து போனுல், சந்தேகம் அதிகமாகும். அதனுல் கொட்டகைக்குள் சென்று உட்கார்ந்தேன்.

"நீங்களா?" என்று கோவிந்தசாமி உட்கார்ந்தார். "யாரோ நின்று கவனிக்கிருர்களே யென்று பார்த்தேன்"

ஐந்தாறு பெட்டிகளை எதிரில் வைத்து, அவற்றின்மீது நாலைந்து கணக்குப் புத்தகங்களைப் போட்டு, அவர் உட்கார்ந்திருந்தார்.

"இன்றைக்கு டிக்கட் விற்பனை எப்படி?" என்று நான் கேட்டேன்.

"உஸ் சத்தம்போட்டுக் கேட்காதீர்கள்!" என்று சுற்றிலும் பார்த்துவிட்டு, "சண்முகம்! சண்முகம்!" என்று அவர் கூப்பிட்டார். டிக்கட் புத்தகங்கள், அடிக்கட்டைகள், கணக்குகள் இவைகளைத் தள்ளிக்கொண்டு தோழர் சண்முகம் - தலைமைநிலையத்தில் பணியாற்றுபவர் - எழுந்து வந்தார்.

"சண்முகம்! முதல் கொட்டகைக்குப்போய் டிக்கட் கணக்கைப் பார்த்து விட்டுவா!" என்று சொல்லி, தொடர்ந்து கொஞ்சந் தணிந்த குரலில் "அப்படியே டிக்கட் கொட்டகையைச் சுற்றிலும் யாராவது அவசியமற்ற முறையில் நடமாடுகிறார்களாவென்று பார்த்துக்கொள்!" என்றார். சண்முகம் கணக்குப் புத்தகத்தை எடுத்துக்கொண்டு சென்றான்.

"இந்தப் பெட்டியில் என்ன இருக்கிறது தெரியுமா?" அவர் என்பக்கம் திரும்பிக் கேட்டார்.

"என்ன இருக்கிறது?"

கோவிந்தசாமி மெதுவாகச் சென்றார். "விரியன்பாம்புக்குட்டி! விரியன்பாம்புக்குட்டி இருக்கிறது!"

நான் உண்மையிலேயே பயந்து எழுந்து விட்டேன். மாநாடு கூடுமிடத்தில் ஏராளமான பாம்புகளை அடித்தோம். என்றெல்லாம் சொன்னார்களல்லவா! ஏதாவது தப்பித்தவறி வந்து, அதை இவர்கள் பிடித்துப் பெட்டிக்குள் அடைத்துவிட்டார்களோவென்று நினைத்தேன். பெட்டிக்குள் பாம்பு என்றதும், அதை எப்படித்திறப்பது, எப்படி அடிப்பது என்பதில் என் யோசனை சென்றது.

நான் எழுந்து நிற்பதைப் பார்த்து, கோவிந்தசாமி அவர்கள் சிரித்து "ஒன்றுமில்லை உட்காருங்கள்!" என்றார். அப்பொழுது கூட என்னால் நம்பமுடியவில்லை. நாமெல்லோரும் திராவிடர்க்கழகத்தில் இருந்தபொழுதும், மற்வர்களையெல்லாம் சந்தேகக் கண்கொண்டு பார்க்கும் பெரியார் அவர்கள்கூட, தோழர் கோவிந்தசாமி அவர்கள் பொறுப்பில்தான் கணக்குவிவரங்கள் விடுவார். திராவிட முன்னேற்றக்கழகம் துவங்கியபொழுதும், தோழர் கோவிந்தசாமி மிக உற்சாகத்துடன் உழைத்தார். ஆனால் அவர் உடல்நிலை சீர்கேடைந்து டாக்டர்கள் ஓய்வெடுக்கும்படிக் கட்டாயப் படுத்தியபின், முன்போலத் தீவிர பங்கெடுக்க முடியாமற்போனது. பொறுப்பாற்றலும், கடமையுணர்வும் மிக்க அவர் தலைமையின்கீழ் இரண்டாவதுமாநிலமாநாட்டு டிக்கட் விற்பனைக்குழு இயங்கியது. ஐந்து நாட்களிலும் மாநாட்டில் கலந்துகொள்ளாமல், மற்ற வேடிக்கைகள், நிகழ்ச்சிகள், எதையும் பார்க்கவும் முடியாமல், அவரும், அவருடன் கூட தோழர்கள் கருணா, காந்தி, சிவப்பிரகாசம், மணி, சண்முகம் முதலானோர் பணியாற்றியவர்கள். ஆற்றிய பணி போற்றற்குரியதாகும்.

முதல் நாள் பெட்டியைக்காட்டி "விரியன் பாம்புக்குட்டி" என்று கோவிந்தசாமி பயமுறுத்தினாரே, அப்பொழுது அவரிடம் ஏறத்தாழ எழுபதினாயிரம்ரூபாய் இருந்ததாம்! இதை மறுநாள் கணக்குப்பார்த்தவர்கள் சொன்னார்கள் தோழர் கோவிந்தசாமி எப்பொழுதும் வேடிக்கையாகப் பேசியதில்லை, மற்றவர்கள் பேசினாலும் அவர் ஏற்றுக்கொள்வதில்லை. உள்ளுக்குள் பயமென்றாலும், வெளியில் சமாளித்துக்கொண்டு உட்கார்ந்தேன். ஆனால் பெட்டியின் மீது இருந்த பார்வையை நான் அகற்றாமலிருந்தேன்.

கண்ணாடியைச் சரியாகப் போட்டுக்கொண்டு கோவிந்தசாமி சொன்னார் "பெட்டியில் வேறொன்றுமில்லை. பணம், பணந்தான்! பணம் விரியன் பாம்புக்குட்டி மாதிரி, ஐயா! கொஞ்சம் அஜாக்கிரதையாக இருந்தால், சுடித்துவிடும்."

பணத்தைத்தான் அவர் சொன்னாரென்றதும் நான் தைரியமாக உட்கார்ந்தேன். "அது தான் பார்த்தேன். இவ்வளவு கூட்டத்தில் எங்கே வரப்போகிறது?"

சிறிதுநேரம் தோழர் கோவிந்தசாமியுடன் இருந்தேன். நோட்டுகளை எண்ணிக்கொண்டு கணக்குகளை எழுதினேன், அவர் வைத்திருந்த பணத்தை அப்பொழுது எண்ண முடியாது போலிருந்தது. "நான் பிறகு பார்த்துக்கொள்கிறேன்." என்று கோவிந்தசாமியும், மற்ற தோழர்கள் தங்கள் "விரியன் பாம்பு" பெட்டிகளுடன் கிளம்பிப்போனார்கள்.

கழகத்தில் பொறுப்பும் கடமையுணர்வும் மிக்கப் பணியாற்றும் முன்னணி வீரர்களில் தோழர் கோவிந்தசாமி முக்கியமானவர். முதல் மாநில மாநாட்டிலும் கோவிந்தசாமி அவர்கள் தாம் வரவுக்கணக்கைப் பார்த்தவர். இந்த மாநாட்டிலும் அந்தப் பெரும் பொறுப்பை அவர்தான் மேற்கொண்டு திறம்பட நடத்தினார்கள். பாம்புக்குட்டி என்ன பெரிய மலைப்பாம்பு என்றே சொல்லியிருக்கலாம்.

டிக்கட்டுகளை வாங்கியவர்களுக்கும், வாயிலில் நின்ற தொண்டர்களுக்கும் பலவாக்குவாதங்கள் நடைபெற்றன. ஒவ்வொரு நாளிலும் காலை, மாலை, இரவு என்று மூன்று பகுதிகளிருந்தன. ஒருவேளைக்கு உள் நுழைந்துவிட்டால், மறுபடியும் வெளிசென்று விட்டுத் திரும்பவும் உள்வரமுடியாது. இதைக் கவனிக்காமல், சிலர் வெளியே போய்விட்டு மறுபடியும் அதேவேளையில் உள்வரமுயன்றார்கள். தொண்டர்கள் அனுமதிக்க மறுத்தார்கள். இதனால் வாக்குவாதம்.

டிக்கட் வாங்காமல் ஒருபெரியவர் - ஐம்பது வயதிருக்கும் - வெளிவாயிலுக்கு வந்தார்.

"இப்பொழுது வெளியில் சென்ருல், மறுபடியும் இரவுதான் வரலாம்." என்று தொண்டர் சொன்ஞர்.

"இல்லை, வெளியில் சென்றுவிட்டு, உடனே வரவேண்டும்."

"டிக்கட்டை வைத்துக்கொண்டு ஒருவேளை ஒருதடவைதான் உள்வரலாம். அந்த இடத்தைக் கிழித்துவிட்டால் மறுபடியும் உள்வர முடியாது"

பெரியவருக்கும் தொண்டருக்கும் வாக்குவாதம். அந்தச்சமயம் தோழர் சம்பத் அவர்கள் அந்தப்பக்கம் வந்தார், என்ன சச்சரவென விசாரித்தார். இவரும் நடந்ததைச் சொன்ஞர்கள்.

"நான் வெளியில் போய்விட்டு வருவதால் உங்களுக்கு என்ன நட்டம்?" அந்தப் பெரியவர் கேட்டார்,

சம்பத் அவரைச் சமாதானப்படுத்தி, "நட்டமிருக்கிறது. அதனல்தான் இந்தமுறை அதை விளக்க அரைமணி நேரம் ஆகும். இங்கே வாருங்கள்!" என்று அழைத்தார்.

"சொல்லுங்கள்! நானும் கேட்கிறேன்!" என்று பெரியவர் வந்தார்.

சம்பத் பெரியவரை அழைத்துப்போய், உள்ளே வருபவாகள அடிக்கடி வெளியே போய்வர அனுமதிப்பதால் உண்டாகும் நெருக்கடிகளை-அரைமணி நேரத்திலல்ல, ஒரு ஐந்து நிமிடத்தில் விளங்கவைத்தார்.

பெரியவர் சமாதானமடைந்து, இப்படிச் சொன்ஞல், நான் ஏன் வெளியே போகிறேன்? நீங்கள் சொல்வது சரிதான். மிகச் சரியாகப் பார்த்துக்கொள்ளவேண்டும்" என்று திரும்பி உள்ளே போய்விட்டார்.

நான் சுற்றிக்கொண்டிருந்துவிட்டு, மேடைக்கு போகும்பொழுது, திறப்பாளர் ஜி. பி. சோமசுந்தரம் தனது உரையை ஆற்றிக்கொண்டிருந்தார். அதற்கு முன்னதாக, அனிபாவின் பாட்டும், தோழியர் கஸ்தூரியின் கச்சேரியும் இருந்தன. இரண்டும் நல்ல முறையிலேயே அமைந்திருந்தனவென்று என் பக்கத்திலிருந்த நிருபரொருவர் கூறினர்.

பேளுக்குரிச்சிப் பெரியவரின் திறப்புரைக்குப்பின், அம்பில் தருமலிங்கம் வரவேற்ருர், வரவேற்புக் கழகத் தலைவர் என்ற முறையில், முதல் நாள் குரல் கம்மி, இரண்டு மூன்று சுருதிகளில் பேசிக்கொண்டிருந்தவர், அன்று எப்படியோ கணீரென்ற குரலில் பேசினர். மிகக் குறைந்த நேரமென்ருலும் பேச்சு கவர்ச்சியாக உணர்ச்சியுடன் இருந்தது. அத்துடன் காலை நிகழ்ச்சிகள் முடிவடைந்தன.

மாலை நிகழ்ச்சி, இசைக்குயில் செல்வா அவர்களின் இன்னிசையுடன் ஆரம்பமானது. அதற்குமுன் இசைக்குயில் அவர்களின் இசையை சென்னையில் இரண்டு மூன்று தடவைகள் கேட்டிருக்கிறேன். இனிய சாரீரம்! உயரத்தில் நின்று அனுயாசமாய் பாடிடும் திறன், இசைக்குயில் செல்வாவிடம் இருக்கின்றன! அவர்கள் பாடிய சில பாட்டுக்கள் எம். எஸ்., கே. பி. சுந்தராம்பாள் இவர்களை மிஞ்சுமளவு இருந்தன. ஆனல் இனிமையும் இசையும் மட்டுமே துணை செய்வதாக அவர்களுடைய கச்சேரிகள் இருக்கின்றன. அத்துடன் கருத்தும் சொற்செறிவும் மிக்க பாடல்களை அவர்கள் தேர்ந்தெடுத்து, இசையமைத்துக்கொண்டால் இன்னும் இசைபொலிவுறும். இது அவர்களிடம் குறை காண்பதாகாது. சிறந்த இசையும் குரலும் இருக்கின்றன என்பதைப் போற்றுவதால், அதன்வழி சொல்வளமிக்க பாடல்கள் சேர்ந்தால் இன்னும் அதிகப் பலன்பெறும் என்ற விருப்பத்தாலாகும். மாநாட்டில் இருந்தவர்கள் இசைக்குயில் செல்வாவின் இசையை மிகவும் இரசித்தார்கள்.

பின் தலைவரை வழிமொழியும் வரிசை ஆரம்பமானது. தோழர் அம்பில் வைத்திருந்த நிகழ்ச்சி நிரலை நான் பார்த்தேன். அதில் 28 பெயர்கள் எழுதப்பட்டிருந்தன. மாவட்டச் செயலாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள், முக்கிய சொற்பொழிவாளர்கள் இவர்களுடைய பெயர்கள் இருந்தன. முன்மொழிபவர்கள் மிக விரைவாகவே தங்கள் பேச்சுக்களை முடித்துக்கொண்டார்கள், பின்னல் மிகப் பலர் இருக்கின்றனர் என்ற காரணத்தால்.

இதற்குள் வானம் இருண்டது. குளிர் காற்று வீசத் தொடங்கியது. ஆங்காங்கு ஒரு சில துளிகள் விழுந்தன. பின் புழுதிக்காற்று அடித்தது. காற்று இன்னும் பலமாக அடித்தால் மழைபோய்விடும் என்று சிலர் சொன்ஞர்கள். மேகங்கள் கலைவதாயில்லை, வானம் மேலும் இருண்டது. மழை ஆரம்பித்தது. கடும் பேரிரைச்சலுடன்! அப்பொழுது காஞ்சிபுரம் சி. வி. எம். அண்ணமலை பேசவந்தவர் நின்றுவிட்டார்.

மழை என்ருல் மிகக்கடுமையாக இருந்தது. பந்தல் வெய்யல் காலத்தில் நிழலுக்காகப் போடப்பட்டது. அது எப்படி ஆலங்கட்டி போல் அடித்துப்பெய்யும் மழையைத் தாங்க

முடியும். பந்தலுக்குமேல் விழும் தண்ணீர் நன்றாகத்திரண்டு ஒவ்வொரு இடத்திலும் விழ ஆரம்பித்தது. குழந்தைகளை அணைத்துக் கொண்டு பெண்கள் அவதிப்பட்டனர். மேடையிலிருந்த தலைவர்கள் கீழிறங்கி, முதலில் பெண்களுக்கு அங்கு இடம் தந்தார்கள். பந்தலுக்குள்ளும் நிற்கமுடியாமல், வெளியில் வந்து அவர்கள் நின்றார்கள். அண்ணா, நெடுஞ்செழியன், சம்பத், எல்லோரும் கொட்டும் மழையில் நின்றுகொண்டிருந்தனர். மாநாட்டுப்பந்தலுக்குள் இருந்தவர்கள் வெளிவந்து, மழை பெய்யாத இடங்களில் தாய்மார்கள், குழந்தைகள் தங்குவதற்கு இடம் தந்தார்கள்.

மழை ஓய்வதாயில்லை. மழை பெய்தால் மேற்பட்டு நனைந்துவிட்டல்லவாபோகும். அன்று பெய்த மழை மேலேபட்டு தெரித்து விழுந்தபடி இருந்தது! கீழ் தண்ணீர் ஓட ஆரம்பித்தது. அண்ணாவும் செழியனும் ஒரு குடைக்குக்கீழ் நின்றுகொண்டிருந்தார்கள். ஆனால் பெய்த மழையெல்லாம் அவர்கள் தலைமீது பட்டுக்கொண்டிருந்தது. காற்று சுற்றி அடித்ததால், எந்தப்பக்கம் திரும்புவது என்று தெரியவில்லை. கடைசியாக குடையை எதற்கு அனாவசியமாக பிடித்துக்கொண்டிருக்கவேண்டுமென்று பக்கத்திலிருந்தவர்களிடம் கொடுத்துவிட்டு, பின்பக்கம் சென்றார்கள். எங்களைப் பொறுத்தமட்டில், வானம் நமக்கு அனுப்பிய "ஷவர்பாத்" என்று கனகச்சிதமாக வெளியில்போய் நின்றுகொண்டோம். முதல் மழை துளி படும்பொழுது தான் குளிர் இருக்கும். பின் அதைப்போல இனிமையாக எதுவும் இருக்காது.

மழை நிற்குமென்று எதிர்பார்த்தார்கள். ஆனால் விரைவில் நிற்பதற்கான அறிகுறிகளைக்காணோம். அதன்பின் மேடையில் தங்கியிருக்கும் பெண்கள் கூட்டத்தை வெளியேற்றி, மழைக்குத்தகுந்த இடத்துக்கு அனுப்பும் முயற்சியில் ஈடுபட்டார்கள். தலைமை நிலையத்துக்கு ஒரு பகுதியும் மற்றும் அருகாமையிலிருப்பவர்கள் அவரவர்கள் இடத்துக்கும் அனுப்பிவிட கார்கள் கொண்டு வந்து நிறுத்தப்பட்டன. தண்ணீர் தேங்கி ஆங்காங்கு சேரும் சகதியும் கிளம்பத்தொடங்கின. மாநாட்டு மேடையும், நாடகமேடையும் ஒரே தொடராக இருந்தபோதிலும், பந்தலுக்கும் நாடக அரங்குக்கும் மத்தியில் நீண்ட அடைப்பு இருந்தது. நாடக மேடையில் ஒதுங்கியிருந்த பெண்களை அழைத்துவர, வழியில் இந்த அடைப்புகள் தடையாக இருந்தன. ஓரிருவர் பிய்த்துப்போட்டனர், கயிறுகளை அவிழ்த்துப்போட்டனர். அந்த நேரத்தில் என் பக்கத்திலிருந்த சிறுபையன்—அவனுக்கு மழை பெய்வது வேடிக்கையாக இருந்தது "அதோ! மலைக்கள்ளன்! மதுரை வீரன்!" என்று கூச்சல்போட்டான். வேறு யாருமில்லை எம். ஜி. இராமச்சந்திர அவர்கள் ஒரு கம்பத்தை அப்படியே அலக்காகப் பெயர்த்தெடுத்துப் பக்கத்தில் போட்டு வழியமைத்தார். மறுபக்கத்தில் நின்று, மழையில் தவித்தவர்கள் உட்புறம் வந்தார்கள். உண்மையிலேயே நல்ல உடல்பலமும்—உற்ற நேரத்தில் உதவி புரியவேண்டுமென்ற உள்ளத்தூய்மையும் உடையவர் எம். ஜி. ஆர். கம்பத்தை எடுத்து வைத்ததும், கையைத் தட்டிக்கொண்டு ஒதுங்கிவந்தார். அவருடைய கார் அருகில் வந்து நின்றது. கதவைத் திறந்து—தான் ஏறிக்கொள்ள அல்ல, நின்று கொண்டிருந்த தாய்மார்களை அதில் ஏறச் செய்தார்! தாய்மார்களை ஏற்றிக்கொண்டு கார் சென்றது. எம். ஜி. ஆர். கொட்டும் மழையில் நின்றார்!

அங்கிருந்த மற்றவர்களெல்லாம், அண்ணா, சம்பத், கருணாநிதி, கண்ணதாசன், கரூர் சோமு, இராசேந்திரன் முதலானவர்களுடைய கார்கள்—எந்தக் கார் அங்கு கண்ணில் தென்பட்டாலும் அதில் தாய்மார்கள் முதலில் உட்காரச்செய்து தலைமைநிலையத்துக்கும், பக்கத்திலிருந்த கல்லூரிக் கட்டிடத்துக்கும் அனுப்பினார்கள். தாய்மார்கள் அனைவரும் கார்களில் ஏறிச்செல்லுமவரை மற்றவர்கள யாரும் போகவில்லை.

மழையில் நிற்பதைச் சிலர் உறுதியின் அடையாளமாக ஏற்றுக்கொண்டார்கள். எங்களுக்குச் சற்று அருகில் ஒரு பெரியவர்—ஐம்பது வயதுக்கு மேலிருக்கும். சென்னையில் புரசவாக்கத்தில் இருக்கும் தமிழாசிரியர் என்று நினைக்கிறேன். அடிக்கடி நமது கூட்டங்களுக்கு வருபவர்—அவர் கையைக் கட்டிக் கொண்டு அசையாமல் ஆடாமல் நின்று கொண்டிருந்தார். எங்கள் கூட்டத்திலிருந்த ஒருவன்—30 வயதுதானிருக்கும் இளைஞர் கட்டான உடலுடையவன்—மழையில் நடுங்கியவண்ணம் நின்றுகொண்டிருந்தான். அந்தப் பெரியவர் அவனைப் பார்த்து "என்ன, தம்பி! இப்படி மழையில் நடுங்குகிறாய்? என்னைப் பார்! என் வயதுக்கு மழையில் எப்படி ஆடாமல் நிற்கிறேன்! நிமிர்ந்து நில் தம்பி! மழை ஒன்றுஞ் செய்துவிடாது!" என்றார்.

(இதன் தொடர்ச்சி 34-ஆம் பக்கம் பார்க்க)

ஏகலைவன்

இரா. செழியன்

குருபக்திக்கு எடுத்துக்காட்டாக ஏகலைவன் சொல்லப்படுகிறான். வில்வித்தை கற்க எண்ணிய வேடன் வில்லாசிரியர் துரோணரை அணுகுகிறான். அவர் அவனை ஏற்றுக்கொள்ளாமற் போக, அதில் மனந்தளராமல் வேடன் காட்டிற்குச் சென்று துரோணரைப் போன்று சிலைவைத்து வில்வித்தை கற்றுச் சிறப்படைகிறான். வேட்டைக்கு வந்த அரசகுமாரர்கள் ஏகலைவனின் வில்திறம்பற்றிப் பேச, அது கேட்டு அருச்சுனன் மனந்தளர, துரோணர் வேடனைத் தேடிச் செல்கிறார். ஏகலைவன் துரோணரைக் குருவெனக் கொண்டாடி வரவேற்று உபசரிக்க, "உனது கட்டை விரலைக் குருதட்சணையாகக் கொடு!" என துரோணர் கேட்க, ஏகலைவன் வில்வித்தைக்கு முக்கியமானது என்றும் யோசிக்காமல் கட்டைவிரலை வெட்டிக் காணிக்கையாகக் கொடுத்து விடுகிறான்.

இது ஏகலைவனின் கதை. பிள்ளைக்கறி கொடுத்த சிறுத்தொண்டன் சிறந்த பக்திமானுக்கு எடுத்துக் காட்டாக இருப்பது போல, கட்டை விரலைக் கொடுத்த ஏகலைவன் குருபக்திக்கு உறைவிடமான சிறந்த மாணவனாக ஏற்றியுரைக்கப்படுகிறான். இது நெடுங்காலமாக வழக்கத்திலிருந்துவரும் கருத்தாகும்.

இந்தக் கருத்தில் புதிய மாற்றத்தை அண்ணா அவர்கள் கொடுத்தார்கள். அவர் எழுதிய **"நீதிதேவன் மயக்கம்"** என்ற நாடகத்தில் கட்டை விரலை வாங்கிய இரக்கமற்ற செயலுக்காக, துரோணாச்சாரியாரைப் பார்த்து இராவணன் கூறுகிறான், கடுமையாக:

"துரோணாச்சாரியே! ஏகலைவன் உம்மைத் தோற்கடித்தான். அவன் இழந்தது கைவிரல்—நீர் இழந்தது கண்ணியம் கவனமிருக்கட்டும்!" அண்ணா தந்த இந்த விளக்கம், ஏகலைவன் கதையில் புதியதொரு கருத்தை அளித்தது.

குருபக்திக்காக ஏகலைவனின் கதை கூறுபவர்கள், கட்டைவிரலை அவன் வெட்டித் தருவதுடன் முடித்துவிடுகிறார்கள். கைவிரலையிழந்ததும் ஏகலைவன் என்னவானான்? மிகப் பலருக்குத்தெரியாது. "குரு கேட்டதும். கட்டைவிரலை அவன் வெட்டித்தந்தான். ஏகலைவனின் குருபக்தியை எல்லோரும் வியந்தார்கள்." அத்துடன் கதை முடிந்துவிடுகிறது. அதற்குமேல் ஏகலைவனைப்பற்றி கதை தொடரவில்லை.

ஏகலைவன் கதை பாரதத்தில் வருகிறது. வியாசர் எழுதிய பாரதத்தில் ஏகலைவனின் கதை கட்டைவிரல் அறுப்பதுடன் முடியவில்லை. கட்டைவிரலையிழந்த ஏகலைவன் அதற்குப்பின்னும் விரலுறை கட்டிக்கொண்டு மிகுந்த தீரனாக விளங்கினானென்பதும், பாரத யுத்தம் ஆரம்பிப்பதற்குமுன் அவனுடைய உதவியைப்பெற பாண்டவர்கள் முயன்றார்களென்பதும், கடைசியாக யுத்த முனையில் கிருஷ்ணன் சூழ்ச்சியால் ஏகலைவனைக்கொன்றாரென்பதும், பாரதத்தைத் தொடர்ந்து பார்த்தால் பெறப்படும். வியாச பாரதத்தில் ஏகலைவனைப்பற்றி வரும் இடங்களை ஒவ்வொன்றாகக் கவனிக்கலாம்.

ஏகலைவன் சாதாரண வேடனல்ல. நிஷாத நாட்டுக்கு அரசன் இரண்யதனுசு என்பவரின் மகன் என்பது பாரதத்தில் குறிக்கப்பட்டிருக்கிறது. ஏகலைவனைப்பற்றிய குறிப்பு—அவன் துரோணரை அணுகியதிலிருந்து, அவனுடைய கட்டைவிரல் வெட்டப்படுவது வரை—பாரதத்தில் ஆதிபர்வம், அதில் 142ஆம் அத்தியாயமான சம்பவப் பர்வம் என்ற உப பர்வத்தில் கூறப்படுகிறது. துரோணர் குருகுலத்தார்களாகிய பாண்டவ துரியோதனாதியர்களுக்கு ஆசிரியராக நியமிக்கப்பட்டபிறகு, **"துரோணருடைய சாமர்த்தியத்தைக் கேள்வியுற்று வில்வித்தை கற்க ஆவலுடன் அரசர்களும் அரசகுமாரர்களும் ஆயிரக்கணக்காக வந்து சேர்ந்தனர். ஆயுததாரிகளிற் சிறந்**

தவரான துரோணர் அவர்களெல்லோருக்கும் சிட்சை சொல்லிவைத்தார். அதன்பின், வேடர்களுக்கு அரசனாகிய இரண்யதனுஸ் என்பவனுடைய மகனை ஏகலைவன் துரோணரிடம் வந்தான். தர்மந்தெரிந்த துரோணர் குருவம்சத்தாரிடமுள்ள தாட்சண்யத்தினால் சிந்தித்து அவன் வேடன்மகனென்று சொல்லி அவனை வில்வித்தையில் சிஷ்யனாக அங்கீகரிக்காமல் இருந்தார். அவனைப் பார்த்து 'ஓ! நிஷாத புத்திரனே! நீ எப்போதும் பாணப்பிரயோகத்தில் மிகுந்த பலமுள்ளவனாவாய்; என் சிஷ்யன்தான், உன் வீட்டுக்குத்திரும்பிச் செல்; உனக்கு அனுமதி கொடுத்தேன்' என்று சொன்னார்."

இதற்குப்பின் துரோணருக்கு வந்தனஞ் செலுத்தி ஏகலைவன் காட்டுக்குப்போய், துரோணரைப்போல் மண்ணால் பதுமை செய்து அதன்முன் வில் வித்தை கற்றுத் தேர்ந்தான். பின் பாண்டவர்களும் துரியோதனாதியரும் வேட்டைக்குப் போனபொழுது, ஒரு வேட்டை நாய் ஏகலைவனைக் கண்டு குரைக்கிறது. ஏகலைவன் குரைக்கின்ற நாயின் வாயில் ஏழு அம்புகளை ஒரு கொத்தாக விடுவதுபோல் விட்டான். இந்த அற்புத வித்தையைக் கண்டவர்கள், அருச்சுனனிடம் சொல்ல, அருச்சுனன் துரோணரிடம்போய் "என்னை விடவும், உலகத்தைவிடவும், சிறந்த பராக்கிரமமுள்ள வேறொரு சீடன்—நிஷாத அரசகுமாரன் இருப்பது எவ்வாறு?" என்று கேட்கிறான். துரோணர் சிறிது யோசித்து அருச்சுனனை அழைத்துக்கொண்டு ஏகலைவனிடம் வருகிறார். இதை விரித்துக் கூறிவிட்டு, வியாச பாரதம் மேலும் கூறுகிறது.

நிஷாதபுத்திரன் துரோணருக்குக்கிரமப்படி பூசை செய்து, தன்னைச் சீடன் என்று தெரிவித்துக் கைகூப்பி அவர்முன் நின்றான். பிறகு, துரோணர் ஏகலைவனை நோக்கி "வீரனே! நீ என் சீடனாயின், எனக்குக் குருதட்சிணை கொடுக்கவேண்டும்!" என்று சொன்னார். ஏகலைவன் அதைக்கேட்டு மகிழ்ச்சியுற்று 'பகவானே! நான் என்ன கொடுக்கவேண்டும்? குரு எனக்குக் கட்டளையிடவேண்டும். சிறந்த பிரம்ம ஞானியே! குருவுக்குக் கொடுக்கத்தகாதது எனக்கு ஒன்றுமில்லை,' என்று சொன்னான். துரோணர் அவனைப்பார்த்து "நீ கட்டைவிரலைக்கொடுக்கவேண்டும்" என்றார். எப்போதும் உண்மை தவறாதவனாகிய ஏகலைவன் துரோணருடைய அந்தக் கொடுஞ்சொல்லைக்கேட்டுத் தன் சொல்லைக் காப்பாற்றுவதற்காக முன்போலவே மலர்ந்த முகத்தோடும் உற்சாகமுள்ள மனத்தோடும் ஒன்றும் சிந்திக்காமல் தனது கட்டைவிரலை வெட்டி துரோணருக்குத் தந்தான். அதன்பின் அந்தவேடன் பாணத்தை மற்ற விரல்களால் இழுத்துவிட்டான். முன்பிருந்ததுபோல விரைவாக இருக்கவில்லை, பிறகு அருச்சுனன் மனமகிழ்ந்து அச்சத்தை விட்டான்.

இது வடமொழியில் செய்யப்பட்ட வியாச பாரதத்தில், ஆதிபர்வம் சம்பவப் பர்வத்தில் எழுதப்பட்டிருப்பதின் மொழி பெயர்ப்பு. கட்டைவிரலைக் காணிக்கையாகத் துரோணர் கேட்டதை "கொடுஞ் சொல்" என்று வியாசரே எழுதி யிருக்கிறார்.

அடுத்தபடி, இரண்டாவது பகுதியான சபாபர்வம். அதில் சிசுபாலவதம் என்ற உபபர்வத்தில் ஏகலைவனைப்பற்றிப் பேச்சு வருகிறது. தருமர் நடத்திய இராசசூய யாகத்தில், கிருட்டிணனுக்கு முதலாவது மரியாதை தரப்படுகிறது. இதைச் சேதி நாட்டு அரசன் சிசுபாலன் (இவன் கிருட்டினனுக்கு அத்தை மகன்) எதிர்க்கிறான். சிசுபாலனுக்குக் கிருட்டிணன்மேல் எப்பொழுதும் அடங்காப் பகையுண்டு. அதனால் தருமர் கிருட்டிணனுக்கு முதலிடம் தருவதைக் கண்டித்துப் பேசினான். பெருமையும் பராக்கிரமமுமுள்ள பல அரசர்களைப்பற்றி அவன் குறிப்பிடுகிறான்.

"பீஷ்மகராசனையும், சிறந்த சக்தியுள்ள தந்தவக்ராசனையும், பகதத்தனையும், யூமகேதுவையும், மகத நாட்டு சயத்சேனனையும், விராட துருபதர்களிருவரையும், சகுனியையும், பிருகத்பலனையும், விந்தானுவித்தர்களையும், சுவேதனையும், மிக்க பெரும் பாக்கியமுள்ள சங்கனையும், கர்வமுள்ள விருசசேசனையும், பராக்ரமசாலியான ஏகலைவனையும், மகாரதனான கலிங்க நாட்டரசனையும்விட்டு, கேசவனை மகாவீரனென்று ஏன் சிலாகிக்கிறாய்?"

கட்டை விரல் இழந்த பின்னும், பராக்ரமசாலியாகக் குறிப்பிடத்தகுந்த அளவு ஏகலைவன் இருந்திருக்கிறான்.

ஏகலைவன் பாண்டவர்களுக்கும் வேண்டியவனாக இருந்திருக்கிறான். தருமரின் இராசசூய யாகத்திற்குப் பலர் பொருள்கள்—வெகுமதிகள் அனுப்பியபொழுது,

"ஏகலைவன் பாதுகைகள் அனுப்பினான்" என்று கூறப்பட்டிருக்கிறது (வியாச பாரதம், சபா பர்வம், தியூத பர்வம்)

பன்னிராண்டு வனவாசமும், ஒரு ஆண்டு மறைவு வாசமும் முடிந்து பாண்டவர்கள் மீண்டு வந்து, நாட்டில் பங்கு தரும்படி துரியோதனனிடம் தூதனுப்புகிறார்கள். அது பலன் தரவில்லை. அப்பொழுது போருக்கு இருவரும் ஆயத்தமாகிறார்கள். பாண்டவர்களுக்குப் பலம் சேர்க்கும் நோக்கத்துடன், துருபதன் தூதர்களை அனுப்புகிறான் மற்ற அரசர்களுக்கு. அந்தஅரசர்களில் ஏகலைவன் பெயர் இருக்கிறது.

......ருக்மியும், சனமேசயனும், ஆசாடனும், வாயு வேகனும், பூர்வபாலி என்கிற அரசனும், பூரிதேசனும், தேவகனும், புத்ரர்களோடு ஏகலைவனும், காருசர்க ளென்ற அரசர்களும்......

(வியாசபாரதம்—உத்யோக பர்வம்—சேனோத்யோக பர்வம்)

ஏகலைவன் கிருட்டிணனால் கொல்லப்பட்டான் என்பது கீழிரண்டு ஆதாரங்களால் தெளியப்படும். சராசந்தன் என்பவன் சூழ்ச்சியால் கொல்லப்பட்டதும், அர்ச்சுனன் கிருட்டிணனைப் பார்த்து "எங்களுக்கு நன்மை செய்வதன் பொருட்டு சராசந்தன் முதலான அந்த அரசர்கள் எந்த உபாயங்களால் எவ்வாறு கொல்லப்பட்டார்கள்?" என்று வினவ, சராசந்தன், சிசுபாலன், ஏகலைவன் முதலியவர்களை உபாயத்தாற் கொன்றமையைப் பரந்தாமன் கூறுகிறார். ஏகலைவனைப்பற்றிவரும் இடத்தைமட்டும் கீழே கொடுக்கிறோம்.

"உண்மையான பராக்ரமத்தையுடைய நிஷாதபுத்ரனும், துரோணரால் ஆச்சார்யத் தன்மை முன்னிட்டு உனக்கு நன்மை உண்டாக்க வேண்டியதற்காகக் கபடத்தினால் கட்டைவிரலையிழந்தவனாகச் செய்யப்பட்டான். விரலுறை கட்டிக்கொண்டவனும் திடமான பராக்ரமமுள்ளவனும் அதிகக் கர்வமுள்ளவனும் நிஷாத புத்ரனுமான அந்த வனசரன் வேறொரு இராமனைப்போல விளங்கினான். பார்த்த! ஏகலைவன் கட்டை விரலுடனிருந்தால், அவனை இராட்சதர்களோடும் உரகர்களோடுங் கூடின தேவர்களும் தானவர்களும் போரில் ஒருகாலும் வெல்வதற்குச் சக்தியுள்ளவர்களாகார்கள். அவ்வாறு இருக்க, திடமான கைப்பிடியுள்ளவனும் சமர்த்தனும் இரவிலும் பகலிலும் ஓயாமல் அம்புகளை பிரயோகிக்கிறவனுமான ஏகலைவன் மனிதர்களால் மட்டும் ஏறிட்டுப் பார்ப்பதற்குக் கூடியவனாயிருப்பனா? உன் நன்மைக்காகவே அவன் யுத்த முனையில் என்னால் கொல்லப்பட்டான்."

(வியாசபாரதம்—துரோணபர்வம்—கடோத்கசவதம்)

ஏகலைவன் கிருட்டிணனால் கொல்லப்பட்டான் என்பது பின்பும் அவரது அரிய செயல்களில் ஒன்றாகக் கூறப்படுகிறது. பாரதத்தின் கடைசியில் துவாரகையிலிருந்த யாதவர்கள் ஒருவரையொருவர் அடித்துக்கொண்டு இறக்கின்றனர். யாதவரழிவைப்பற்றி, கிருட்டிணரின் பாட்டனான வாசுதேவர் அருச்சுனனிடம் சொல்லும்பொழுது, எல்லாவற்றையும் அனுமதித்துகொண்டு கிருட்டிணன் இருந்தான் என்று சொல்கிறார். கிருட்டிணனைப்பற்றி சொல்லும்பொழுது அவன் வலிமைப்பற்றி அவர் சொல்கிறார். அதில் கூறப்படுகிறது:

"சேதி தேசத்தரசனான சிசுபாலனையும், வேடனான ஏகலைவனையும், கலிங்கர்களையும், மாகதரர்களையும், மலைநாட்டிலிருந்த மன்னர்களையும், கொன்றவனும் பிரபுவுமான அந்த வசுதேவன்"

(வியாசபாரதம்—மௌசல பர்வம்)

ஏகலைவனைக் கிருட்டிணன் உபாயத்தாற் கொன்றார் என்பது மட்டும் தெரிகிறதேயன்றி, எப்படிக்கொன்றார்? எப்பொழுது கொன்றார்? என்பவை புலப்படவில்லை. பாரதத்தில் அந்தக்குறிப்புகள் எங்கும் காணப்படவில்லை.

ஏகலைவன் கொல்லப்பட்டபின், அவனுடைய மகன் அரசாண்டான் என்பதும், அசுவயாகத்திற்கான குதிரையுடன் அருச்சுனன் வலஞ்செய்து வந்தபொழுது ஏகலைவனின் மகன் சண்டையிட்டான் என்பதும் பாரதத்தில் இருக்கின்றன. அருச்சுனன் யாகக் குதிரையை நடத்திக்கொண்டு, காசி, கோசலம், கிராதம், தங்கணம், தசார்ணம் ஆகிய நாடுகளைக்கடந்து "வேடர்களுக்கரசனான ஏகலைவனுடைய நாட்டுக்குச் சென்றான். அப்பொழுது ஏகலைவனுடைய மகன் அந்த அர்ச்சுனனுடன் போர்செய்தான். அர்ச்சுனன் அவ்விடத்தில் வேடர்களுடன் மயிர்சிலிர்க்கத்தக்க யுத்தத்தைச்செய்தான்.

(வியாசபாரதம்—அசுவமேதிகா பர்வம்—அனுகீதாபர்வம்)

மேற்பட்ட பகுதிகளைத் தொகுத்துப்பார்த்தால், ஏகலைவனின் கதை அவன் கட்டைவிரல் வெட்டப்பட்டதுடன் நின்றுவிடவில்லை என்பது தெரியும். ஏகலைவன் நிஷாதநாட்டு இளவரசன், பின் அரசனாக இருந்திருக்கிறான். வேடர்குலத்தைச் சேர்ந்தவன் என்பதற்காக தர்மந்தெரிந்த துரோணர் அவனைச் சீடனாக ஏற்றுக்கொள்ள மறுத்துவிடுகிறார், பின் அவன் ஒப்புயர்வற்ற வில்வீரனாக ஆனது கண்டு, அருச்சுனனுக்காக அவன் கட்டைவிரலைக் காணிக்கை கேட்கிறார். இவ்வாறு கேட்டதை "கொடுஞ்சொல்" என்று வியாசர் வரைகிறார். பின் கிருட்டிணன் "கபடத்தினால் கட்டைவிரலை இழந்தவனாகச் செய்யப்பட்டான்." என்று கூறவேண்டியிருக்கிறது. துரோணர் சூது எண்ணத்தை, பாரதத்தில் யாரும் மறைக்கவில்லை. கட்டைவிரல் இழந்ததும், அவன் விரலுறை ஒன்று போட்டு வீரனாக இருந்திருக்கிறான். அவன் வீரதீரம் பல்வேறு நாட்டரசர்களால் பேசப்பட்டிருக்கிறது. "பராக்கிரமமுள்ள ஏகலைவன்." என்று பலர் அவனைப்புகழ்ந்திருக்கிறார்கள்.

தேவர்களும் அசுரர்களும் ஒன்றுகூடி எதிர்த்தாலும் ஆற்றமாட்டாத வீரத்தைப் பெற்றிருந்தான் ஏகலைவன். கட்டைவிரல் வாங்கப்பட்ட பின்னும் அவனைக்கண்டு சில வீரர்கள் அஞ்சினர். அதனால் பாரதயுத்தம் ஆரம்பிக்குமுன், பாண்டவர்கள் அவனைத் தங்கள் பக்கம் சேரும்படி தூதனுப்புகிறார்கள். அதன் பலன் என்னவென்பதை பாரதம் கூறாவிட்டாலும், பின்பு கண்ணன் அருச்சுனனிடம் கூறுவதிலிருந்து பாண்டவர்களுக்கு எதிராக இருந்தான் என்று கொள்ளவேண்டும். கடைசியாக, கிருட்டிணனின் உபாயத்தால் யுத்தமுனையில் ஏகலைவன் கொல்லப்பட்டான் என்பது தெரிகிறது. ஏகலைவனை எதிர்த்து நின்று வெற்றி பெறுவார் யாருமில்லையாதலால், சூழ்ச்சியால் அவன் கொல்லப்பட்டான்.

ஏகலைவன் ஒருவன் உண்மையில் இருந்தாகவோ, இவ்வாறு நடந்ததாகவோ, இங்கு வலியுறுத்தப்படவில்லை. பாரதக் கதையில் வரும் சில பகுதிகளை—குறிப்புகளைச் சேர்த்து, தொடர் கதையாக ஏகலைவனின் கதை காட்டப்படுகிறது. பாரதக்கதை எழுதப்பட்ட காலத்தில், வடநாட்டில் நிலவிய வகுப்பு வேறுபாடுகளும், உயர்ந்த குலத்தவர்கள் தாழ்ந்த குலத்தவர்களுக்குப் பயிற்சிதர மறுத்ததும், மீறி ஓரிருவர் சிறந்தவர்களாக வந்தால், பலத்தாலோ, சூழ்ச்சியாலோ அழித்துவிடுவதும், ஆகியவை பாரதக் கதையில் இடம் பெற்றுள்ளன. பாரதம் எழுதப்பட்ட காலத்திலிருந்த நிலைமையைக் காணப் பாரதக் கதை ஓரளவு உதவும்.

இயற்கை இன்னிசை

★

காற்றின் உதவியின்றி நெருப்பின் உதவிகொண்டு இசையுண்டாக்கும் வழியை பிரெஞ்சு அறிவியலறிஞர் ஒருவர் கண்டுபிடித்துள்ளார். சிறு சிறு விளக்குகளின் உதவியைக்கொண்டு இசையை அவர் எழுப்புகின்றார்.

மலேய நாடுகளில் மூங்கிற்காடுகளில் புல்லாங்குழல் ஊதுவது போன்ற இசை எழும். சீன தேயத்திலுள்ள ஓராற்றின் இருகரைகளிலுமுள்ள கூழாங்கற்களின்மேல் நீர் விரைந்தோடும்போது இசை எழுகின்றது. ஸ்காட்லாந்தின் கடற்கரையோரங்களிலுள்ள மணல்மேல் நடந்து சென்றாலும், கொம்புகொண்டு தட்டினாலும் இசை எழுகின்றது. பண்டைக் கிரேக்கர்கள் நீரின் உதவியைக்கொண்டு பல வாச்சியங்களை வாசித்துவந்தனர்.

ஒழுக்கந் தவறினான்—ஒதுக்கினாள்!

[இரா. நெடுஞ்செழியன்]

கடற்கரை! அதனை அடுத்து வெண்மணற் பரப்பு! அதனையடுத்து மலர்கள் பூத்துக் குலுங்கும் புன்னைமரங்களும், ஞாழல் மரங்களும் நிறைந்த சோலைகள்! சுற்றிலும் கண்டல் மரங்கள்! எல்லாவற்றையும் சேர்த்து வேலி போடப்பட்டிருக்கிறது!

கடற்கரையிலுள்ள செம்படவர்கள் ஓயாமல் மீன பிடிக்கின்ற தொழிலில் ஈடுபடுகிறார்கள்! அவர்கள் செம்மையாக வலிய கயிற்றால் பின்னப்பட்ட வலைகளைத் தோணிகளில் ஏற்றிக்கொண்டு, இடிபோல் முழங்குகின்ற அலைகளையுடைய கடலில், பரிக்கோற்காரர்கள் பிணித்துச் செலுத்துகின்ற அடக்குதற்கரிய ஆண் யானையைப்போல, தோணிகளைச் செலுத்துகிறார்கள்!

புன்னை மரங்களினின்றும் உதிரும் மகரந்தப் பொடியைக் காற்று ஏந்திச் செல்ல, நீர்த் துறையில் குந்தியிருக்கும் கொக்கின் வெள்ளிய முதுகில் அதுபட, கொக்கு பொன்னிறமாகக் காட்சியளிக்கும்!

இப்படிப்பட்ட இயற்கையழகும், செயற்கைச் சிறப்பும் பொருந்தி விளங்கும் கடற்கரையிடத்துக்கு உரியவன்தான் அத்தலைவன். அவனிடம் காதல்கொண்டு அவனுக்கு வாழ்க்கைத் துணைவியாக ஆக எண்ணுகிறாள், அக்கடற்கரையை அடுத்த சிற்றூரில் வதியும் வஞ்சிக்கொடியாள் ஒருத்தி. இருவர்க்கும் திருமணம் மிகச் சீரும் சிறப்புமாக நடந்தேறுகிறது.

திருமணம் நடந்தேறி, சில திங்கள்கள் கழிகின்றன. தலைவி கருவுறுகிறாள். இதுதான் அவளுக்குத் தலைமை மகப்பேறு ஆதலால், அச்சமும், அசதியும், சோர்வும், தளர்வும் அவளுக்கு ஏற்படுகின்றன. தலைவன் காட்டும் அன்பாலும், ஆதரவாலும் தன் அச்சத்தையும், சோர்வையும் போக்கிக்கொண்டு இனிதே வாழ்ந்துவருகிறாள்.

பெண்கள் எல்லோர்க்கும் இயல்பாக ஏற்படுகின்ற 'தலைமை மகப்பேறு ஆண்மகப்பேறாக இருக்கவேண்டும்' என்ற விருப்பம் தலைவிக்கு ஏற்படுகிறது. தன் விருப்பத்தை அன்பு மொழியால் குழையக் குழையத் தலைவனிடம் அடிக்கடி கூறுவதும், பிறக்கப்போகும் பிள்ளைக்கு என்ன பெயரிடுவது, அதனை எப்படி அழைப்பது, எப்படியெல்லாம் சீராட்டிப் பாராட்டுவது, எந்தப்படி வளர்ப்பது என்பன பற்றியெல்லாம் தலைவனோடு கலந்துரையாடுவதும் தலைவியது பொழுது போக்காக இருந்து வருகிறது. அவள் மிக்க பெருமித உணர்வோடு தனக்கு மகவு பிறக்கும் எதிர்காலத்தை எண்ணி எண்ணி மகிழ்ந்துகொண்டிருக்கிறாள்.

தலைவன் தலைவியிடத்து நீங்காப்பற்றும், மாறா அன்பும் கொண்டு இல்லற வாழ்வை இனிதே நடத்திக்கொண்டு வருகிறான். கருவுற்றிருக்கும் தன் காதலியை அன்போடும் ஆதரவோடும் பேணிவருகிறான்.

ஊரிலுள்ள இளைஞர்களை வலைபோட்டு இழுத்துப், பரத்தையர் சேரிக்குக் கொண்டு போய், அங்குப் பரத்தையர்களோடு அவர்களைத் தொடர்பு படுத்திவிடும் பழக்கத்தைக் கொண்ட பாணன் ஒருவன் தலைவனிடம் நெருங்குகிறான். மனைவி கருவுற்றிருக்கும் இந்தப் பொழுதுதான், தலைவியை விட்டுத் தலைவனைப் பிரிப்பதற்கு ஏற்ற காலமாகும் என்று கருதிக்கொண்டு தலைவனோடு நட்பு ஏற்படுத்திக்கொண்டு அவனது மனதைப் பரத்தையர் சேரிப்பக்கம் திருப்புவதற்கான மயக்க மொழிகளைக் கூறுகிறான்.

பரத்தையர் சேரியிலுள்ள பரத்தையரின் அழகைப்பற்றியும், அவர்களது நடையுடை நடிப்புப்பற்றியும், அவர்களோடு விளையாடக் கூடிய காமவிளையாட்டுக்களைப்பற்றியும், அவர்களிடம் பெறக்கூடிய காமவின்பத்தைப்பற்றியும் பாணன் மிகைபடக் கிளர்ந்து கூற, அது கேட்கும் தலைவன் சிறிது மனங்கலங்கி பரத்தையிடத்து மனமயக்கங் கொள்ளத் தொடங்குகிறான். ஒரு குறிப்பிட்ட பரத்தையிடத்து ஈடுபாடு கொள்ளத்தக்க வகையில்,

தலைவனது மனத்தை மெள்ள மெள்ளத் திருப்பி விடுவதில் வெற்றி பெறுகிறான் பாணன்.

மகப்பேறுக்காலம் நெருங்க நெருங்கத் தலைவன் தலைவியைப் பொறுத்து ஒருவித அருவருப்பு உணர்வை ஏற்படுத்திக்கொண்டு, பரத்தையிடத்தில் தொடர்புகொள்ளப்பேராவலுடையவனாக மாறுகிறான். பாணன், இது தான் தக்க பொழுது என்று கருதிக்கொண்டு, ஒருநாள் இரவு, தலைவியும் தோழியும் நன்கு உறங்கிக் கொண்டிருக்கும்போது தலைவனை அழைத்துக்கொண்டு பரத்தையர் சேரிக்குப் போகிறான்; அங்கு ஒரு பரத்தையோடு தொடர்புபடுத்தி வைக்கிறான். தலைவன் பரத்தையின் ஆடல்பாடலிலும், அழகிலும், காமக் களியாட்டத்திலும் மயங்கி அவளது அரவணைப்பில் திளைக்கத் தொடங்குகிறான்.

மறுநாள் காலை, பொழுது புலர்ந்ததும், தலைவியும் தோழியும் எழுந்து தலைவனைக் காணாமல் தவிக்கிறார்கள். தலைவன் எங்குச் சென்றானோ, அவனுக்கு என்ன ஏதம் ஏற்பட்டதோ, அவனாகச் சென்றானோ அல்லது வேறு யாரேனும் அவனைக் கொண்டு சென்றார்களோ, அவன் கொடிய விலங்குக்கு இரையானானோ அல்லது கள்வர் யாரேனும் அவனைக் கைப் பற்றிச் சென்றார்களோ என்றெல்லாம் தலைவி எண்ணிஎண்ணி வருந்திக்கொண்டிருக்கிறாள். தோழி ஊரெல்லாம் அலைந்து திரிந்து சுற்றி, உற்றார் உறவினர் வாழுமிடங்களிலெல்லாம் தேடிப் பார்த்துவிட்டுத் தலைவனைக் காணாமல் சோர்வுடன் இல்லம் வந்து சேர்கிறாள். தலைவி சரியானபடி ஊண் உறக்கங் கொள்ளாமல் மிக்க வருத்தத்தில் ஆழ்கிறாள். தலைவன் தன் அன்பு மனையாளை அறவே மறந்துவிட்டுத் தானும பரத்தையுமாகக் காமக் களியாட்டத்தில் மூழ்கிக் காலங்கழித்து வருகிறான். இப்படியாகச் சிலநாட்கள் ஓடுகின்றன.

ஒருநாள் பரத்தையர் சேரிப்பக்கம் வாணிகம் பொருட்டுப் போய்விட்டுவந்த அயல் வீட்டார் ஒருவர், தலைவன் பரத்தையொருத்தியின் வீட்டில் இருந்துவரும் செய்தியைத் தலைவியிடம் கூறுகிறார். அது கேட்டவுடன் தலைவி திடுக்கிட்டுப் போய்விடுகிறாள். உண்மையை அறிந்துவருமாறு தலைவி தோழியைப் பரத்தையர் சேரிப்பக்கம் அனுப்பிவைக்கிறாள். தோழி பரத்தையர் சேரிக்குச் சென்று மறைந்திருந்து உளவறிந்து, உண்மையைத் தெரிந்து கொண்டு வந்து தலைவன் அங்கு இருப்பதைத் தலைவியிடம் உரைக்கிறாள். தலைவி கொண்டிருந்த வருத்தமெல்லாம், தலைவன்மீது பாய்ந்து நிற்கும் சினமாக மாறுகின்றன. எனினும் இல்லறத்தை இனிதே நடத்துவதில் கண்ணுங் கருத்துமாக இருந்து வருகிறாள். தனது வயிற்றிலிருக்கும் குழவியே தனக்கு எதிர் காலத்தில் ஏற்ற துணை என்று எண்ணி ஆறுதல் பெறுகிறாள்.

சில திங்கள்கள் கழித்துத் தலைவி அழகான ஆண்மகவு ஒன்றை ஈன்றெடுக்கிறாள். மகன் பிறந்ததும் தலைவியின் வருத்தத்தில் பெரும் பகுதி கழிகின்றது. மகனை அன்போடு சீராட்டிப் பாராட்டி வளர்ப்பதில் தன் முழுக் கவனத்தையும் செலுத்துகிறாள். ஒருநாள் மகனுக்கு நெய் முழுக்காட்டி, தானும் நெய்முழுக்காடி நறுமணப்புகையில் தன்னையும், குழந்தையையும், கூந்தலையும் உலர்த்திக் கொண்டிருக்கிறாள்.

தனக்கு மகன் பிறந்துள்ளான் என்ற செய்தியைத் தலைவன் எப்படியோ கேள்வியுற்றுத், தலைவியையும், மகனையும் காண ஆவல் கொள்கிறான். அவளைப் புறக்கணிக்கும் நாணமற்ற செயலைச் செய்துவிட்டு, இப்பொழுது அவள் முகத்தில் எப்படி விழிப்பது என்று எண்ணித் தலைவன் தவிக்கிறான். தலைவியினது மனநிலையை அறிந்துவரவும், அவளது சினத்தைப் போக்கி வரவும் பாணனைத் தூதாக அனுப்புவது என்ற முடிவுக்கு வருகிறான். தலைவனது கட்டளையை நிறைவேற்ற பாணன் தலைவியிடம் செல்ல ஒருப்படுகிறான்.

பாணன் தலைவனது இல்லத்தை நெருங்கியதும், "தலைவி என்ன கருதுவாளோ? ஏது சொல்லுவாளோ?" என்று அச்சங்கொண்டவனாய் மெல்ல அடியெடுத்துவைத்து வருகிறான். ஓசையேதும் எழுப்பாமல் வீட்டின் வாயிற்படியிலேறி ஒருக்கணித்திருக்கும் கதவின் வழியாக வீட்டினுள்ளே கழுத்தை நீட்டி எட்டிப்பார்க்கிறான். தலைவி மகனை மடியில் கிடத்திக்கொண்டு, ஒரு கையால் கூந்தலைக் கோதிக்கொண்டும் மற்றொரு கையால் மகனைத் தடவிக்கொடுத்துக்கொண்டும் நறுமணப் புகையை நுகர்ந்துகொண்டிருக்கும் காட்சியைக் காணுகிறான்.

பாணன் சிறிதுபொழுது வீட்டின் வெளித் தாழ்வாரத்தில் தயங்கிநிற்கிறான். பிறகு சிறிது துணிவை வரவழைத்துக்கொண்டு மெல்ல கதவைத்தட்டுகிறான். யாரோ கதவைத் தட்டுவதைக் கேள்வியுற்ற தலைவி "யாரது அங்கே?" என்று வினவுகிறாள்.

"நான்தான்!" என்று கூறுகிறான் பாணன்.

"நான் என்றால், யார்?" என்று மீண்டும் கேட்கிறாள்.

"நான்தான் பாணன்!" என்று சொல்லிக் கொண்டு அவன் உள்ளே நுழைகிறான்.

பாணனது தோற்றத்தைக் கண்டதும் தலைவி திடுக்கிட்டுத் திகைத்துப்போய்ச் சினம் பொங்க அவனை உற்று நோக்குகிறாள். பாணன் வாய்பேசாமல் எதிரேஅசைவற்று அச்சத்துடன் நிற்கிறான்.

"எங்கே வந்தாய் நீ? உனக்கு இங்கு இன்னமும் என்னவேலை இருக்கிறது?" என்று தலைவி வினவுகிறாள்.

"உங்களைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்தேன்" என்கிறான்.

"நீயாக வந்தாயா? அவர் உன்னை அனுப்பி வைத்தாரா?"

"குழந்தை பிறந்துள்ள செய்திகேட்டு உங்கள் நலத்தையும் குழந்தைநலத்தையும் அறிந்துவரும்படி என்னை அனுப்பினார்"

"என்னைப்பற்றியும், என்குழந்தையைப் பற்றியும் அவர் ஏன் கவலைப்படுகிறார்? எங்களைப் பற்றிக் கவலைப்படவேண்டாம், பரத்தையரிடத்திலேயே மனமகிழ்வோடு திளைத்திருக்கும்படி அவரிடம் நீ போய்ச்சொல்லு?"

"உங்களைக் காணவேண்டும் என்று அவர் எவ்வளவு துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கிறார் தெரியுங்களா?"

"நான் கருவுற்றிருக்கும்போது, நள்ளிரவில் என்னைத் தனியே விட்டுவிட்டு ஒரேபோக்காகச் செல்லும்போது அவருக்கு ஏற்படாத துடிப்பு, இப்பொழுதுமட்டும் எங்கிருந்து வந்துவிட்டது? அவருடைய பசப்பு மொழிகளுக்கும், நடத்தைகளுக்கும் இணங்குபவள் நானல்ல என்று அவரிடம் போய்ச்சொல்லு!"

"நீங்கள் சினங்கொள்ளக்கூடாது! அவரை நீங்கள் வெறுக்கக்கூடாது! அவரது பிழையைப் பொறுத்து, அவரை மன்னித்து, விரும்பி ஏற்றுக்கொள்ளவேண்டும்!"

"செய்யவேண்டியகேடுகளை யெல்லாம் செய்துவிட்டு, இவ்வளவுக்கும் நீவேறு உடந்தையாக இருந்துவிட்டு, இப்பொழுது மன்னிக்கும்படியாகவா கூறுகிறாய்? என்முன் நில்லாதே போ!"

"என்ன இருந்தாலும் அவர் உங்களுடைய தலைவர் அல்லவா? அவரை நீங்கள் ஏற்றுக் கொள்ளத்தான்வேண்டும்!"

"'அவர் உனக்கு உறவுடைய கணவன் போல்தெரியவில்லையே! அவர்யாரோ அயலார் போல ஆகிவிட்டாரே' என்று ஊரார் கூறிய இழிச்சொற்களைக் கேட்டுக்கேட்டு நான் மரத்துப் போய்விட்டேன். இனி என்னிடம் அவரைப்பற்றி ஏதும் பேசாதே! போய்விடு!"

"நீங்கள்தானே அவருக்கு இல்லக்கிழத்தி ஆவீர்கள்! பரத்தை, எப்படியும் அவரால் கைவிடப்படவேண்டிய ஒருத்தியல்லவா?"

"அவரால் விரும்பப்படும் பரத்தை அவருக்கு மனைக்கிழத்தி ஆகிவிட்டாள் என்று ஊரார் எப்பொழுதோ சொல்லிவிட்டார்களே! ஊராரின் அந்தக் கூற்றை இனி எப்படி மாற்றி எழுதமுடியும்? எனக்கும் அவருக்கும் இனி எவ்வித உறவும்இல்லை! அவர்பேச்சைப் பேசிக்கொண்டு இனிமேல் நீஇங்கு வராதே! போய்விடு!"

"நீங்கள் எப்படியும் தலைவர்பால் இரக்கங் கொள்ளத்தான் வேண்டும்!"

"இங்கே நீ நிற்காதே! போ என்றால் போய்விடு!" என்று அதட்டிக்கொண்டு தலைவி வாரிச்சுருட்டிக்கொண்டு சினத்தோடு எழுகிறாள். பாணன் தலைவியின் எதிரில் நிற்க அஞ்சி வீட்டின் வெளியே பின்னோக்கி நகர்ந்து செல்கிறான், பாணன் வாயிற்படியைத் தாண்டியதும் தலைவி கதவை இழுத்துச் சாற்றித் தாழ்ப்பாள் இடுகிறாள்.

பாணன் வந்தவேலை முடியாததால் வருத்தத்தோடு தலைவனிடம் செல்கிறான்!

இது நற்றிணை-74ஆம் செய்யுளின் கருத்தை அடிப்படையாகக் கொண்டு தீட்டப்பட்ட சொல்லோவியமாகும். இந்தச் செய்யுள் நெய்தல் திணையின்பாற்பட்ட 'தலைவி பாணனுக்கு வாயில் மறுத்தது' என்னும் பிரிவைச் சார்ந்ததாகும் இதனை இயற்றியவர் **உலோச்சனார்** என்னும் புலவராவார். இவர் நெய்தல் நிலச்சிறப்பினை மிக அழகாக அமைத்துப் பல பாடல்களிலே பாடியுள்ளார். இவர் இராசசூயம் வேட்ட பெருநற் கிள்ளியையும், பெரியன் என்னும் வள்ளலையும், அவனது பொறையாற்றையும் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவரது ஊர் கடற்கரையின் கண்ணதாயுள்ள காண்டவாயில் என்று கூறப்படுகிறது. இவர் பரதவர் மரபினைச் சேர்ந்தவராக இருக்கக்கூடும் என்று சொல்லப்படுகிறது. இவர் பாடிய பாட்டுக்கள் நற்றிணையில் இருபதும், குறுந்தொகையில் நான்கும், அகநானூற்றில் எட்டும், புறநானூற்றில் மூன்றுமாக முப்பத்தைந்து பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

வடிக்கதிர் திரித்த வன்ஞாண் பெருவலை
இடிக்குரல் புணரிப் பெளவத்(து) இடுமார்
நிறையப் பெய்த அம்பி காழோர்
சிறையரும் களிற்றின் பரதவர் ஒய்யும்
சிறுவீ ஞாழல் பெருங்கடல் சேர்ப்பனை
ஏதி லாளனும் என்ப போதவிழ்
புதுமணற் கானல் புன்னைநுண் தாது
கொண்டல் அசைவளி தூக்குதொறுங் குருகின்
வெண்புறம் மொசிய வார்க்கும் தெண்கடல்
கண்டல் வேலிய ஊர் அவன்
பெண்டெனா அறிந்தன்று பெயர்த்தலோ அரிதே.

நற்றிணை - 74

[பொழிப்புரை: திருத்தமாகச் செய்யப்பட்ட கதிரிட்டு முறுக்கிய வலிய கயிற்றால் பின்னிய பெரியவலையை இடிபோல முழங்குகின்ற அலைகளையுடைய கடலிலிடும் பொருட்டு, நிறைய ஏற்றப்பட்ட தோணியைப் பரிக்கோல்காரர் பிணித்துச் செலுத்துகின்ற அடக்குதற்கரிய களிற்றுயானையைப் போலப் பரதவர் செலுத்தும் சிறியமலரையுடைய ஞாழல் மரங்களையுடைய பெரிய கடற்கரைக்குத் தலைவனைக்குறித்து "அவன் உன்க்கு நட்புடையனல்லன்; ஏதிலாளனுமாயினான்" என்று பலரும் கூறுவர்; அதற்கேற்ப மலர் விரிகின்ற புதிய மணற்பரப்பையுடைய சோலையிலுள்ள புன்னையின் நுண்ணிய மகரந்தப்பொடி ஓடுகின்ற கீழ்காற்றுவந்து மோதுந்தோறும் கொக்கின் வெள்ளிய முதுகில் நெருங்கத் தெளிக்கும் தெளிந்த கடற்கரையிலுள்ள கண்டல்மரம் நிரம்பிய வேலியையுடைய இவ்வூரானது "அவனால் விரும்பப்படும் பரத்தையானவள் அச்சேர்ப்பனுக்கு மனைக்கிழத்திஆயினாள்" என்று கூறுகின்றது; அப்படி உண்டாகிய சொல்லைப் பெயர்த்தொழித்தல் இனி யாவர்க்கும் அரியதொரு செயலாகும்; ஆகையால், பாண! இங்கே நீ வராதே! போ!

ஞாண் - கயிறு; புணரி - அலை; அம்பி - தோணி; காழோர் - பரிக்கோல்காரர்; ஒய்யும் - செலுத்தும்; வீ - பூ; ஏதிலாளன் - அயலான்; தூக்கும் - அசைக்கும்; குருகு - கொக்கு; மொசிய - நெருங்க.]

ஒழுக்கந் தவறிய-கடமை தவறிய கணவனை வெறுத்தொதுக்கித் தள்ளிவிட்டு, மனைவி தன் அருமைமகனோடு இல்லறநெறியை இனிது நடத்தும் மாண்பு பண்டைத் தமிழகத்தில் நிலவிவந்ததை இச்செய்யுள் அழகுறப் படம் பிடித்துக்காட்டுகிறது. கணவனைவிட மனைவி ஊராரின் பழிச்சொல்லுக்கும், இழிச்சொல்லுக்கும் எவ்வளவு அஞ்சி நடக்கும் தன்மையள் என்பது இச்செய்யுளில் இனிது உணர்த்தப்படுகிறது.

பரதவர் தாம் திரித்த பெருவலையைக் கடலில் வீசி மீன்பிடிக்க எண்ணித் தோணியிலேற்றிச் செலுத்துவர் என்ற கூற்றின் மூலம் தலைவன் தான் அறிந்த சூழ்ச்சியை ஒரு தூதாகிய பாணன் வழியேவிடுத்துத் தன்னை வயப்படுத்த எண்ணுகிறாள் என்ற கருத்தைப் பாணனுக்குத் தலைவி உள்ளுறைப் பொருளாக உணர்த்துகிறாள். அதுபோலவே கீழ்க்காற்று மோதுதலாலே புன்னையின் நுண்ணிய தாது கொக்கின் மேலுதிர்ந்து அதனை மறைக்கும் என்ற கூற்றின் மூலம் தலைவன் பிரிதலினால் ஏற்படும் காமநோய் தாக்குதலாலே, பசலை தோன்றி தன் உடல்முழுவதும் மூடி மறைத்து தன்னை வேறுபடுத்தியது என்பதைத் தலைவி உணர்த்துகிறாள்.

பரதவர் வலைகளைத் தோணியில் ஏற்றிக்கொண்டு, அலைகடலில் அதனை செலுத்துவதற்குப், பரிக்கோல்காரர்கள் அடக்குதற்கரிய ஆண்யானையைப் பிணித்துச் செலுத்துவதை உவமையாக்கிக் காட்டியிருப்பது மகிழ்வதற்குரியதாகும்.

கடற்கரையில் ஞாழல்மரங்களும், புன்னை மரங்களும் கண்டல் மரங்களும் வளரும் இயல்பும், மீனை உண்பதற்காகக் கொக்கு கடற்கரையில் குந்தியிருக்கும் இயல்பும், கயிற்றினைக் கதிரிட்டு முறுக்கும் இயல்பும் இச்செய்யுளில் உணர்த்தப்படுகின்றன.

விடுதலை

[செல்வன்]

வயது எழுபத்திரண்டு. நரைபடிந்த மயிர், கந்தல் உடை, ஒளியிழந்த கண்கள், பொலிவு இழந்த வாழ்வு. "குடு குடு" கிழம் என்பார்களே அதற்கு ஒரு இலக்கணமாக இருந்தாள் அந்தக் கிழவி. அவளைத் தொட்டுத் தாலி கட்டிய கணவனோ, அவள் தொட்டிலில் இட்டுத் தாலாட்டி வளர்த்த பிள்ளையோ இல்லை. தன்னந்தனியாக அவளைத் தவிக்க விட்டு விட்டு அவள் கணவன் இறந்துவிட்டான். பாசத்துடன் வளர்த்த பிள்ளை பசிக்கொடுமை தாங்காமல், கூலி வேலை கிடைக்காதா எனத் தேடி வெளிநாடு சென்றுவிட்டான். வேண்டா வெறுப்பாகத்தான் வெளிநாடு சென்றான்- வேறு வழி இல்லாத காரணத்தால். தாயை எவ்வளவோ மன்றாடித் தன்னுடன் வரும்படி அழைத்தான். வாழ்வின் பிற்பகுதியில் இருக்கும் அவள், தான் பிறந்து வளர்ந்த மண்ணைவிட்டு வர மறுத்துவிட்டாள். அவனுக்குமட்டும் என்ன 'பிறந்த மண்' என்ற பாசம் இல்லாமலா போய்விட்டது. பிறந்த நாட்டில் பிழைக்க வழி இல்லாவிட்டால் பிறந்த நாட்டிலேயே செத்து மடியவேண்டுமா! இது அவன் எண்ணம்.

எனவே வெளிநாடுசென்றான். இன்றுவரை அவனிடமிருந்து கடிதம் ஒன்றும் வரவில்லை. இருக்கிறானா இறந்தானா என்று கூடத் தெரிய வகையில்லை. கிழவி, திண்டாடித் தெருவில் நிற்கிறாள் கால்வயிற்றுக் கஞ்சிக்காக. படித்துப் பட்டம் பெற்றவர்கள், உடல் வலிவு பெற்றவர்கள் இவர்களுக்கே வேலை இல்லாமல் திண்டாடுகின்ற இந்நாளில், வாழ்வின் கடைக்கோட்டில் வழுக்கிக்கொண்டு நிற்க முயற்சிக்கும் இந்த வயோதிகக் கிழவிக்கு யார் வேலை கொடுப்பார்கள். இரக்கப்பட்டு யாரேனும் வேலை கொடுத்தால் கிழவியின் உடலில் வலு இருக்கிறதா வேலையைச் செய்ய. இரண்டு நாள் பட்டினி. மூன்றாம்நாள் காலை. தலைசுற்றியது. குழிவிழுந்த கண்களில் பார்வை மங்கிக்காணப்பட்டது. உயிர் அணுக்கள் ஒவ்வொன்றும் உயிர்வாழத் துடிக்கும் இவ்வுலகில், இந்தக் கிழவிமட்டும் பட்டினி கிடந்து உயிர்விட வேண்டுமா? கால்கள் ஒன்றையொன்று பின்னிக்கொண்டன. அவளால் நடக்க முடியவில்லை. ஒரு வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்தாள். இல்லை இல்லை! களைப்பால் சோர்ந்து விழுந்தாள். கிழவியைக் கண்டதும் திண்ணையில் விளையாடிக்கொண்டிருந்த சிறுமி "ஐயோ! அம்மா பிசாசு" என்று அலறிக்கொண்டு வீட்டுக்குள் ஓடினாள். அதைத் தொடர்ந்து "அழாதேடி கண்ணு! எங்கே பிசாசு? சொல்லு, அப்பா வரவிட்டுச் சொல்லி அடிக்கச் சொல்லலாம்" என்று கூறித் தேற்றியவாறு குழந்தையை எடுத்துக்கொண்டு வாசலுக்கு வந்த அவள்,

"ஏ! கிழட்டுப் பொணமே, குழந்தையை பயமுறுத்தினியா? அக்கம் பக்கம் பார்க்கிறது, ஆள் இல்லாட்டி குழந்தை கழுத்திலெ, காதிலெ இருக்கிறதைக் கழட்டிக்கிட்டுப் போகிறது, சீச்சீ, போ, எந்திரிச்சு" என்று எரிந்து விழுந்தாள்.

"அம்மா, தாயே! நானும் புள்ளைகுட்டிக்காரி தானம்மா! என்னமோ என் காலவித்தியாசம் இந்த மாதிரி கஞ்சிக்கு இல்லாமெ அலைஞ்சு திரியிறேன். நான் திருடியில்லேம்மா"

"என்னடி, எந்திரிச்சுப் போண்ணா ஏதேதோ பேசுறியே, எரிச்சுப்போடறவ மாதிரில்லெபார்க்கிறா. இந்தா மரியாதையாப் போறயா? இல்லை புடிச்சுத்தள்ளச் சொல்லட்டுமா"

இதற்குமேல் அந்த அம்மாளிடம் பேசிப் பயனில்லை என நினைத்து, தூணைப்பிடித்தவாறு தட்டுத்தடுமாறி எழுந்துநடக்க ஆரம்பித்தாள் கிழவி. மூன்றாவது வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்துகொண்டு ஒரு பையன் உரத்த குரலில் படித்துக்கொண்டிருந்தான். கிழவியைக் கண்டதும் ஏதோ அதிசயப்பொருளைப் பார்ப்பதுபோலப் பார்த்துவிட்டு மீண்டும் படிக்க ஆரம்பித்தான். "பெரிய மீன் சிறுமீன்களைத் தின்றுவிடும்" அந்தப்பையன் படித்தவைகளில் இந்தத் தொடர் மாத்திரம்தான் கிழவியின் காது

களில் விழுந்தது. நீரில் வாழும் இனம். பசி தாங்காமல் தன் இனத்திலேயே சிறு உயிர்களை விழுங்கி வாழ்கின்றன. ஆனால் கிழவி மனிதஇனம் ஆயிற்றே-பகுத்தறிவு படைத்த இனம் என்று பறைசாற்றப்படும் இனம்.

பெரியமீன், சிறு மீனைப்பார்ப்பதுபோல, சிறுவனை உற்றுப்பார்த்தாள் கிழவி. கொட்டாவி விட்டவாறு சிறுவன் தொடர்ந்து படித்துக்கொண்டிருந்தான். ஆள் அரவம் இல்லாத ஒதுக்குப்புறமாக உட்காரலாம் என எண்ணினாளோ என்னவோ, கிழவி நடந்துகொண்டிருந்தாள்.

ஒரு பாழடைந்தவீடு. பாதுகாப்பின்றி இருந்தது. அதன்முன் அமர்ந்தாள். பசி வயிற்றைக்கிள்ளியது. நா, வரண்டது. பசியுணர்ச்சி தலையெடுத்து உச்சநிலையில் இருந்தது. "ஏற்பது இகழ்ச்சி" என்று திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படித்தவள்தான், "பசி வந்திடப்பத்தும் பறந்தது" பிச்சையெடுத்தாள், எத்தனை நாளைக்குத்தான் அப்படிப் பிச்சையெடுத்து வயிறுவளர்க்கமுடியும்!

'விடிஞ்சு எந்திரிச்சா இந்தப்பிச்சைக்காரர் தொல்லையாபோச்சு' என்கிற வசைமாறி அதிகமாயிற்று. காடு, கரை ஏதாவது இருந்தால் அடகுவைத்தோ விற்றோ பணம் வாங்கலாம். குடியிருந்த வாடகை வீட்டிலும் 'குடிக்கூலி' கொடுக்க இயலாமல், இருந்த ஒருசில பாத்திரங்களையும் ஜப்திசெய்துவிட்டார்கள். கல்யாணம், எழவு என்று யார் வீட்டிலாவது நடந்தால், கொஞ்சம் சோறு தண்ணி கிடைக்கும். அது இல்லாத நாட்களில் பிச்சையெடுப்பாள். அதற்கும் திறமை, சூது வேண்டாமா? இவளோ கிழவி, மற்றப் பிச்சைக்காரர்களைப்போல 'வாயடி கையடி' அடித்துப் பசியைப்போக்கவும் முடியாதநிலை. கார்த்திகைப்பிறை கண்டதுபோல் என்றைக்காவது கொஞ்சம் கிடைத்தால் வயிற்றைக்கழுவிவிட்டு எங்காவது விழுந்துகிடப்பாள். சென்ற மூன்று நாட்களாக எதுவும் கிடைக்கவில்லை பட்டினி.

யாரையும் ஏமாற்றியோ, பயமுறுத்தியோ பணம், பொருள் எதுவும் சேர்க்கமுடியாது. ஏதாவது திருடினால்? இந்த எண்ணம் கிழவியின் நெஞ்சில் குடிபுகுந்ததும் 'திக்'கென்றது, கொஞ்சநேரத்திற்குள் உணர்ச்சி ஒத்துப்பாட ஆரம்பித்தது. உணர்ச்சி அறிவை ஒரு மூலையில் உட்காரவைத்துவிட்டது. எங்கு திருடுவது? எதைத்திருடுவது? எப்படித் திருடுவது? என்ற கேள்விகள் அடுக்காக அவள்முன் தோன்றின. பெரிய வீடுகளில் உள்ளேகூட நுழையமுடியாதபடி கூர்க்காவோ, நாயோ காவல்காத்து நிற்கும். மேலும் பெரிய பொருளையோ, விலையுயர்ந்த பொருளையோ திருடினால், அவற்றைப்பணமாக மாற்றுவது அவ்வளவு எளிதல்ல. ஆகையால் சிறு பொருளாக, எளிதில் பணமாக்கக்கூடியதாகப்பார்த்து எடுக்கவேண்டும் என முடிவு செய்தாள்.

ஒரு வீட்டின் கொல்லைப்புறம். ஒரு பெண் உட்கார்ந்து பாத்திரங்களைக் கழுவிக்கொண்டிருந்தாள். உள்ளே குழந்தை அழும் ஒலி கேட்டதால் அரைகுறையாகக் கையைக் கழுவிக்கொண்டு எழுந்து உள்ளே சென்றாள் அந்தப் பெண். கிழவி சுற்றுமுற்றும் பார்த்தாள். வயோதிகத்தால் பழுதடைந்த கண்கள், பசியினால் பஞ்சடைந்திருந்தது. யாரும் அவள் கண்களுக்குத் தட்டுப்படவில்லை. முன்பின் பழக்கமில்லாத தொழில். சந்தர்ப்ப வசத்தால் அந்த இழி நிலைக்குத் துரத்தப்பட்ட அவள், கீழே குனிந்து இரண்டு கரண்டி, ஒரு டம்ளர் இவற்றை எடுத்துக்கொண்டு திறந்து கிடந்த கொல்லை வாசல் வழியாக வெளியேறி வேகமாக நடந்தாள்.

பசி! பயம்! இரண்டும் சேர்ந்து மயங்கிய நிலையில் இருந்தாள். கால்கள் பசைபோல் ஒட்டிக்கொண்டன தரையுடன். அவள் மனம் ஓடுகிறது மைல்கணக்கில், கால்கள் ஒத்துழைக்க மறுத்துவிட்டன. 'அருகில் இருந்த மரத்திலிருந்து பறவையொன்று சிறகொலி எழுப்பிப் பின் அடங்கியது. அந்த நிமிட நேரத்திற்குள் அவள் மனதில் ஓராயிரம் எண்ணங்கள் எழுந்து கூத்தாட ஆரம்பித்தன. அவளை இந்த இழி நிலைக்குத் தூண்டிய உணர்ச்சி எங்கோ ஓடி ஒளிந்துகொண்டது. மான உணர்ச்சி தலைதூக்கியது. பசி பறந்துவிட்டது.

எழுபத்திரண்டு ஆண்டுகள், எப்படியோ கழித்துவிட்டாள். எஞ்சியிருப்பது விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில நாட்கள்தான் இருக்கும்! வாழ்வின் முற்பகுதியில் இல்லாத இழிவும் பழியும் அந்திய காலத்தில் ஏன்? என்று நினைத்தாளோ, என்னவோ, கொல்லைப்புறத்தை நோக்கித் திரும்பி நடந்தாள். நல்லகாலம்! வீட்டுக்கார அம்மாள் வரவில்லை. அவள் வருவதற்குள் பாத்திரங்களை வைத்துவிட்டு, வந்த சுவடு தெரியாமல் திரும்பி விடலாம் என நினைத்தாள். மடியில் மறைத்து வைத்திருந்த டம்ளரைக் கீழே வைத்தாள். கைநடுங்கி பதட்டத்தில் மற்றொரு வெண்கலப் பாத்திரத்தில் மோதி

'கணீல்' என்ற ஒலி எழும்பியது. உள்ளிருந்த அம்மாள் குழந்தையைத் தூக்கிக்கொண்டு வெளியே வந்தாள். கையில் கரண்டியுடன் கிழவி நின்றுகொண்டிருந்ததைப் பார்த்ததும், 'திருடி, திருடி' என்று கூச்சலிட்டாள். வேலையாளும் அவள் கணவனும் ஓடிவந்து கிழவியைப் பிடித்துக் கைகளைக் கட்டினர்கள்.

"தம்பி! நீ என் மகன் போலப்பா, நான் திருடி இல்லே. என்னைத் தயவுபண்ணி விட்டிடு. உன்னைக் கையெடுத்துக் கும்பிடறேன்."

"திருடி இல்லையா! அடிப்பாவி, கையில் கரண்டி வைச்சிருந்ததை இந்தக் கண்ணுல் பார்த்தேன். திருடலேங்கிறயே!" என்ருள் வீட்டுக்கார அம்மாள்.

"உண்மைதான் அம்மா! மவராசி, நல்லா இருப்பெ. கொஞ்சம் சொல்லு தாயே! பசிக் கொடுமை தாளலெ, பாவம் பண்ண இருந்தேன். ஆனு துணிவுவரல்லெ. நான் எதையும் எடுக்கலெ, எடுத்ததை வைச்சேன். அம்மா, கொஞ்சம் தயவு பண்ணம்மா"

"பொல்லா அரிச்சந்திரன் மவ. திருட்டுக் கழுதை. நான் பார்க்காட்டா, எங்கே போயிருக்குமோ, இந்த சாமான் எல்லாம்; கட்டேல போற வயசிலெ களவு என்ன வேண்டியிருக்கு."

போலீசில் ஒப்படைக்கப்பட்டாள் கிழவி. ஜெயிலில் வைத்து அவள்மேல் வழக்குத் தொடுத்தார்கள். வழக்கு விசாரணைககு வந்தது. கிழவிகையில் காசு இல்லை. அதனல் அவளுக்காக எந்த வக்கீலும் வாதாட முன்வரவில்லை. விசாரணையின்போது கிழவியைக் குறுக்குக்கேள்விகள் கேட்பதில் சர்க்கார் தரப்பு வக்கீல் தம் திறமை முழுவதும்காட்டி அடுக்கடுக்கான கேள்விகளை அம்புபோல் தொடுத்தார். கிழவி; தான் திருடவில்லை என்பதைத்திரும்பத் திரும்பச்சொன்னுள். கடைசியாக "கையில் கரண்டியுடன் அவர்கள் வீட்டுக்கொல்லையில் நீ நின்ருய் அல்லவா?" என்ருர் சர்க்கார் வக்கீல். 'ஆம்' என்ருள் கிழவி. சர்க்கார் தரப்பு வக்கீல் பேச ஆரம்பித்தார்.

"கனம் நீதிபதி அவர்களே! கையில் கரண்டியுடன் என் கட்சிக்காரர் வீட்டுக்கொல்லையில் நின்றதாகக் கைதியே ஒப்புக்கொள்ளுகிருள். கரண்டியோ, பிறருடையது. அந்த வீட்டிற்கு அதுவும் கொல்லைப்புறத்தில், அந்த நேரத்தில் இந்தக்கிழவி வருவதற்கு வேறு எந்த விதக்காரணமும் இவளால் காட்டப்படவில்லை, முடியாத காரணத்தால். முன்பின் பழக்கமில்லாதவள். ஏழை. பசியால் வாடுகிருள். திருடுவதற்கல்லாமல் வேறு எதற்கும் அந்த வேளையில் அங்கு நின்றிருக்கமுடியாது. "முதலில் எடுத்தேன், மனச்சான்று தடுத்தது, அதனுல் திரும்ப வைக்கவந்தநேரத்தில் 'திருடி' என்று பிடித்துக்கொண்டார்கள்" என்கிருள் கிழவி. வேடிக்கையான கதையாக இருக்கிறது இவள் வாக்குமூலம். கிழவி, சாதாரணக் கிழவி அல்ல, பலே கைக்காரக் கிழவி! திருடினுளாம், மனச்சான்று தடுத்ததாம், திருமப வைத்துவிட்டாளாம்! திருடுவது, பிடிபட்டுக்கொண்டால் 'திருடவில்லை, மனச்சான்று தடுத்தது, திரும்ப வைத்தேன்' என்று கதறுவது!

திருடியபின் இவர்களைத்தீண்டும் 'மனச்சான்று' திருடுவதற்குமுன் எங்குப்போயிற்ரே தெரியவில்லை. இம்மாதிரி ஆசாமிகளை விட்டுவைத்தால் சமூகத்திற்குக்கேடு பல விளையும். கைதிக்குத் தக்க தண்டனை அளித்து, இதுபோன்று திருடுவோர் கூட்டத்தை, சமூகத்தில் பரவவிடாமல் தடுக்க வேண்டும் என்று கனம் நீதிபதி அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்."

பையிலிருந்த கைக்குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்துக்கொண்டு ஆசனத்தில் அமர்ந்தார், சர்க்கார் தரப்பு வக்கீல். சர்க்காருக்கும் சமூகத்திற்கும் நல்லதொரு தொண்டுசெய்த திருப்தி அவர்முகத்தில் தோன்றியது.

தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது. வழக்கு மன்றத்தில் பேசப்பட்ட பேச்சுக்கள் கைதிக் கூண்டில் கிழவி நிற்கும்பொழுது சுற்றியிருந்தவர்கள் அவளையே பார்த்த பார்வை ஆகிய இந்தக் காட்சிகள் அடிக்கடி கிழவியின் கண் முன் தோன்றிக்கொண்டிருந்தன.

தீர்ப்புச்சொல்லவேண்டிய நாள் நெருங்கியது. கிழவியின் முடிவுகூட நெருங்கிக் கொண்டுதான் இருந்தது. துக்கம், அவமானம் இரண்டும் சேர்ந்து பழுத்த அவள் உடலைக் செல்லரித்துவிட்டன. இன்றே, நாளையோ இறந்துவிடுவாள். இருந்தாலும், செய்த குற்றத்திற்குத் தண்டனையேற்காமல் போக அவள்மனம் விரும்பவில்லை!

தீர்ப்புநாள். நீதிபதி சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டே தீர்ப்பை வேகமாகச்சொன்னர். "குற்றம் செய்ததாகக் கூறப்படுபவள், வாழ்வின் கடைசிப்பகுதியில் இன்றே, நாளையோ என இருக்கும் கிழவி. ஏழைதான், என்றாலும்

இதற்குமுன் அவள் திருடியதாகவோ அல்லது வேறு குற்றம் எதுவும் செய்ததாகவோ தெரியவில்லை. மேலும், குற்றம் செய்ததாகக் கூறப்படுபவர் தான் செய்த தவறுக்காக மிகவும் வருந்துகிருர். பொதுவாகக் குற்றவாளிகளிடம் இரக்கம் காட்டக்கூடாது என்ருலும் இது முதன் முறையாக இருப்பதாலும், குற்றம் செய்ததாகக்கூறப்படுபவரின் வயது எழுபதுக்குமேல் இருப்பதாலும் இந்தக் கைதியை விடுதலை செய்கிறேன்.''

கிழவி, விடுதலை செய்யப்பட்டாள்! முதலில் விடுதலைக்காகக் கெஞ்சினள்—கிடைக்கவில்லை; அவள் வேண்டியபொழுது கிடைத்திருந்தால் 'திருடி' என்ற பழிச்சொல் வந்திருக்காது. ஊரறியத் 'திருடி' என்று பறைசாற்றிப்பின் பலரறிய வழக்கு மன்றத்தில் விசாரித்த பிறகு இன்று விடுதலை செய்துவிட்டார்கள். இனி, அந்த ஊரில் கிழவி எங்கும் சென்று எதுவும் கேட்டுப் பெறமுடியாது. சிறுவர்கள் முதல் பெரியவர்கள்வரை அவளைப் பார்க்கும் பொழுது சந்தேகத்துடன் பார்ப்பார்கள். 'திருடி' என்று 'குசுகுசு'வென்று மக்கள் பேசுவார்கள். அந்தக் காட்சியை நினைத்தாள், அவள் நெஞ்சு துணுக்குற்றது. 'திருடி' என்ற சொல் உரத்த குரலில் அவள் காதுகளில் ஒலித்துக்கொண்டிருந்தது.

நீதிமன்றத்தின் படிக்கட்டுகளில் இறங்கினுள், சர்...யாரோ தின்றுவிட்டு எறிந்த வாழைப்பழத்தோல்! வழுக்கிய கிழவி விழுந்தாள்! வாழ்விலிருந்தே விழுந்துவிட்டாள்! நீதிபதி அளித்த விடுதலை கிழவியை ஜெயிலினின்றுமட்டும் விடுவித்தது! வீசியெறியப்பட்ட பழத்தோல் அளித்த விடுதலை—கிழவியை இந்த உலகிலிருந்தே விடுவித்தது!

(தினப்பத்திரிக்கை யொன்றில்வந்த 'கிழவி திருடினுள்' என்ற செய்தியை நடுவாகக்கொண்டு தீட்டப்பெற்றது.)

★

புத்தரைப்பற்றி...

கடவுள் என்ற ஒன்று கோபாவேசம் கொள்ளும் என்றும், செய்த தவறுகளுக்காகப் பச்சாத்தாபப்படும் என்றும், பூலோக மன்னர்களைப்போல் அதையும் ஆசைகாட்டித் திருப்தி செய்யலாம் அல்லது லஞ்சம் கொடுத்து அதன் ஆதரவைத் தேடலாம் என்றும், அதற்கு வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்ற வித்தியாசமுண்டு என்றும் கூறப்பட்ட கருத்துக்களையெல்லாம் அவர் நிராகரிக்கத்தான் செய்தார். கடவுள் என்ற அந்த ஒரு பொருளைத் திருப்தி செய்வதற்கு அது-அதுவே படைத்து உயிர் கொடுத்த-உயிர்ப் பிராணிகளின் குருதியைப் பலியாகக் கோரியது என்ற கொள்கை அவருக்கு அடங்காத ஆத்திரத்தை உண்டு பண்ணத்தான் செய்தது; அவர் அதை முழு மூச்சோடு எதிர்க்கத்தான் செய்தார்.

இந்தியாவுக்கு புத்தர் விளக்கிக்காட்டிய ஓர் உண்மை இது. நிரபராதிகளான உயிர்ப்பிராணிகளைப் பலியிடுவதன்மூலம் திருப்திசெய்யக்கூடிய ஒரு கடவுள் உண்மைக் கடவுளாக இருக்கவே முடியாது. இதற்கு மாருக, கடவுளைத் திருப்தி செய்விக்கலாம் என்ற கருத்தில் மிருகங்களைப் பலிகொடுப்பவர்கள் இரட்டிப்புக் குற்றம் செய்கிருர்கள் என்று அவர் கருதினர்.

பலிகொடுக்க வேண்டுமென்று நீங்கள் விரும்பினல், உங்களையே பலி கொடுத்துக்கொள்ளுங்கள், உங்கள் மோகத்தைப் பலியிடுங்கள், லெளகீக ஆசைகளைப் பலியிடுங்கள், உலகப் பற்றுக்களைப் பலியிடுங்கள் என்று புத்தர் கூறினர். அது உங்களைப் புனிதப்படுத்துகிற பலியாக இருக்கும்.

—காந்தியார்.

வினாவும் விளக்கமும்

வினா: **பூமியின் ஈர்க்கும் ஆற்றலை எந்தப் புலன் உதவி கொண்டும் நேரடியாகக் காணமுடியா விட்டாலும் அந்த உண்மையை மறுக்க முடியுமா? அதைப்போலவே சூரியன், பூமியுள்படத் தனது கிரகங்களை ஈர்த்துக்கொண்டு இயங்குவதைக் காணமாட்டாமையினாலே மறுத்துவிடலாமா?**

[இது அருள்நெறித்திருக்கூட்டத்தாரின் 15 வது வினா.]

விளக்கம்: "கடவுளைக் கண்ணால் காண முடியவில்லை, எனவே கடவுள் என்று ஒன்று இல்லை" என்று நாம் கூறுவதாக நினைத்துக் கொண்டு அருள்நெறித்திருக் கூட்டத்தார் மேற்கண்ட வினாவை எழுதியிருக்கிறார்கள். நாம் கண்ணால் காணமுடியாததை மட்டுமே அடிப்படையாகக்கொண்டு, மதவாதிகளின் இலக்கணப்படி சொல்லப்படும் 'கடவுளை' இல்லை என்று மறுத்துரைக்க முன்வந்துவிடவில்லை. மதவாதிகளால் கூறப்படும் 'கடவுளை'க் கண்—காது—மூக்கு—வாய் மெய் ஆகிய ஐம்பொறிகளின் அறிவாலும் மட்டுமல்ல, சிந்தித்துப் பார்க்கக்கூடிய ஆறாவது அறிவாகிய பகுத்தறிவாலும் தேடிப்பார்க்கும் பொழுது, அப்படிப்பட்ட இலக்கணமுடைய 'கடவுள்' இல்லை, அது மதவாதிகளின் கற்பனை என்ற முடிவுக்குத்தான் நாம் வர வேண்டியவர்களாக இருக்கிறோம். எனவே தான், பொதுவாக மதவாதிகளாலே கூறப்படும் 'கடவுளை' மறுத்துரைக்கிறோம்.

பூமியின் ஈர்க்கும் ஆற்றலை எந்தப்புலன் உதவிகொண்டும் நம்மால் நேரடியாகக் காண முடியாவிட்டாலும், பகுத்தறிவால்—சிந்தனையறிவால்—ஆராய்ச்சியறிவால் அதன் உண்மையை அறிந்துகொள்ள முடிகிறது; யாரும் சோதனைகள் நடத்தி அதன் உண்மையைப் புரிந்துகொள்ள முடிகிறது. யாரும் திட்டவட்டமான மறுப்புரையைக்கூறி அதன் உண்மையை மறுத்துவிட முடியவில்லை. அதுபோலவே கதிரவன் உலகம் உள்படத் தனது கோள்களை ஈர்த்துக்கொண்டு இயங்குவதை ஐம்புலனறிவாலும் காணமுடியாவிட்டாலும், ஆறாவது அறிவாகிய பகுத்தறிவாராய்ச்சியால் கண்டறிந்துகொள்ள முடிகிறது அந்த உண்மையை மறுத்துரைக்கும் காரணம் எதுவும், யாராலும் வைக்கப்பட முடியவில்லை. ஐம்புலனறிவால் காணமுடியா விட்டாலும், ஆறாவது அறிவாகிய பகுத்தறிவால் கண்டுகொள்ள முடிகிறது என்ற காரணத்தால்தான், உலகின் ஈர்க்கும் ஆற்றலையும், கதிரவன் தனது கோள்களை ஈர்த்துக் கொண்டு இயங்கும் ஆற்றலையும் நாம் உண்மையானவை என ஏற்றுக்கொள்கிறோம்.

மதவாதிகளால் உரைக்கப்படும் 'கடவுள்' ஐம்புலனறிவுக்கும் ஒத்துவரவில்லை, ஆறாவது அறிவாகிய பகுத்தறிவுக்கும் ஒத்துவரவில்லை. எனவேதான் அதன் உண்மையைப்பற்றி ஐயுறவு கொள்ளவேண்டியிருக்கிறது.

மனம், மொழி, மெய் ஆகியவற்றைக்கடந்து நிற்பதும், நமது ஆறறிவால் இத்தன்மையது என்று தெரிந்துகொள்ள முடியாதபடி இருப்பதும், அண்டத்தின் அமைப்பைப்பொறுத்தும், அண்டத்தின் நிகழ்ச்சிகளைப் பொறுத்தும் அமைந்துள்ள காரணங்களைத் தொடர்ந்து துருவி ஆராய்ந்தறிந்து கொண்டு போகும்போது நம்மால் விளங்கிக்கொள்ள இயலாதவகையில் இருப்பதும் ஆன ஆற்றலைக் (அது ஒன்றோ அல்லது பலவோ) கடவுள் என்று அழைக்கிறார்கள் என்றால், அந்தக்கடவுளை நாம் மறுத்துரைக்க முற்படவில்லை.

காரியத்திற்குக்காரணம் இருக்கவேண்டும் என்ற முறையில் அண்டத்திலிருக்கும் பொருள்களைப்பற்றியும், அண்டத்தில் நிகழும் நிகழ்ச்சிகளைப்பற்றியும் ஆராய்ந்துகொண்டே போனால், நாம் விளங்கிக்கொள்ள முடியாத வகையில், அடிப்படை ஆற்றல் (அது ஒன்றோ அல்லது பலவோ; இன்றை நிலையில் அறிந்துகொள்ள முடியவில்லை.) இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வரவேண்டியவர்களாகிறோம். அப்படி நமது மனம், மொழி, மெய் ஆகியவற்றைக் கடந்துநிற்கும் அந்த ஆற்றலைக் கட+உள்=கடவுள் என்று அழைக்கலாம், அந்த ஆற்றலுக்குப்பெயர் 'கடவுள்' என்று சொல்லப்படுமேயானால்,

அந்தக்கடவுள் இல்லை என்று நாம் கூறவில்லை.

கடவுள் என்பதை அடிப்படை ஆற்றல் என்றுதான் நாம் கொள்ளுகிறோமே ஒழிய, மனிதனைப்போல் அறியும் அறிவோ, உணரும் உள்ளமோ (Mind) அதற்கு உண்டு என்று நாம் கொள்வதில்லை. இந்த வகையில் தான் நாம் மதவாதிகளினின்றும் மாறுபடுகிறோம். மதவாதிகள் கடவுளைப்பற்றிச் சொல்லும்போது, அதற்கு உள்ளம் உண்டு என்றும், தான் விரும்பியவாறு தன் அறிவையும் ஆற்றலையும் செலுத்தும் பண்புடையது என்றும், மக்களையும், உயிரினங்களையும்தான் விரும்பியவண்ணம் படைக்கின்றது என்றும், மக்களிடமிருந்து வாழ்த்துக்களையும், வணக்கங்களையும், வழிபாடுகளையும் எதிர்பார்க்கின்றது என்றும், குற்றஞ் செய்வோரைத் தண்டிக்கிறது என்றும், அவர்கள் தம்மை மன்னிக்கும்படி அதனிடம் கேட்டுக்கொண்டால் அது அவர்களை மன்னிக்கிறது என்றும், மக்கள் அதற்குக் காணிக்கை செலுத்தி வரம் கேட்டு நின்றால், அவர்கள் வேண்டியவரத்தை அவர்களுக்கு அளிக்கிறது என்றும், தன்னை யாரேனும் வணங்காமல் வழிபடாமல், வாழ்த்தாமல், தனக்குக் காணிக்கைச் செலுத்தாமல் இருந்தால் அவர்களை அது தண்டிக்கிறது என்றும், அது வேதங்களை இயற்றுகிறது என்றும், அவதாரம் எடுக்கிறது என்றும், தூதுவர்களை உலகிற்கு அனுப்புகிறது என்றும், எல்லாம் வல்லது—எங்கும் நிறைந்தது—எல்லாம் உணர்ந்தது என்றும் பல்வேறு தன்மையுடையதாகக் கூறுவார். இப்படிப்பட்ட தன்மைகள் அந்தக் 'கடவுளு'க்கு உள்ளபடியே உண்டா என்று நாம் ஆராய்ந்து பார்க்கும்போது, இந்தத் தன்மைகள் அதற்கு இருப்பதாகத் தெரியவில்லை. எனவேதான் 'கடவுள்' என்பது ஆற்றலே ஒழிய, உள்ளம் படைத்த—அறிவுபடைத்த ஒன்று அல்ல என்கிறோம். 'கடவுள்' என்னும் அடிப்படை ஆற்றல், உள்ளது சிறத்தல் என்னும் இயற்கை முறையில் வளர்ந்து, அதன் கூறுபாடுகள் உயிருள்ள பொருள்களாக மாறும்போது அறியும் தன்மைப் பெறுகின்றன. அந்த உயிர்ப் பொருள்களே மேலும் சிறந்து வளரும்போது மிகவான அறிவையும், உள்ளத்தையும் பெறுகின்றன. மிக்க அறிவையும், மிக்க உள்ளத்தையும் பெற்றுள்ள உயிரினம் மக்களினமேயாகும். 'கடவுள் என்னும் அடிப்படை ஆற்றலையும், அதிலிருந்து வளர்ந்து நிற்கும் அண்ட அமைப்புக்களையும், நிகழ்ச்சிகளையும் பொதுவாக இயற்கை என்று பெயரிட்டு அழைக்கலாம். அந்த இயற்கையில் ஆறறிவோடு—மிகவாக உணரும் உள்ளத்தோடு வளர்ந்திருக்கும் கூறுபாடு மனித இனமேயாகும். ஆற்றலிலும், பிறதன்மைகளிலும் மனிதனைவிட மிகச் சிறந்த கூறுபாடுகள் இயற்கையில் எவ்வளவோ இருக்கின்றன. ஆனால், அறியும் அறிவிலும், உணரும் உள்ளத்திலும் மனிதனைவிடச் சிறந்த கூறுபாடு இயற்கையில் வேறு எதுவும் இல்லை. எனவேதான் மனிதனைவிடக் 'கடவுள்' அறிவு படைத்தது—உள்ளம் படைத்தது என்று மதவாதிகள் கூறும் கூற்றைப் பொய்யென்று சொல்லி நாம் மறுத்துரைக்கிறோம்.

தீ, நீராவி, மின் போன்றவைகள் ஒவ்வொரு வித ஆற்றல்களாகும். அவற்றிற்கு சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகியவற்றை அறியும் அறிவோ, சிந்தித்து முடிவுசெய்யும் பகுத்தறிவோ, உணரும் உள்ளமோ எப்படிக் கிடையாவோ, அப்படியேதான் 'கடவுள்' என்ற அடிப்படை ஆற்றலுக்கும் அந்தத் தன்மைகள் கிடையா என்கிறோம்.

ஆகவேதான், 'கடவுள்' என்பது நாம் அறிந்துகொள்ள முடியாத இயல்பான அடிப்படை ஆற்றல்; தானாக அறியும் ஐம்புலனறிவோ, ஆராயும் பகுத்தறிவோ, உணரும் உள்ளமோ, இயற்கைவிதியை மீறித் தானாக விரும்பிச் செயலாற்றும் தன்மையோ அதனிடம் கிடையாது என்று நாம் கூறுகிறோம்.

உலகின் ஈர்க்கும் ஆற்றலையும், கதிரவன் தன் கோள்களை ஈர்த்துக்கொண்டு இயங்குவதையும் சோதனைகளால் தக்க காரண காரிய விளக்கங்களோடு விளக்கிக் காட்ட முடியும்; ஆனால் மதவாதிகளால், கடவுளின் தன்மைகளை மறுப்புக்கு இடமில்லாதவகையில் விளக்கிக்காட்ட முடிவதில்லை; நம்பத்தான் சொல்ல முடிகிறது. யாரும் ஆராய்ந்து தெளிவடையக் கூடிய தக்க ஆதாரங்கள் காட்டப்படுவதால் நாம் அறிவியல் கருத்துக்களை ஏற்றுக்கொள்கிறோம்; ஆனால் மதவாதிகள் கூறும் 'கடவுளி'ன் அறிவு — செயல் — உள்ளம்பற்றிய தன்மைகளுக்கு அத்தகைய ஆதாரங்கள் மறுப்புக்கு இடமில்லாதவகையில் காட்டப்படாத காரணத்தால், நாம் அவைகளை ஏற்றுக்கொள்ள மறுக்கிறோம் என்பதை அருள்நெறித் திருக்கூட்டத்தார் உணர்வார்களாக!

வினா: "மாநாட்டுப் பிரதிநிதிகளில் சிலர் காலில் செருப்பு போட்டுக்கொண்டு ஒரு கோயிலுக்குச் சென்றனராம். அவர்கள் தம் செருப்புகளைத்

தலையில் மாட்டிக்கொள்கிறார்களா, காலிலா என்பதுபற்றி எனக்கு அக்கறையில்லை. அவர்கள் பொறுப்பற்ற ஒரு கும்பலே. பொறுப்பற்றவர்கள் என்று நான் குறிப்பிட்டுச்சொல்வது ஏனென்றால், பொறுப்புள்ளவர்களாக இருந்தால் செருப்பைப் போட்டுக்கொண்டு கோயிலுக்குள் போயிருப்பார்களா?'' என்று சென்னை முதலமைச்சர் காமராசர் திருச்சியில் பேசியுள்ளாரே அது பற்றிய கருத்து என்ன?

விளக்கம்: அடுத்துவரும் பொதுத்தேர்தலின்போது, தி. மு. கழகத்தைப்பற்றிக் காங்கிரஸ்காரர்கள் எப்படியெல்லாம் இல்லாததும் பொல்லாததும் புனைந்து, பொய்யும் வழுவும் கலந்து தூற்றித்திரிவார்கள் என்பதற்குத் தோழர் காமராசரின் திருச்சிப் பேச்சு ஒரு எடுத்துக்காட்டாகும்.

"எந்தப்பிள்ளை நல்ல பிள்ளை!'' என்று ஒருவர் ஒரு தகப்பனைக் கேட்டபோது, "கூரைமேல் கொள்ளிக்கட்டையைப் பிடித்திருப்பவனே நல்ல பிள்ளை!'' என்று தகப்பன் விடையிறுத்தானும் என்று ஒரு பழமொழி நாட்டில் வழங்குவதுண்டு. கூரைமேல் கொள்ளிக்கட்டையை ஏந்தி நிற்கும் பிள்ளைதான் நல்லபிள்ளை என்றால், மற்ற பிள்ளைகளின் தன்மை எப்படியிருக்கும் என்பதை நாமே ஊகித்துக்கொள்ளலாம். அதுபோல பொறுப்புள்ள பதவியிலிருக்கும் தோழர் காமராசரின் கூற்றே பொய்யும் வழுவும் கலந்து இவ்வளவு இழிதன்மை கொண்டதாக இருக்கிறது என்றால், பொதுத்தேர்தலின்போது பிற காங்கிரசுக்காரர்களின் பிரச்சாரம் இன்னும் எவ்வளவு இழிதன்மையுடையதாக இருக்கும் என்பதை இப்பொழுதே நாம் ஒருவாறு ஊகித்து உணர்ந்துகொள்ளலாம்.

"நாயின்மீது நீ கல்லைப்போடவேண்டும் என்று எண்ணினால், அது வெறிபிடித்தது என்று சொல்லிவிட்டுப்போடு'' என்னும் கருத்துக்கிணங்க ஆங்கிலப் பழமொழி ஒன்றுண்டு. அதற்கிணங்கவே தோழர் காமராசர் தி. மு. கழகத்தின்மீது மக்களுக்கு இப்பொழுதிருந்தே வெறுப்பு ஏற்படவேண்டும் என்று கருதி, "நாய் வெறிபிடித்தது'' என்று வீணான பொய்யைச்சொல்லிக் கல்லை வீசுவதைப்போல, "தி. மு. க, மாநாட்டுப் பிரதிநிதிகளில் பலர் காலில் செருப்பைப் போட்டுக்கொண்டு ஒரு கோயிலுக்குள் சென்றனர்'' என்று வீணான பொய்யைச் சொல்லி தி. மு. கழகத்தைத்தாக்க முற்பட்டுள்ளார்.

தோழர் காமராசரின் கூற்று எவ்வளவு பொய் நிரம்பியது என்பது அவர் கூறியதிலிருந்தே இனிது விளங்கும். திருச்சி நகரம் மக்கள் நடமாட்டமேயில்லாத வெறும் பொட்டல் காடு அல்ல; அங்குள்ள கோயில்களும் மக்கள் போக்குவரத்து இல்லாத, காவற்காரர்கள் இல்லாத, போலீசுக்காரர்கள் இல்லாத வெறும் பாழடைந்த சிற்றூர்க் கோயில்கள் அல்ல. எல்லாம் காவற்கட்டுப்பாடு நிறைந்த கோயில்கள்தாம். தி. மு. க. தோழர்கள் காலில் செருப்பைப் போட்டுக்கொண்டு திருச்சிக் கோயிலுக்குள் சென்றதாகச் சொல்லப்படும் செய்தி நாடாளும் காமராசருக்குத் தெரிந்திருக்கிறது! ஆனால் அந்தச்செய்தி கோயிலில் நடமாடும் பக்தகோடிகளுக்கோ, தருமகர்த்தாக்களுக்கோ, போலீசுக்காரர்களுக்கோ, காவற்காரர்களுக்கோ, எப்படித் தெரியாமல் போயிற்று? அந்தச் செய்தி அவர்களுக்கெல்லாம் தெரியாமல்போக வழியுண்டா? அவர்களுக்கெல்லாம் உள்ளபடியே தெரிந்திருந்தால், செருப்பு போட்டுக்கொண்டு சென்ற தோழர்களைத் தடுத்து நிறுத்தவோ, எதிர்த்து விரட்டவோ, கைது செய்யவோ, வழக்குத் தொடுக்கவோ, சிறைக்காவலில் வைக்கவோ முன்வராமல் இருந்திருப்பார்களா? அது பற்றித் தோழர் காமராசர் குறிப்பிடுவதுபோன்ற குற்றம் உள்ளபடியே நடந்திருக்குமேயானால், அதற்கென்றே காத்திருக்கும் பத்திரிக்கைகள் அதனை எவ்வளவு பரபரப்புள்ள செய்தியாகவும், கண்டனத்திற்குரிய செய்தியாகவும் வெளியிட்டிருக்கும்? வேறுயாருடைய கவனத்தையும் இழுக்காமல், தோழர் காமராசர் கவனத்தைமட்டும், திருச்சிக்கோயிலில் நடைபெற்றதாக அவரால் சொல்லப்படும் செய்தி, இழுத்திருக்கிறது என்றால், அது எவ்வளவு வெட்ட வெளிச்சமான பொய்க்கூற்று என்பதை நல்லறிவு படைத்தோர் எளிதில் உணர்ந்துகொள்ளலாம்.

காலில் செருப்புப் போட்டுக்கொண்டு கோயிலுக்குப் போவதைத் தி. மு. கழகம் ஒரு திட்டமாகத் தீட்டி வைத்திருப்பதைப்போல் பொது மக்கள் கருதிக்கொள்ள வேண்டும் என்று எண்ணி தோழர் காமராசர் இந்த அதிர்வேட்டைக் கிளப்பியிருக்கிறார். அதிர்வேட்டில் ஓசையிருக்கும் உருவான விளைவு ஏதும் இருக்காது. அதைப்போல் தோழர் காமராசரின் கூற்றில் ஓசையிருக்கிறது, உண்மையான பொருள் ஏதும் இல்லை.

காலில் செருப்புப் போட்டுக்கொண்டு கோயிலுக்குச் சென்று, பக்தர்கள் உள்ளத்தைப் புண்படுத்த வேண்டும் என்பது தி. மு. கழகத்தின் திட்டமாக இருந்திருந்தால் எவ்வளவோ நாட்களாக, எவ்வளவோ ஊர்களில், எவ்வளவோ கோயில்களில், எவ்வளவோ நிகழ்ச்சிகள் நடைபெற்றிருந்திருக்குமே! இழிச்செயலில் இறங்காமல், கருத்துவேற்றுமைக்கு இடமளித்துக் கண்ணியத்தைக் கடைப்பிடித்து வரும் அரசியல் கட்சி ஒன்று உண்டென்றால், அது தி. மு. கழகம் ஆகும் என்பதை எந்த நடுநிலையாளரும் உணர்ந்து கொள்ளலாமே!

“அவர்கள் தம் செருப்புகளைத் தலையில் மாட்டிக் கொள்கிறார்களா? காலிலா? என்பது பற்றி எனக்கு அக்கரையில்லை” என்று தோழர் காமராசர் கூறியுள்ளார். செருப்பைத் தலையில் மாட்டிக்கொள்வது என்பது தோழர் காமராசருக்கு விருப்பமான செயல் போலவும், அதனைத் தி. மு. கழகத்தார் செய்யாததால் வருந்துவது போலவும், அதுபற்றித் தாம் அக்கறை செலுத்த விரும்பாதது போலவும் அவர் குறிப்பிட்டுள்ளார். தி. மு. கழகத்தவர்கள் செருப்பைக் காலில்தான் அணிந்து கொள்வார்களே தவிர, அதனைத் தலையில் மாட்டிக்கொள்ளும் பண்போ, பழக்கமோ அவர்களிடம் கிடையாது. ஆனால் செருப்பைத் தலையில் மாட்டிக்கொள்வது என்ற பழக்கம் தோழர் காமராசரைப் போன்ற பக்த கோடிகளுக்குத்தான் விருப்பமான செயலாக இருந்து வருகிறது, செருப்படித் திருநாளில், பொட்டுக் கட்டிய பெண்கள் செருப்பாலடிக்க அந்த அடிகளைத் தலையிலும், உடம்பிலும் வாங்கிக்கொள்வதிலே தோழர் காமராசரைப் போன்ற பக்தர்கள்தாம் அக்கரை காட்டி வருகின்றனர். பெருமாள் கோயில்களில் செருப்பை (சடகோபத்தை)த் தலையிலே மாட்டிக் கொள்வதிலே தோழர் காமராசர் போன்ற பக்தர்கள்தாம் மகிழ்ச்சி கொள்கிறார்கள். செருப்புகளைத் தலையிலே சுமந்தும், அரியணையில் ஏற்றிவைத்தும் 'பாதுகா பட்டாபிஷேக' விழாவைத் தோழர் காமராசர் போன்ற பக்தர்கள்தாம் அக்கரையுடன் நடத்துகிறார்கள். தோழர் காமராசர் அவரைப்போல் தி.மு. கழகத்தவர்கள் செருப்புகளைத் தலையிலே மாட்டிக் கொள்வார்கள் என்று எதிர்பார்த்திருக்கிறார். அப்படிக் கழகத்தவர்கள் மாட்டிக் கொள்ளாமலிருப்பது அவருக்கு ஆத்திரத்தைத் தந்தாலும். அதுபற்றி அக்கரைப்படவில்லை என்று சொல்லிக்கொள்கிறார். அவர் அக்கரைப்படவேண்டும் என்பதற்காகக் கழகத்தவர்கள் அவரைப்போல் செருப்பைத் தலையிலா மாட்டிக்கொள்ள முடியும்? கழகத்தவர்களும் அப்படி மாட்டிக்கொள்ள வேண்டாம்; அவரும் நம்மைப்பற்றி அக்கரைப்பட வேண்டியதில்லை.

தி. மு. கழகத்தவர்கள் பொறுப்பற்றவர்கள், அவர்கள் பொறுப்பற்ற செயலைச் செய்தார்கள் என்று இல்லாததைப் புனைந்து தோழர் காமராசர் கூறுகிறார். உள்ளபடியே தோழர் காமராசர்தான் பொறுப்பற்றுப் பேசுகிறார். ஏதேதோ உளறிக் கொட்டுகிறார்—தி. மு. கழகம் மிகப் பொறுப்புணர்ச்சியோடு நடந்துகொள்ளும் காரணத்தால்தான், மாற்றாரின் இழிச்செயல்கள், பழிச்சொற்கள், வசைமாரிகள், **தூற்றல்கள், தாக்கல்கள், எதிர்ப்புக்கள்**, ஏளனக்குறிப்புக்கள் ஆகியவற்றிற்கிடையே அது நாளுக்குநாள் வளர்ந்தோங்கிச் செழித்துவரும் கட்சியாக இருந்து வருகிறது. பொறுப்பற்ற பேச்சையும் போக்கையும் முழுக்கமுழுக்கத் தமக்கே உரிமையாக்கிக் கொண்டிருப்பவர்கள் தோழர் காமராசர் போன்ற காங்கிரசுக்காரர்கள்தாம் என்று கூறினால் அது மிகைபடக் கூறுவதாகாது.

* * *

வினா: **திராவிட முன்னேற்றக் கழகம் பொது தேர்தலில் போட்டியிட முடிவு செய்திருப்பதற்குக் காரணம் பதவியைப் பிடிப்பதற்குத்தானே?**

விளக்கம்: அல்ல; அல்லவே அல்ல! தானே நேரடியாக நின்று நிறைவேற்ற வேண்டிய அரசியல் கட்சியின் சனநாயகக் கடமைகளிலே ஒன்று என்று கருதித்தான் தி. மு. கழகம் பொதுத் தேர்தலில் போட்டியிடுவது என்று முடிவு செய்துள்ளது.

ஒரு கட்சி தன்னுடைய அரசியல்—பொருளாதார சமூகக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்குப் பிரச்சாரம் செய்வதுமட்டும் போதுமான கருவியாக இருப்பதில்லை. வலுவான பிரச்சாரத்தோடு, சட்டத்தின் மூலம் நடைமுறைக்குக் கொண்டு வருவது என்ற கருவியும் இன்றியமையாததாகத் தேவைப்படுவதாகும். அதற்குச் சட்டமியற்றும் ஆட்சியுரிமை அந்தக் கட்சிக்குக் கிடைக்கப்பெறல் வேண்டும்.

ஒரு கட்சி பொதுவாக இரண்டு முறைகள் மூலந்தான் ஆட்சியுரிமையைக் கைப்பற்ற முடியும். ஒன்று வன்முறையான பலாத்கார முறையாக ஆட்சியைக் கைப்பற்றுவது; மற்றொன்று சனநாயக முறையால் ஆட்சியைக் கைப்பற்றுவது. திராவிட முன்னேற்றக

கழகத்தைப் பொறுத்தவரையில் அது வன் முறையை எப்பொழுதும் ஆதரித்ததில்லை; அந்த முறையில் நம்பிக்கையும் கொள்ள வில்லை. தி. மு. கழகம் சனநாயக முறையில் தான் என்றென்றும் நம்பிக்கை வைத்து வருகிறது.

ஒரு கட்சி ஜனநாயக அடிப்படையில் ஆட்சி யில் பங்கு கொள்ளும் முறையை மூன்று வகைப்படுத்தலாம்: (1) தானே பெரும்பான் மைக் கட்சியாக விளங்கி ஆட்சியை ஏற்று நடத்துவது. (2) சிறுபான்மைக் கட்சியாக இருந்து ஆட்சியில் எதிர்க்கட்சியாக விளங்கு வது (3) தானே நேரடியாக ஆட்சியில் பங்கு கொள்ளாது, தனது கொள்கைக்கும் கோட் பாட்டிற்கும் ஓரளவுக்காவது ஒத்துவரக்கூடிய தனது நம்பிக்கைக்கு ஆதரவான, தனது குறைந்த அளவுக்கொள்கைத் திட்டங்களை ஒப்புக் கொள்ளுகிற பிரதிநிதிகளை அல்லது கட்சியை அனுப்பி வைப்பது. இன்றைக் குள்ள சூழ்நிலையில் பெரும்பான்மைக்கட்சி யாக விளங்கி ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்தும் வாய்ப்புத் தனக்கு ஏற்படும் என்று தி. மு. கழகம் நாணயமாகக் கருதுவதால் முதல் முறையைப் பின்பற்றவில்லை. தி. மு. கழகத்தார் எப்படிப்பட்ட நிலை ஏற்பட்டாலும் பதவி அறவே வேண்டாம், அது வேப்பங் காய்போல் கசக்கும் என்று கூறுவதுமில்லை; பதவியே வேண்டும், அதைத் தவிர வேறு எதையும் விரும்புவதில்லை என்று பதவிவெறி பிடித்து அலைவதுமில்லை. தி. மு, கழகத்தார் பதவியைத் தேடி அலைவதுமில்லை; தேடிவரும் பதவியை வீணாக உதறித் தள்ளுவதுமில்லை. இப்பொழுது தி. மு. கழகம் பொது தேர்தலில் போட்டியிட முன்வந்திருப்பது, பதவியைப் பிடிக்கும் எண்ணத்திலோ, ஆட்சிப் பொறு ப்பை ஏற்று நடத்தும் எண்ணத்திலோ அல்ல. சென்ற பொதுத்தேர்தலில் கழகம் மூன்றாவது முறையைக் கடைப்பிடித்தது. ஆனால் பிற்பாடு ஏற்பட்ட விளைவுகள் அந்த முறையைமட்டுமே கழகம் நம்பி யிருக்கக் கூடாது என்பதை விளக்கின. கழகம் யார் யாரை நேர்மையாக நடப்பார்கள் என்று நம்பி சட்ட மன்றத்திற்கும் பாராளுமன்றத் திற்கும் அனுப்பிவைத்ததோ, அவர்களில் பெரும்பாலோர் கொள்கைகளைக் காற்றிலே பறக்கவிட்டும், சொன்ன சொற்படி நடவாம லும், கட்சிவிட்டு கட்சிக்குத் துரோகிகளாக மாறியும் நடந்துகொண்டுவிட்டார்கள். அப் படிப்பட்டவர்களை மட்டுமே நம்பி, அவர்களை அனுப்பி வைப்பதை விடக் கூடுமானவரை கழகத்தைச் சார்ந்தவர்களையே நேரடியாகத் தேர்தலில் போட்டியிடச் செய்து, அனுப்பி வைப்பது சாலச்சிறந்த முறையாகும் என்ற எண்ணம் கழகத்தோழர்களிடத்திலும், கழக ஆதரவாளர்களிடத்திலும் இருந்துவந்தது. அந்த எண்ணம் மாநில மாநாட்டில் பெரும் பான்மையான வாக்குச்சீட்டுகளின் மூலம் தெரிவிக்கப்பட்டது. அந்த எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டுதான் தி. மு. கழகம் பொதுத்தேர்தலில் போட்டியிடும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

எதிர்க்கட்சியினராக இருந்து ஆட்சியின் குறறங்களைச் சுட்டிக்காட்டி அதனை நேர்வழிப் படுத்தவும், செய்யவேண்டிய நிறைபாடுகளை வற்புறுத்திக் கூறவும், கழகத்தின் கொள்கை வழித்திட்டங்களுக்கு ஆக்கந்தேடவும், பொது மக்களின் கருத்துக்களையும், விருப்பங்களையும் எடுத்துரைக்கவுமே தி. மு. கழகத்தவர்கள் அடுத்துவரும் பொதுத் தேர்தலில்போட்டி யிட எண்ணியிருக்கிறார்கள். போட்டி எதுவும் இன்றி தான்தோன்றித்தனமாக யாரையும் சட்ட மன்றத்திற்குக் கொண்டுவந்துவிடலாம் என்ற காங்கிரசின் யதேச்சாதிகாரப் போக் கிற்குச் சாவுமணி அடித்து, சனநாயகப் பண்பை நிலைநாட்டவே தி. மு. கழகத்தவர்கள் பொதுத்தேர்லில் போட்டியிடுகிறார்கள். வெற்றி தோல்வியைப்பற்றிக் கவலைப்பட வில்லை; களத்திற்குச்செல்லும் வீரர்கள் அத் தகைய கவலை இல்லாமல்தான் செல்வார்கள். முயற்சி வெற்றிபெற்றால் மகிழ்வார்கள்; இல்லையேல் தொடர்ந்து முயற்சி செய்வார்கள், வெற்றி பெறும்வரையில் முயற்சி செய் வார்கள்.

புதிய வெளியீடுகள்

ஆசிரியர்: இரா. செழியன், எம்.ஏ.

போராட்டம் —(ஓரங்க நாடகங்கள்)

அண்டசராசரம் —(முதற்பகுதி)

(மற்றும் பல நூல்களும் தயாராகிக்கொண்டிருக்கின்றன)

விவரங்கட்கு;

மன்றம் அலுவலகம்: 26, நைனியப்பன் தெரு, சென்னை-1

அண்டசராசரம்

(45)

நாரதர் முதலிய ஒன்பதுபேர்கள் பிரமனுடைய மானசபுத்திரர்கள். அதாவது மனசில் நினைக்கப்பட்டுவந்தவர்கள். அவர்களையல்லாமல் பிரமனுக்கு மற்றும் ஒன்பது புத்திரர்கள் - நவப்பிரசா பதிகளென்று கூறப்படுபவர்கள் இருந்தார்கள். ஆங்கிரசு, அத்திரி, கத்ரு, புலத்தியன், புலகன், பிருகு, மரீசி, வசிட்டன், தக்கன் முதலியோர் நவப்பிரசாபதிகள், ஆவார்கள். இவர்களில் அத்திரி, வசிட்டர் இருவரும் சப்தரிஷிகள் கூட்டத்தில் சேர்ந்தவர்கள், அவர்களைப்பற்றி விரிவாக முதலில் கூறப்பட்டிருக்கிறது. மற்றுமுள்ள பிரமபுத்திரர்களைப் பார்க்கலாம்.

ஆங்கிரசு முனிவர்களில் ஒருவரானார். முனிவரானதும், வழக்கம்போல, மோகமயமானார். பெண்களைத்தேடி மணம்புரித்து கொண்டார். ஒன்றுஇரண்டல்ல, மூன்று மனைவிகள் தேவைப்பட்டது. அதிலும் அவருடைய இரண்டு மனைவிகளும் மணமாவதற்குமுன் மகள்முறைவேண்டும். எப்படியெனில் தக்கன் என்பவனுக்குத் தொண்ணூறு பெண்களிருந்தனர். தக்கன் பிரமபுத்திரர்களில் ஒருவன், ஆங்கிரசுவின் தம்பியர்களில் ஒருவன். அதிகமான - அழகான பெண்கள் தம்பியின் வீட்டில் இருப்பதைக்கண்ட ஆங்கிரசு தனக்கு இருக்கும் ஒரு மனைவி போதாதென்றுகொண்டார். தக்கனும் மறுத்ததாகத் தெரியவில்லை. பெண்களைத் தானஞ்செய்தபடி இருந்தான். ஆங்கிரசுக்கு சுதா, சதி என்ற இரண்டு பெண்கள் கிடைத்தனர். மகள் என்ற முறைபற்றிய கவலை மூன்று இடத்தாருக்கும் - பெரிய தந்தை, தந்தை, பெண்கள் மூவருக்கும் உண்டாகவில்லை. "பெரியப்பா!" என்று அழைத்த பெண்கள் "பிரியபதே!" என்று கூறத்தயங்கவில்லை. வம்சாவிருத்தி வளர்ந்தது. ஆங்கிரசுக்கும் சதிக்கும், அதர்ப ஆங்கிரசுகுலத்தவர்கள் உண்டானார்கள். ஆங்கிரசுக்கும் சுதாவுக்கும் அதர்வண தேவேதிகளின் பிதுர்க்கள் பிறந்தார்கள்.

முற்றுந்துறந்த முனிவராயிருக்கவேண்டிய ஆங்கிரசு, புத்திர உற்பத்தியில் மிகவல்லமையுடையவர் என்று பெயரெடுத்தார்போலும்! ஒருசமயம் இரதிதன் என்ற அரசன் புத்திரப் பேறு இல்லாமல் வருந்தினான். அவன் அருந்தவசியான ஆங்கிரசரை வணங்கி, தன்னுடைய அரண்மனைக்கு அழைத்துச்சென்று, பூசித்து, தனக்குப் புத்திரனில்லாக்குறையை நீக்கும்படி சொன்னான். ஆங்கிரசு முனிவரும் அருள்கூர்ந்து, அரசனின் தேவியிடத்தில் புத்திரன், உண்டாகும்படி செய்தார்! ஆங்கிரசுக்கு அரசதேவியிடம் பிறந்த மகன் இரதீத கேத்தரத்துக்கு ஆரம்பமானான்.

அரசனுக்குப் புத்திரனில்லாவிட்டால், பிராமணர்களை அழைத்து, புத்திரப்பேறு அடைதல் பாரதத்தில் பலவிடங்களில் கூறப்பட்டிருக்கிறது. அரசனுடைய மனைவியர் பிராமணர்களைச் சேர்ந்து, பிள்ளைகள் பெறுவது குற்றமாகவோ, கற்புக்கு இழிவானதாகவோ அந்தக்காலத்துத்தர்ம முறைப்படிக் கருதப்படவில்லை. பாரதத்தில் அம்சவதரணப் பர்வம் என்ற பகுதியில், பரசுராமன் க்ஷத்திரியர்களை அழித்ததும், அரசகுடும்பங்களை பிராமணர்கள் விருத்தி செய்தார்கள் என்பதை நியாயமுறைப்பட்டதாகக் கூறப்பட்டிருக்கிறது. "க்ஷத்ரியப் பெண்கள் புத்திரர்களை வேண்டி பிராமணர்களிடம் சேர்ந்தனர். பிராமணர்கள்

உக்கிரமான நியமத்துடன் ஒவ்வொரு ருது காலத்திலும் அவர்களிடம் சேர்ந்தனர். காமத்தால் சேரவில்லை! ருதுகாலமில்லாதபோதும் சேரவில்லை. அந்தப் பிராமணர்களால் ஆயிரக் கணக்கான க்ஷத்திரியப் பெண்கள் கற்பந்தரித்தனர். அரசரே! அதன்பின் அதிகமன வலியுள்ள புத்திரர்களையும் புத்திரிகளையும் பெற்றனர். இப்படிச் சிறந்த தவமுள்ள பிராமணர்களினால் விருத்தியடைந்த அரசர்கள் தருமமும் தீர்க்காயுளும் பொருந்தி யிருந்தனர். அப்போது நான்கு வருணத்தார்களும் பிராமணர்களையே மேன்மையாகக் கொண்டிருந்தார்கள்.” (பாரதம் — ஆதிபர்வம்—அம்சாவதரண பர்வம்)

இவ்வாறு வேத புராணங்களில் அனுமதிக்கப்பட்ட—புனிதமாகக் கொண்டாடப்பட்ட முறைப்படி, ஆங்கிரசு முனிவர் இரதிதனுக்குப் பின் அவன் அரசை ஆள—புத்திரப்பேறு அளித்தார். சித்திரகேது என்ற அரசனுக்கும் புத்திரப் பேறு உண்டாக, அங்கிரசு முனிவர் யாகம் நடத்தினர்.

புலத்தியர் பிரமபுத்திரர்களில் ஒருவர். இவரும் சிறுவயதாயிருக்கையில் பிரமலோகம் விட்டு, தவஞ்செய்ய வேண்டி, திரணபிந்து என்பவரின் ஆசிரமத்துக்கு வந்தார். அங்கு திரணபிந்துவின் சீடனாகப் பணிசெய்து, தானும் தனியாகத் தவஞ்செய்ய ஒரு குடிலை அமைத்துக் கொண்டார். புலத்தியருக்குத் தவஞ்செய்து வரம்பெற வேண்டுமென்ற ஆவல் இருந்தபோதிலும், அந்தக் காட்டில் நிம்மதியாகத் தவஞ்செய்ய முடியவில்லை. ஏனென்றால், அவர் ஆசிரமத்துக்கு எதிரில் இருந்த சோலையில் அரம்பையர் அடிக்கடி வருவார்கள், ஆடுவார்கள், பாடுவார்கள், நீர் விளையாடுவார்கள்! அத்தகைய விளையாட்டுகளில் கோலாகலமாக இருக்கும் அவர்களைப் பார்த்ததும், புலத்தியரின் மனம் தவத்திற் செல்வதில்லை. எதிரில் பெண்கள் நடமாடினால் தனது தவம் கெடுகிறது என்பதை உணர்ந்த புலத்தியர், பெண்களை அந்தக் காட்டிற்குள் வரக்கூடாதெனத் தடை செய்தார். பெண்கள் வருவது குறையவில்லை. தனிமையில் அவர்கள் நீராடுவது, நீராடிய கோலத்தில் நடமாடுவது, புலத்தியரின் ஐம்புலன்களுக்கு மயக்கம் தந்தன. இருந்தாலும் தவம் அழிந்துவிடும் என்று கோபங்கொண்ட புலத்தியர் பெண்களை அழைத்து, பெண்கள் யாராவது என்னெதிர் வந்தால், பார்க்கும் பெண்கள் உடனடியாகக் கருப்பந்தாங்குவார்கள் என்று சாபந் தந்தார். புலத்தியரின் சாபத்தைக் கேட்ட பெண்கள் அவர் தவச்சாலையருகே வராமல் இருந்தார்கள்.

புலத்தியருக்குக் குருவான திரணபிந்துவுக்கு ஒரு மகள்—வயதுவந்த மகள் இருந்தாள். அவளுக்குப் புலத்தியரிட்ட சாபம் தெரியாது. அவள் பூக்கொய்து, புலத்தியர் குடிசைக்குள் வந்தாள். புலத்தியர் அவளைப் பார்த்தார். பின்பு அவள் சென்றுவிட்டாள், தன்மீது விழுந்துள்ள சாபத்தை உணராமல்,

கன்னிப்பெண்ணாக இருந்த குருவின் பெண்ணுக்குக் கருப்பமென்றதும் மற்றவர்கள் கூடிப்பேசினார்கள். திரணபிந்துவும் கோபித்தார். தானிட்ட சாபத்தினால் அவள் கர்ப்பமடைந்தாளன்றி வேறுவகையில் விபரீதமெதுவும் நிகழவில்லையென்று புலத்தியர் வாதாடினார். எப்படியோ புலத்தியரால் குருவின் பெண் கர்ப்பமடைந்துள்ளாள் என்பது நிச்சயமானது. புலத்தியர் அவளை மணக்கும் படியாயிற்று.

திரணபிந்துவின் மகளைத்தவிர, மற்றொரு மனைவி புலத்தியருக்கு வந்தாள். அவள் பெயர் ஆவிர்பு. ஆவிர்பு கர்த்தமபிரசாபதி என்பவரின் மகள். கர்த்தமபிரசாபதி யாரென்று கேட்டுவிடாதீர்கள்! கர்த்தமபிரசாபதி பிரமபுத்திரர்களில் ஒருவர். புலத்தியர் பிரமனுடைய காதில் பிறந்தவர், கர்த்தமர் பிரமனுடைய நிழலில் பிறந்தவர். இருவரும் பிரமபுத்திரர்களே! இருந்தாலும் புலத்தியர் கர்த்தமரின் மகளான ஆவிர்புவை மனைவியாகக்கொண்டார்! தம்பி, அவருடைய மாமனாரானன், மகள் முறையிலிருந்தவள் அவருக்கு மனைவியானாள்! பிரமலோகத்தில் இந்த முறைபேதங்களை யாரும் கவனிக்கமாட்டார்கள் போலும், பிரமாவே தன் மகளை மனைவியாக்கியிருக்கிறார். அவருடைய பிள்ளைகளும் தந்தை சென்ற வழியைக் கடைப்பிடித்தனர். ஆங்கிரசும் அவ்வாறு தம்பி மகளை மனைவியாக்கினார், புலத்தியரும் தம்பி மகளை மணந்து கொண்டரார்! மகள்முறை வேண்டியவளை மனைவியாக்கிக் கொள்வதைப் பிரமகுலத்தவர்கள் ஒரு தனிப்பட்ட குலதர்மமாகவே கொண்டனர்போலும்!

புலத்தியர் ஒருசமயம் பிரமலோகம் சென்றிருந்தார். அப்பொழுது அவருக்குத்தாய் முறையான—முதலில் தங்கைமுறையிலிருந்த—சரசுவதி அவரை வாஞ்சையுடன் ஏற்று உபசரிக்கவில்லை. புலத்தியருக்குக் கோபம் வந்து, “என்னை நன்கு உபசரிக்காததால், நீ நதியாகக் கடவாய்!” என்று சரசுவதிக்குச் சாபந்தந்தார்.

“காரணமின்றி எனக்குச்சாபந் தந்தமையால், நீ அரக்கனாகுக!” என்று சரசுவதியும் பதிலுக்குச்சாபம் கொடுத்தாள்.

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேடையில் இருந்த தாய்மார்கள் கூட்டம் ஏறத்தாழ அனுப்பப்பட்டுவிட்டது, இவ்வளவு வேலை வாங்கிய பின் மழையும் நிற்கத் தொடங்கியது. நனைந்த ஆடையுடன் நாங்கள் தலைமை நிலயத்துக்குப் போனோம். அங்கு கூட்டம் அதிகமாக இருந்தது. மழைபெய்தபொழுது பெரும்பாலோர் உடனடியாக அங்குதானே அனுப்பப்பட்டார்கள்! அங்கு இருந்த மரத்தடியில் அண்ணா முதலியவர்கள் உட்கார்ந்திருந்தார்கள்.

மழை தந்த தொல்லை அத்துடன் நிற்கவில்லை, தலைமை நிலயத்தில் தற்காலிகமாகக் கொண்டுவந்து விடப்பட்டக் கூட்டத்தை, மறுபடியும் அவரவர்கள் இடங்களுக்கு அனுப்பும் வேலையில் கார்கள் ஈடுபட்டன. மறுபடியும் ஒரு மூச்சு, கார்கள் வந்து போகத் தொடங்கின. சிறிது சிறிதாக தலைமை நிலயத்திலிருந்த கூட்டம் கலைந்தது.

மணி ஏழு அல்லது எட்டு இருக்கும். மழை நன்றாக விட்டுவிட்டது. நாங்கள் தலைமை நிலயத்தைவிட்டு வெளிவந்து நின்றோம். அப்பொழுது ஒரு கார் வந்தது. கே. ஆர், ராமசாமியின் கார்! நல்ல வேளை, அதில் ஏறி நகரத்துக்குப் போய்விடலாம் என்று காரருகில் போனால்! டிரைவர் நல்லசாமியைக் காணோம். வேறு யாரோ டிரைவர் இருந்தார்.

"டவுனுக்குப் போகுமா?" என்று தயக்கத்துடன் கேட்டேன்.

"போகலாம்!" என்று டிரைவர் சொன்னார். குரலில் மாறுதலிருந்தது. நான் மீண்டும் உற்றுப் பார்த்தேன். டிரைவர் வேறு யாருமில்லை, கே. ஆர். இராமசாமி அவர்கள்தாம்! மழையில் நனைந்து, சட்டை யில்லாமல், ஒரு துண்டைமட்டும் போட்டுக்கொண்டு நடிப்புப் புலவர் "டிரைவராக" இருந்தார். ஆதலால் அடையாளங் கண்டுபிடிக்க முடியவில்லை! டிரைவராக இருப்பது இராமசாமி என்று தெரிந்ததும் ஆச்சரியமாக இருந்தது, மறுகணம் இராமசாமி டிரைவராக இருக்கிறாரே என்றதும் சிறிது அச்சம் உண்டானது.

"உங்களுக்குக் கார் ஓட்டத் தெரியுமா?" என்று நான் கேட்டேன்.

"இதோ! ஓட்டிக்கொண்டுதான் வந்திருக்கிறேன்! இங்கு இன்னும் யாரும் இருக்கிறார்களா?" என்று அவர் கேட்டார்.

அதற்குள் இரண்டு வண்டிக்குள்ள கூட்டம் அவர் வண்டிக்குள் நிறைந்து விட்டது. இரண்டு மூன்று தடவைகள் கே. ஆர். ரா சாமி மக்களைக்கொண்டு போய்விட்டு வந்தார் "டிரைவராக" சினிமாவில் மட்டுமல்ல, உண் மையிலேயே அன்று அவர் இருந்தார்.

இரவு பதினொரு மணியளவில் நானும் என் குழுவினரும் மாநாட்டுப் பந்தலுக்குள் வ தோம்! மழைத்தண்ணீர் நன்றாக மறைந்து விட்டது! பாலைவனம்போலிருந்த அந் இடத்தில் எவ்வளவு மழை பெய்தாலு தாங்கும்போலிருந்தது! திறந்த வெளி நாட அரங்கில் இராசேந்திரனின் "மணிமகுடம் நாடகம் நடைபெற்றுக்கொண்டிருந்தது அந்த நாடகத்தையும், அமைதியாக நாடக பார்த்துக்கொண்டிருந்த கூட்டத்தையும் க னித்தால், மழை பெய்ததாகவோ, மாநா [illegible] தேசன்று. காற்று குளுமையாக அடித்தது. விளக்குகள் எங்கு பிரகாசித்தன. சிற்சில இடங்களில் தண்ணீ கலந்த சேறு இருந்தது. சிறிது நேரத்தில் "மணிமகுடத்தின்" மாட்சியைக் கண்டுவிட்டு வெளியில் வந்தோம்.

மாநாட்டுப் பந்தலுக்கு முன்னிருந்த வாயி கள் ஒளிவிட்டன. கொடிக்கம்பத்திலிருந் கொடி அமைதியாக அசைந்தாடியது. புத் ரின் சிலைமேல் தண்ணீர் ஒளி வீசியது! எவ் வளவு அமைதியாக, அதுவும் அந்த நேரத் தில் எவ்வளவு கனிவுடன் அந்தச்சிலையின் தோற்றம் இருந்தது தெரியுமா? மழை நீ அந்தச் சிலைமீது பெய்து வழிந்தோடிவிட்டது யாரும் துடைக்கவில்லை, ஓரிரு துளிகள் மேலாடைமீது மட்டும் தங்கியிருந்தன! முகத்தி லிருந்த கனிவு, முன்னைவிட அதிக உண வுடன் தெரிந்தது. புத்தரின் சிலைகள்—புத் ரின் அன்புக்கொள்கைகள் எவ்வளவு மழைகளை இடிகளை, புயல்களைத்தாங்கிக் கொண்டிருந் திருக்கின்றன, இந்த நாட்டில்!

(அடுத்த இதழில் முடியும்)

அட்டைப் படம்

திராவிட முன்னேற்றக் கழக இரண்ட வது மாநில மாநாட்டில் தேர்தல் பற்றி வாக்கெடுப்பில் பெண்களும் கலந்து கொண் டனர்.

பண்பாளர் பாண்டியன்

திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு, ஈடுசெய்ய முடியாதபடி ஏற்பட்ட பெரும் இழப்புகளிலே, பாண்டிய மண்டல மாவீரர் தோழர் பு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள் மறைந்ததால் ஏற்பட்ட இழப்பு குறிப்பிடத்தக்க பெரியதொரு இழப்பாகும்.

அன்பு, அருள், அறிவு, ஆற்றல், ஈகை, இரக்கம், ஊக்கம், உணர்ச்சி, உண்மை, உறுதி, கண்ணியம், கடமை, விடாமுயற்சி, விருந்தோம்பல் ஆகியவற்றையெல்லாம் ஒருருவில் காணவேண்டுமானால், அதற்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர் பாண்டியனார் ஆவார்கள். உயர்பண்புகளுக்கெல்லாம் அவர் உறைவிடமாக விளங்கினார்.

பணம் படைத்தோரில் பாண்டியனாரைப்போன்ற பண்பாளர்களைக் காண்பது அரிதிலும் அரிதாகும். அவர் பணக்காரராக விளங்கியபோதிலும் எளியவர்க்கு எளியவராய் விளங்கினார். அவர் கொண்டிருந்த கொள்கை உறுதிப்பாடு மிகவும் பாராட்டத்தக்கதாகும். பகுத்தறிவு இயக்கக் கொள்கைகளைத் தம் வாழ்நாள் முழுவதும் வழுவின்றிக் கடைப்பிடித்து வந்தார். நீதிக்கட்சிக்கு உறுதுணையாக நின்றுவந்தார். திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றம் எடுத்ததற்குப் பிறகு அதனிடத்து மாறா அன்பும், நீங்காப்பற்றும் கொண்டு, அதில் உறுப்பினராகிப் பணி புரிந்துவந்தார்.

பிற கட்சிக்காரர்கள் கட்சியின் பேரால் உதவிகோரி அவரிடம் சென்றால், "நான் திராவிட முன்னேற்றக் கழகத்தைச்சேர்ந்தவன். அதற்குப் புறம்பான பிற கட்சிகளுக்கு ஆதரவு தரமாட்டேன். கட்சிச்சார்பற்ற பொது அமைப்புக்களுக்கும், தனிப்பட்டவர்களுக்கும் வேண்டுமானால் உதவி புரிவேன். காங்கிரசுக்கோ அல்லது உங்கள் கட்சிக்கோ உதவிபுரிய மாட்டேன்" என்று அவர் கூறிவிடுவார். ஒருகால் நான் அவர் அருகில் இருந்தபோது, சோசியலிசுட்டுக் கட்சித் தோழர் ஒருவர் வந்து உதவி கேட்டபோது, மேற்கண்டவாறுதான் அந்தத்தோழருக்கு விடைகூறியனுப்பினார்.

கழகத்தைச் சேர்ந்த எவ்வளவோ தோழர்களுக்கு, உண்டி, உடை, உறையுள் பொருள் வசதிகள் செய்துகொடுத்தார். மதுரை மாவட்டத்தில் கழகக் கூட்டங்களில் கலந்துகொள்ளுமாறு அவருக்கு அழைப்புகள் விட்டபோதெல்லாம், அவர் மறுப்பு ஏதும் கூறாமல் அன்புடன் கலந்துகொண்டு அவற்றைச் சிறப்பித்தார். தேனிக்கலவர வழக்கை நடத்துவதற்கும், அதற்கான நிதி திரட்டுவதற்கும் அவர் பெரும் ஒத்துழைப்பு நல்கி, அவற்றில் அக்கரை செலுத்தினார். 1952ஆம் ஆண்டில் பட்டிவீரன் பட்டிக்கு அடுத்த தம் சிற்றூர் ஒன்றில், ரூபாய் ஆயிரத்துக்கு மேற்பட்ட செலவில், கழகப் பிரச்சாரப்பள்ளி ஒன்று வைத்து நான்கு நாட்கள் நடத்த எல்லா வசதிகளையும் ஏற்பாடு செய்துதந்ததோடு, இறுதிவரையில் அருகேயிருந்து ஆதரவு கொடுத்தும் வந்தார்.

அவர் தம் இறுதிக்காலத்தில், அவரோடு கலந்து உரையாடும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டபோதெல்லாம், பாண்டியராசபுரம் சர்க்கரை ஆலையில் தமக்கிருக்கும் நேரடித்தொடர்பு நீங்கியபிறகு, கழகத்தின் ஆக்கவேலைகளில் தீவிரப்பங்கு கொள்ளத் தாம்எண்ணியிருப்பதை வெளியிட அவர் தவறுவதேயில்லை. அப்பொழுது லால்குடியில் நடத்துவதாகத் திட்டமிட்டிருந்த திருச்சி மாவட்ட இரண்டாவது திராவிட முன்னேற்றக்கழக மாநாட்டிற்குத் தலைமைதாங்கவேண்டும் என்று நான் அவரிடம் விரும்பிக்கேட்டபோது, அவர் அதற்கு உவகையோடு இசைவும் தந்திருந்தார். ஆனால் மாநாடு நடத்துவதற்குமுன்பே, நாமெல்லாம் கண்கலங்கித் துக்கத்திலும் துயரத்திலும் ஆழும்படி, எதிர்பாராதவிதமாகத், திடீரென்று, சென்னைப் பொது மருத்துவமனையில் 1953ஆம் ஆண்டில் இயற்கை எய்தினார்கள்.

கழகம் பொதுத்தேர்தலில் பங்குகொண்டு, சனநாயகக் கடமையை நிறைவேற்றவேண்டும் என்பதை அவர் அடிக்கடி வலியுறுத்திவந்தார். நமக்கெல்லாம் துணையாகவும், வழிகாட்டியாகவும் அவர் இப்பொழுதில்லையே என்ற ஏக்கம் நம்மையெல்லாம் வருத்தத்தில் ஆழ்த்துகிறது. பண்பாளர் பாண்டியனாரின் நினைவு நமக்கு ஊக்கமும் உணர்ச்சியும் ஊட்டுவதாகட்டும்.

இரா. நெடுஞ்செழியன்

Regd. M 6296

"மன்றம்"

மலர் - 4. 1955 - 56

24 இதழ்கள் கொண்ட உயர்ந்த காலிகோ பைண்ட் செய்யப்பட்ட மலர்கள்

(இத்துடன் 1956 பொங்கல் சிறப்பிதழும் இணைக்கப்பட்டிருக்கிறது)

விலை ரூ. 8-0-0

(தபாற்செலவு ரூ. 2-0-0)

விற்பனைக் கழிவு இல்லை. முன்பணம் அனுப்புதல் வேண்டும்.

வி. பி. கிடையாது.

(மலேயா தோழர்கள் ஒரு புத்தகத்திற்கு ரூ. 12 வீதம் அனுப்பவேண்டும்)

விபரங்கட்கு:

"மன்றம்"
26, நைனியப்பன் தெரு,
மண்ணடி :: சென்னை-1.

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண்சங்கு சீயக்காய்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம்—ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர்:- வெண்சங்கு சீயக்காய்தூள் தொழிற்சாலை
3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

"மன்றம்" அச்சகத்தில் (26, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை-1)
ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்படு